Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 10 ஞாயிற்றுக்கிழமை (24.06.2012) பக்கங்கள் 20 ஓசை – 267
















# திருமுறிகண்டியில் மீள்குடியமர்வு

(கிளிநொச்சி)

யுத்தத்தின்பின்னர் இதுவரை மீள் குடியேற்றப்படாதிருந்த திருமுறிகண்டி கிராமத்தைச் சேர்ந்த மக்கள் நேற்று மீள் குடியேற்றப்பட்டனர். கடந்த மூன்று வருடங்களாக நலன்புரி நிலையங்களிலும் உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் வசித்து வந்த சுமார் 80 வரையான குடும்பங்கள் நேற்று முதற்கட்டமாக இப்பகுதியில் மீள் குடியேற்றப்பட்டனர்.

இவர்களில் நலன்புரி நிலையங்களில் வாழ்ந்தவந்த 47 குடும்பங்களும் உறவினர், நண்பர்கள் வீடுகளில் வசித்துவந்த 33 குடும்பங்களும் உள்ளடங்குகின்றனர்.

இவர்களுக்கான காணி ஆவணங்களை வழங்கிய அம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ இக்குடும்பங்களுக்கு தற்காலிக குடியிருப்புக்களை அமைப்பதற்காக 94 இலட்சம் ரூபா நிதியினையும் ஒதுக்கீடு செய்து அதற்கான அவணத்தையும் அதிகாரிகளிடம் கையளித்தார். 147 குடும்பங்களை உள்ளடக்கிய திருமுறிகண்டி கிராமத்தில் முதற்கட்டமாக 80 குடும்பங்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்.

நேற்று நண்பகல் 12.30 மணிக்கு சம்பிரதாயபூர்வமாக நடைபெற்ற இம்மீள்குடியேற்ற நிகழ்வில் வணிக கைத்தொழில் அமைச்சர் றிசாட் பதியுதீன் தனியார் போக்குவரத்துத்துறை அமைச்சர் சி.பி.ரட்ணாயக்க, ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார், அம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, வடமாகான ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி, வன்னி மாவட்ட

19 ஆம் பக்கம் பார்க்க

## காணி வழக்கு ஒத்திவைப்பு

(முல்லைத்தீவு)

திருமுறிகண்டி, இந்துபுரம் பொது மக்களின் காணியை இராணுவத்தின் 57 ஆவது படைப்பிரிவிடமிருந்து மீட்பதற்காக கடந்த 2012.03.30 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் பொது மக்களால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்றைய தினம் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

எதிர்த் தரப்பினர் பதில் பத்திரத்தை கோவையிட்டு அணைப்பதற்காக எதிராளிகளின் சட்டத்தரணி பரஞ்சோதி விண்ணப்பித்ததையடுத்து இவ்வழக்கு விசாரணைகள் 20.08.2012 ஆம் திகதிக்கு

19 ஆம் பக்கம் பார்க்க

## மீள்குடியேறிய மக்களை வெளியேற்றியது கடற்படை

(மன்னார்)

மன்னார் மாவட்டம் பேசாலைக்கு அருகில் உள்ள வீட்டுத் திட்டம் ஒன்றில் ஆறு வருடங்களின் பின்னர் மீள்குடியேறியிருந்த குடும்பங்களை அந்தப் பகுதியில் உள்ள கடற்படையினர் நேற்றுமுன்தினமிரவு அங்கிருந்து வெளியேற்றியிருப்பதாக கூறப்படுகின்றது.

ஐம்பது வீட்டுத் திட்டம் என்று அழைக்கப்படும் இந்த வீட்டுத் திட்டத்தில் வசித்து வந்த குடும்பங்களை மன்னார் பிரதேச செயலர் உட்பட அரச அதிகாரிகளே மீள்குடியேறுவதற்கு அனுப்பியிருந்தார்கள்.

ஐம்பது வீட்டுத் திட்டத்தில் இருந்து கொண்டு, பேசாலையில் தொழில் செய்துவிட்டு, வீட்டிற்குத் திரும்பிச் சென்ற ஒரு குடும்பஸ்தரிடமே அங்கிருந்து வெளியேற வேண்டும் என்ற உத்தரவு முதலில் கடற்படைச் சிப்பாய் ஒருவரினால் தெரிவிக்கப்பட்டு, பின்னர் அங்கிருந்தவர்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டதாகப் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.

யுத்த மோதல்கள் காரணமாக ஐம்பது வீட்டுத் திட்டத்தில் இருந்து வெளியேறிய குடும்பங்கள் பேசாலை புகையிரத நிலையத்தை அண்டிய பகுதிகளில் ரயில் பாதையிலேயே கொட்டில்களை அமைத்து குடியிருந்து வந்தனர்.

மதவாச்சி - மன்னார் ரயில்

19 ஆம் பக்கம் பார்க்க

## இந்திய, இலங்கை உறவை சிதைக்க இடமளிக்கக்கூடாது

### ஜனாதிபதி மகிந்த தெரிவிப்பு

(ஜெனீரோ)

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் உள்ள வரலாற்று ரீதியான உறவைச் சிதைப்பதற்கு இடமளிக்கக் கூடாது ஏ்ன்று இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கிடம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிறேசிலில் நடைபெற்ற றியோ பிளஸ் 20 மாநாட்டின் ஒரு பகுதியாக, இந்தியப் பிரதமர் மனமோகன்சிங்கை சந்தித்தபோதே ஜனாதிபதி இவ்வாறு கூறியுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது, நூற்றாண்டுகள் கடந்த இந்திய - இலங்கை சுமூக உறவுகளே

19 ஆம் பக்கம் பார்க்க

## காங்கேசன் சீமெந்து ஆலையில் பித்தளைத் தகடுகள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

உயர்பாதுகாப்பு வலயத்திலுள்ள காங்கேசன்துறை சீமெந்து ஆலையில் இருந்து 24 பித்தளைத் தகடுகள் திருட்டுப் போயுள்ளதாக கே.கே.எஸ். பொலிஸ் பிரிவில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

சுமார் 12 ஆயிரம் ரூபா பெறுமதியான இந்தப் பித்தளைத் தகடுகள் காணாமற் போயிருப்பது சம்பந்தமாக காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் பாதுகாப்பு ஊழியர் இந்த முறைப்பாட்டை கே.கே.எஸ். பொலிஸ் பிரிவில் பதிவு செய்திருப்பதாகத் தெரியவருகின்றது.

கடந்த 12 ஆம் திகதிக்கும் 17 ஆம் திகதிக்கும் இடையில் இவை களவு போயிருக்கின்றன.

நேற்று யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டிலேயே இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது. (பா)

## இலங்கையின் அபிவிருத்திக்கு உதவிகள் வழங்கத் தயார்

### ஈரான் ஜனாதிபதி தெரிவிப்பு



(ஜெனீரோ)

ஈரான் எத்தகைய பிரச்சினைகளை எதிர்கொண்டாலும் இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு தேவையான உதவிகளைச் செய்யும் என அந்நாட்டின் ஜனாதிபதி மொஹமட் அஹமடி நிஜாட் தெரிவித்துள்ளார்.

பிறேசிலின் றியோடி ஜெனீரோ நகரில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் ரியோ - 20 மாநாட்டில் கலந்து கொள்ளச்

19 ஆம் பக்கம் பார்க்க

## கண்ணிவெடி வெடித்ததில் மூன்று பணியாளர் படுகாயம்

### முகமாலையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். முகமாலைப் பகுதியில் கண்ணிவெடியகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்ட வேளை வெடிபொருள் வெடித்ததில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த ஹலோரஸ்ட் மனிதநேய கண்ணிவெடியகற்றும் பெண் பணியாளர் உட்பட மூவர் படுகாயமடைந்தனர்.

நேற்றுக் காலை 7.15 மணியளவில் யுத்தகாலப் பகுதியில் முன்னரங்கப் பகுதியாக விளங்கிய முகமாலைப் பகுதியில் ஹலோரஸ்ட் கண்ணிவெடியகற்றும் பணியாளர்கள் மிதிவெடியகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது அங்கு காணப்பட்ட மண் அரணுக்குக் கீழ்ப்புறமாக குறித்த பணியாளர்கள் மிதிவெடியகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது புதர் மண்டியிருந்த இடத்தினை கண்ணிவெடியகற்றும் உபகர[illegible]ின் உதவியுடன் பரீட்சித்துப் [illegible]போது குறித்த குண்டு

ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதியின் ஆலோசகர் ஹேமகுமார பதவி விலகினார்

(கொழும்பு)

ஜனாதிபதியின் விவசாய அபிவிருத்தி ஆலோசகர் பதவியிலிருந்து முன்னாள் அமைச்சர் கலாநிதி ஹேமகுமார நாணயக்கார இராஜினாமா செய்துள்ளார்.

நாட்டின் விவசாயத்துறை தொடர்பான முட்டாள் தனமான தீர்மானங்கள் பலவற்றை அரசாங்கம் மேற்கொண்டதன் காரணமாகவே தான் இராஜினாமாச் செய்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

நெல் கொள்வனவுக்கான உத்தரவாத விலை 24 ரூபா என உறுதியளிக்கப்பட்டது. இப்போது அது 18 ரூபாவாக குறைக்கப்பட்டமை விவசாயிகளுக்கு கடும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

கொழும்பில் குளிரூட்டப்பட்ட அறையில் இருந்துகொண்டு நான் இதைக் கூறவில்லை. அநுராதரபும், பொலன்னறுவை, மெதிரிகிரிய, கவுடுல்ல, கினித்ம, ஹிங்குராக்தமன உட்பட்ட இடங்களுக்குச் சென்று விவசாயிகளை சந்தித்தேன். இப்பய



ணங்களுக்கு பின்னர் அறிக்கையொன்றை தயாரித்து, பொறுப்பான அனைவரிடமும் சமர்ப்பித்து இப்பிரச்சினையை தீர்க்குமாறு

19 ஆம் பக்கம் பார்க்க

# புத்தெழுச்சி பெறுகின்ற மட்பாண்ட கைத்தொழில்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சங்கானைப் பிரதேசத்தில் இயங்கிவரும் மட்பாண்டக் கைத்தொழில் பயிற்சி நிலையமானது 45 வருடங்களுக்கு மேலாக ஏராளமானவர்களுக்கு பயிற்சிகளை வழங்கியுள் ளதுடன் தற்போதும் தனது சேவையைத் தொடர்ந் தும் செய்து வருகின்றது.

இது தொடர்பாக மட்பாண்டக் கைத்தொழில் பயிற்சி நிலைய பயிற்சி ஆசிரியர் அ.திருச் செல்வம் தெரிவிக்கையில், பாரம்பரிய குடிசைக் கைத்தொழிலை இன்றும் பரைசாற்றும் வகையில் இயங்கும் இந்த மட்பாண்ட தொழிற் பயிற்சி நிலையமானது 1966 ஆம் ஆண்டு ஆரம் பிக்கப்பட்டது. இங்கு 18 தொடக்கம் 25 வயதிற்கு உட்பட்ட பயிற்சியாளர்களைத் தெரிவு செய்து அவர் களுக்கு தொழிற் பயிற்சிகளை வழங்குவதுடன் பயி ற்சிக் காலத்தில் ஒவ்வொருவருக்கும் நாளொன் றுக்கு 200 ரூபாவை வழங்குவதாகவும் குறிப்பிட்டார்.

களி மண்ணை மூலப் பொருளாகக் கொண்டு உருவச் சிலைகள், உண்டியல் அலங்காரப் பொருட் களே இங்கு அதிகம் உற்பத்தி செய்யப்படுவதா கவும் இந்தப் பொருட்களை விற்பனைக்காக வெளி மாவட்டங்களுக்கு குறிப்பாக சுற்றுலாப் பயணிக ளின் கொள்வனவிற்கென அனுப்பி வைப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.


## சிறு விளம்பரம்

### தேசிய கல்வியியல் கல்லூரி அனுமதி – 2013

ஆசிரியர் கல்வி தொடர்பான சேவை முன் தொழிற்பயிற்சி நெறியொன்றைப் பயிலுவதற் கான படிவத்தினை பூபாலசிங் கம் புத்தகசாலை, சுன்னாகம் தூர்க்கா, நெல்லியடி மோடோர்ன் உட்பட குடாநாட்டின் முன்னணி புத்தக நிலையங்களில் பெற்றுக் கொள்ளமுடியும். தொடர்புக்கு பபுவ விநியோகஸ்தர் : சி.என்.எச் சாள்ஸ் - 0776913337 (C/1578)


## இலவச மருத்துவ முகாம்

(சாவகச்சேரி)

வைத்தியக் கலாநிதி லயன் வே.தம்பித்துரையின் ஞாபகார்த்த மாக விசேட மருத்துவ முகாம் ஒன்று இன்று நடைபெறவுள்ளது.

லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட் டில் சாவகச்சேரி விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தில் காலை 8.00 மணி முதல் 12.00 மணி வரை நடைபெறும் இந்த இல வச மருத்துவ முகாமில் பல் வேறு சிகிச்சைப் பிரிவுகள் இயங்கவுள்ளதாக அறிவிக்கப்பட் டிருக்கிறது. (11)

## தீக்குளித்தவர் மரணம்

கடந்த செவ்வாய்க்கிழமை தனக்குத் தானே மண்ணெண் ணெய் ஊற்றி தீ வைத்த சம் பவத்தில் எரிகாயங்களுக்குள் ளாகி ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை யில் சிகிச்சை பெற்று வந்த மூன்று பிள்ளைகளின் தாய் சிகிச்சை பயனின்றி நேற்று முன்தினம் இரவு மரணமடைந்துள்ளார்.

உடுவில் தேவாலய வீதி யைச் சேர்ந்த அசோக் அனுஷா (வயது-34) என்ற பெண்ணே மரணமடைந்தவராவார்.

## ஞானமதைத் தந்திடவா!



ஞானப் பழத்திற்கு போட்டியிடவா – முருகன்
ஞானமதைத் தந்திட வருவாயா
ஆனைமுகன் தம்பி ஆறுமுகனோ – உமை
ஆணையிட்ட உலகத்தை சுற்றிவரவே
பெருஞ்சாலி வாகனனோ – தன்
பெற்றோரே உலகமென சுற்றி வந்தான்
பெருமையுடன் கிடைத்த கனியின் அதிபதியே –கணபதி
வல்லமையைத் தந்துவிடையா
ஆடுமயில் ஏறிய அழகனே – முருகன்
ஓடும் உலகை அழந்த பாலகனோ
ஓயா சோகம் கொண்ட சின்னவனே – எம்மை
வையகத்தில் வாழ வழிகாட்டிடையா

- பொலிகையூர் விசிந்தன்

(இன்று பொலிகண்டி கந்தவன கல்யாண வேலவர் மஹோற்சவ மாம்பழத் திருவிழா)

## நல்லூர் பூங்கா புனரமைக்க உங்கள் ஆலோசனை என்ன?

யாழ்.மாநகரசபை நல்லூர் பகுதியில் அமைந் துள்ள பூங்காவை நவீன முறையில் புனரமைப்புச் செய்ய முடிவு செய்துள்ளது. அந்தவகையில் அதனை அழகுபடுத்தி புனரமைப்புச் செய்வதற்கு புத்தஜீவிகள், நலன் விரும்பிகள் ஆகியோரிடமி ருந்து ஆலோசனைகள் எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே உங்களிடம் ஏதாவது புதிய எண்ணங் கள் இருந்தால் மாநகர சபையிடம் தெரிவிக்கு மாறு மாநகர முதல்வர் கேட்டுள்ளார்.


## "நாம்" சஞ்சிகை வெளியீட்டு விழா




(யாழ்ப்பாணம்)

யாழ்.இலக்கியக் குவி யத்தின் 'நாம்' சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 2.00 மணிக்கு யாழ்மங்கையர்க்கரசி வித் தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

வேலணையூர்தாஸ் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில், முதன்மை விருந்தினராக யாழ். வர்த்தக சங்கத் தலைவர் இ.ஜெயசேகரம் கலந்து சிறப்பிக்கவுள்ளார். தொடர்ந்து நிலாந்தன் தலைமை யில் கலாசார சீரழிவை எதிர்கொள்வதில் படைப் பாளிகளுக்குள்ள பொறுப்பு என்னும் சிறப்புக் கருத்துக்களமும் இடம்பெறவுள்ளது.





காரைநகர் வியாவில் ஐயனார் ஆலயத்தின் ஏற்பாட்டிலும், லண்டனில் வதியும் களபூமியைச் சேர்ந்த புரவலர் க.பாலையா அவர்களின் நிதி அனுசரணையுடன் இலவச கண் பரிசோதனை நிகழ்வு அண்மையில் மூளாய் வைத்தியசாலையில் நடத்தப்பட்டது. இதில் நாற்பது மாணவர்கள் பயன்பெற்றனர். இப் பரிசோதனையின் பின்னர் இருபது மாணவர்களுக்கு கண்ணாடியும், ஏனைய மாணவர்களுக்கு சிகிச்சையும் அளிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் ஐயனார் ஆலய அறங்காவலர் க.சேமசேகரம், கோட்டக் கல்விப்பணிப்பாளர் பு.சிறிவிக்னேஸ்வரன் ஆகியோரும் பங்குபற்றி இருந்தனர். (10)

## நீதிமன்றச் செய்திகள்

### நீதிமன்றத்தால் தேடப்பட்டவர் சரணடைந்தார்

(திருநெல்வேலி)

திருட்டு வழக்கில் நீதிமன்றி னால் பிடியாணை பிறப்பிக்கப் பட்ட ஒருவர் நேற்று முன்தினம் யாழ்.நீதிமன்றில் சரணடைந்தார்.

யாழ்ப்பாணம், நாவாந்துறை, ஒஸ்மானியாக் கல்லூரி வீதி யைச் சேர்ந்த பேகராஜா கஜேந் திரன் (வயது-28) என்பவரே சட் டத்தரணி பி.தவபாலன் மூலம் சரணடைந்தவராவார்.

இவர் இன்னொருவருடன் சேர்ந்து கடந்த ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி யாழ்ப்பாணம் 2ஆம் குறுக்குத் தெருவில் உள்ள வீடு ஒன்றை உடைத்து களவாடியதாக யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப் பட்டு யாழ்.நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது இவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டிருந்தார். பின்னர் இவர்கள் இருவரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

சில மாதங்களின் பின்னர் முதலாம் எதிரி மரணமானார். 2005ஆம் ஆண்டிலிருந்து இரண்டாம் எதிரிக்கு எதிராக வழக்கு நடைபெற்று வந்தது.

ஆனால், 2011ஆம் ஆண்டுக் குப் பிறகு இவர் நீதிமன்றுக்கு வராமல் தலைமறைவானார். நீண்ட காலம் வழக்குகளுக்கு இவர் சமூகமளிக்காமல் இருந்த தால், இவர் இல்லாமல் நீதிமன்ற விசாரணை நடைபெற்று கடந்த பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி இவர் கைது செய்யப்படும்போது பிடிக்கப்பட்ட நாளிலிருந்து இர ண்டு வருட கடூழியச் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண் டும் என நீதவான் உத்தரவிட்டி ருந்தார்.

எதிரி மீது பகிரங்கப் பிடியா ணையும் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே இவர் நேற்று நீதிமன்றில் சரணடைந் துள்ளார். (137)

### 11 வருடங்களின் பின்னர் வழங்கப்பட்ட தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

திருட்டுச் சம்பவத்தில் ஈடு பட்ட நான்கு பேரில் ஒருவர் யாழ்.நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்டார். ஏனைய மூவ ருக்கும் தலா இரண்டு வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

2001 ஆம் ஆண்டு கோண்டா வில் பகுதியில் உள்ள வீடு ஒன் றில் இந்நால்வரும் திருடியதாக கோப்பாய் பொலிஸாரால் குற் றம் சாட்டிக் கைது செய்யப்பட்ட னர். யாழ்.நீதிமன்றில் இவர்களை முன்னிலைப்படுத்திய போது இவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட் டிருந்தார். பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

பின்னர் வழக்குத் தவணைக ளுக்கு ஒருவர் மட்டுமே சமுக மளித்தார். ஏனைய மூவரும் தலைமறைவாகியிருந்த நிலை யில் அவர்களுக்கு நீதிமன்றம் பகிரங்கப் பிடியாணை பிறப்பித் தது. பிணையாளிகளும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இவ் வழக்கு யாழ்.நீதிமன்றில் விசா ரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது. விசாரணையை மேற் கொண்ட நீதவான் மா.கணேசராசா வழக்குகளுக்கு ஒழுங்காக சமூக மளித்த சந்தேக நபரை விடு தலை செய்து தீர்ப்பளித்தார்.

தலைமறைவாக இருக்கும் பகிரங்கப் பிடியாணை பிறப்பிக் கப்பட்ட மூவருக்கும் பொலிஸா ரால் அவர்கள் கைது செய்யப் படும்போது தலா இரண்டு வருட கடூழியச் சிறைத்தண்டனை அனு பவிக்க வேண்டும் எனவும் உத் தரவிட்டார்.

திருட்டில் ஈடுபட்டவர்கள் இரு பாலை, கல்வியங்காடு, ஊர் காவற்றுறை, கட்டைப்பிராய் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர் களாவர். பதினொரு வருடங்களு க்குப் பிறகு இத்தீர்ப்பு வழங்கப் பட்டுள்ளது. (137)

### பழைய திருடர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

2010ஆம் ஆண்டு காலப்பகுதியில் ரி-56 ரக தானியங்கித் துப் பாக்கியைக் காட்டிப் பயமுறுத்தி சாவகச்சேரி சிவன் கோவிலில் 5 இலட்சத்து 49 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க ஆபரணங் களைத் திருடிய நபர் சாவகச்சேரிப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த 15ஆம் திகதி அன்று கைது செய்யப்பட்ட சந்தேக நபர் எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ளதாகவும் சாவகச்சேரிப் பொலிஸார் நேற்று யாழ்சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப் பில் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் ஆபரணங்களும், ஆயுதமும் பொலிஸாரால் மீட்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சாவகச்சேரியில் மேலும் ஒரு சம்பவத்தில் வீடு உடைத்து 84 ஆயிரத்து 900 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்க ளைக் கொள்ளையிட்ட இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப் பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள் ளது. (பா)

### ஹெரோயினுடன் இந்தியர் கைது

(யாழ்ப்பாணம்)

மன்னார் பேசாலைப் பகுதி யில் 773 கிராம் ஹெரோயின் வைத்திருந்த இந்தியர் ஒருவரும் மன்னார் வாசி ஒருவரும் மன் னார் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

இந்தியாவைச் சேர்ந்த நூர் தீன் அப்துல் ரஜீம் (வயது-33) பேசாலையைச் சேர்ந்த உதய குமார் ஆகிய இருவருமே பொலிஸாரினால் கைது செய்யப் பட்டுள்ளது.

இவர்கள் இருவர் மீதும் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதா கவும் பொலிஸார் தெரிவித்தனர். (பா)

# நகர அபிவிருத்திக்கு வணிகர் கழகம் ஒத்துழைப்பு

(வடமராட்சி)

நெல்லியடி நகர அபிவிருத்தியின் முன்னேற்றத்தில் நெல்லியடி பிரதேச வர்த்தகர்களுடன் இணைந்து வர்த்தக சங்கத்தினரும் அரும் பாடுபட்டு வருகின்றனர் என வர்த்தக சங்கத் தலைவர் எஸ்.அகிலதாஸ் தெரிவித்தார்.

வர்த்தக சங்கத்தின் செயற்பாடுகள் மற்றும் நெல்லியடி நகர அபிவிருத்தி குறித்து எமது செய்தியாளர் வர்த்தக சங்கத் தலைவரிடம் வினவியபோதே அவர் இந்த தகவலை தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில், வடமராட்சி தெற்கு மேற்கு கரவெட்டி பிரதேச சபையின் எல்லைக் குட்பட்ட நெல்லியடி நகரப்பகுதியின் வர்த்தகர்களின் நிதியில் இருந்து 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வீதி மின் விளக்குகளை வீதிகளுக்கு பொருத்தி பராமரித்து வருகின்றோம்.

அத்துடன் அண்மையில் நகரப்பகுதியில் உள்ள பிரபல தளபாடக்கடை மின் ஒழுக்கினால் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது. இச்சம்பவம் துரஷ்டவசமானது எனவே மேற்படி பாதிக்கப்பட்ட கடை உரிமையாளரின் ஊக்குவிப்புக்காக சுமார் 5 இலட்சம் ரூபா ஒவ்வொரு வர்த்தகர்களிடம் இருந்தும் அறவிட்டு அந்தப் பணத்தை நெல்லியடி வர்த்தக சங்கம் கடந்த 16 ஆம் திகதி நடைபெற்ற பொதுச்சபைக் கூட்டத்தில் வைத்து உத்தியோக பூர்வமாகக் கையளித்தது.

எதிர்காலத்தில் வர்த்தகர்களினதும், பொதுமக்களினதும் நலன் கருதி வேலைகளையும் உதவிகளையும் செய்யும் கடமைப்பாடு உடையதாக எமது சங்கம் இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (116)

# மக்களின் ஒத்துழைப்புடனேயே புனரமைப்புக்கள் முன்னெடுக்கப்படும்

(ஆனைக்கோட்டை)

வலி.மேற்கு மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட வீதிகள் யாவும் இனிவரும் காலத்தில் பிரதேச சபையினால் முன் வைக்கப்படும் பிரமாணத்துக்கு அமைவாக இருந்தால் மாத்திரமே புனரமைக்கப்படும் என பிரதேச சபையால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் நடைபெற்ற பிரதேச சபை மாதாந்தக் கூட்டத்தின்போதே இந்த நடைமுறைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தற்போது வீதிகள் யாவும் 12அடி அகலத்தில் அகலமாக்கப்பட்டு புனரமைக்கப்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் 16 அடி, 20 அடி வரை அகலமாக்குவதற்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்கினால் மட்டுமே புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (104)

# சட்டவிரோத கள் விற்பனை; நால்வருக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

சட்ட விரோதமாக கள் விற்பனை செய்த 4 நபர்களுக்கு 12 ஆயிரம் ரூபா அபராதம் யாழ்.நீதிவான் நீதிமன்றம் விதித்துள்ளது.

யாழ்ப்பாணம், கொக்குவில், ஆனைக்கோட்டை போன்ற பகுதிகளில் அனுமதிப்பத்திர மின்றி சட்டவிரோதமான முறையில் கள்ளு விற்பனை செய்த வேளை குறித்த நபர்கள் யாழ். மதுவரி நிலையத்தினரால் பிடிக்கப்பட்டு நேற்று முன்தினம் யாழ்.நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டவேளை மேற்படி 4 பேர்களும் தலா 3 ஆயிரம் ரூபா தண்டம் செலுத்துமாறு யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா உத்தரவிட்டார். (எஸ்)

# பொதுக்கூட்டம்

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணம் - ஈச்சமோட்டை ஞானவைரவர் ஆலயத்தின் விசேட பொதுக் கூட்டம் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ஈச்சமோட்டை ஞானவைரவர் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த மூன்று மாதத்திற்கு முன நடைபெற்ற விசேட பொதுச சபைக் கூட்டம் தீர்மானத்திற்கு அமைய நியமிக்கப்பட்ட குழுவினர் ஆலய கும்பாபிஷேக நிர்வாக சபையின் கணக்குகளினை மீளாய்வு செய்து அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

மேற்படி அறிக்கையினை சமர்ப்பிப்பதற்காகவும், புதிய நிர்வாக சபையினைத் தெரிவு செய்வதற்குமாக விசேட பொதுச் சபைக் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (42)

# 125 மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேசத்திலுள்ள வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களிற்கு அவர்களின் கல்விச் செயற்பாட்டை ஊக்குவிக்கும் முகமாக துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்படவுள்ளன.

தென்மராட்சிப் பிரதேசத்திலுள்ள பாடசாலைகளில் கல்வி பயிலுகின்ற 125 மாணவர்களுக்கு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 08.30 மணிக்கு இத்து விச்சக்கர வண்டிகள் வழங்கப்படவுள்ளன.


தென்மராட்சி பிரதேச செயலகத்தில் நடைபெறும் இந்நிகழ்வில் ஈ.பி.டி.பி யாழ். மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் கலந்து கொண்டு மாணவர்களுக்கான துவிச்சக்கர வண்டிகளை வழங்கவுள்ளார். (153)



வேலணை கிழக்கு ஆலம்புலம் முருகமூர்த்தி ஆலய மஹா கும்பாபிஷேகத்தின்போது கும்பங்கள் எடுத்து வரப்படுவதையும், கும்பாபிஷேகம் நடைபெறுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:137)

# அனைத்துயிரும் காத்திடவே அம்பிகை பாலா கொடியேறு



அகங்காரம் நீங்கிடவே அயன்தனை சிறைவைத்த
அருள் முருகா கொடியேறு
ஆதிமாவை கந்தனே அனைத்துயிரும் காத்திடவே
அம்பிகை பாலா கொடியேறு
மாமுகத்தை நக்கியவா மாருதப் புரவீக வல்லி போற்றியவா
மாலை மருகா கொடியேறு
சிங்கார மயிலேறும் பெருமானெம் குருநாதா
சிவசுப்பிரமணியனே கொடியேறு
சீருடனே வேலேந்தி அசுரர் படையோட்டி
தேவர் சிறை மீட்டவனே கொடியேறு
சாந்தி சமாதானம் சர்வமெங்கும் நிலவ
சங்கரனார் மைந்தா கொடியேறு

- தொல்புரத்தூர் க.லோகேஸ்வரன்

(சரித்திரப் பிரசித்தி பெற்ற மாவிட்டபுரம் கந்தன் ஆலயக் கொடியேற்றம் இன்று)

# வடக்கு கடல்தொழிலில் மாற்று தொழில்நுட்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் கடல் வளத்தை அழிக்கும் தங்கூசி வலை மற்றும் றோலர் (இழுவைப்படகு) மீன்பிடித் தொழிலுக்கு மாற்றீடாக லோன் லைனோல் (தூண்டில்) தொழில் நடவடிக்கையை கடற்றொழில் நீரியல் வள அமைச்சு அறிமுகம் செய்ய விருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொழில் நடவடிக்கைக்காக சுமார் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான கடற்றொழில் உபகரணங்களை இனாமாக கடற்றொழிலாளர்களுக்கு வழங்கவும் கடற்றொழில் அமைச்சு திட்டமிட்டிருப்பதாகவும் தெரிவிக்கின்றது.

இத்தகைய தொழில் நடவடிக்கைக்கு பயனாளிகள் தெரிவு தற்சமயம் நடைபெற்று வருவதாகவும் தெரிய வருகின்றது.

முதற்கட்டமாக 30கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு இந்த உபகரணங்கள் வழங்கப் படவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இந்தத் தொழில் நடவடிக்கியின் மூலம் எமது கடல்வளம் பாதிக்கப்படாது எனவும் வெளி நாடுகளிலும் இத்தகைய தொழில் நடவடிக்கையினையே மீனவர்கள் மேற்கொண்டு வருவதாகவும் யாழ்.கடல்தொழில் நீரியல் வழத்திணைக்களத்தினால் சுட்டிக்காட்டப்பட்டுகின்றது. (பா)

# வவுனியாவில் வர்த்தகக் கண்காட்சி

(வவுனியா)

வவுனியா தெற்கு வலயக் கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில் "சீரான வர்த்தகக் கல்வியின் ஊடாக சீரிய வாழ்க்கைத்தரம்" என்ற தொனிப் பொருளில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வவுனியா வளாகம், வவுனியா தேசிய கல்வியற் கல்லூரி, வவுனியா முறைசார் கல்விப்பிரிவு, வவுனியா தொழில்நுட்ப கல்லூரி என்பவற்றுடன் வவுனியா தெற்கு கல்வி வலயம் இணைந்து வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய தேசியப்பாடசாலையில் எதிர்வரும் 1ஆம், 2 ஆம், 3 ஆம் திகதிகளில் காலை 9.00மணி முதல் 4.30 மணிவரை வர்த்தகக் கண்காட்சி ஒன்று நடாத்தவுள்ளது.

இம் மாபெரும் வர்த்தகக் கண்காட்சியில் சிறுகைத் தொழில் அமைப்புக்கள், இலங்கைத் தொடர்பு நிறுவனம், வணிக வங்கிகள், நிதிக் கம்பனிகள், பங்குபரிவர்தனை நிலையம், காப்புறுதி நிறுவனங்கள், தபால் கந்தோர், கணினி நிலையங்கள், இலங்கை மத்திய வங்கியின் யாழ்.கிளை ஆகியன ஒன்றிணை யவுள்ளன.

இக் கண்காட்சி பொதுமக்கள் பார்வைக்கு யூலை 1 ஆம், 3ஆம் திகதிகளிலும், பாடசாலை மாணவர்களுக்கு யூலை 2 ஆம் திகதி திங்கட்கிழமையும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால் இக் கண்காட்சியை பார்வையிட தரம் 10 இற்கு மேற்பட்ட மாணவர்களினை அனுப்பி மாணவர்களினை பயன் அடைய வைக்குமாறு வன்னி பாடசாலை அதிபர்களினை வவுனியா தெற்கு வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி செ.அன்ரன் சோமராஜா கேட்டுக்கொண்டுள்ளார். (42)

பேசிய பிறகு வருந்துவதை விட பேசுவதற்கு முன்னாலேயே யோசனை பண்ணுவது மிகவும் நல்லது. - தோமஸ் பெய்ன்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## வயதாவது பற்றிக் கவலையில்லை!

ஐம்பது வயதைத் தாண்டியவர்கள் எதிர்காலத்தைப் பற்றி சிந்திப்பதில்லை. கடந்த காலத்தை நியாயப்படுத்துவதிலேயே அவர்கள் பொழுதைப் போக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லப்படுவதுண்டு.

ஒருவர் இளையவர்களின் செயல்களைப் பார்த்து பொதுவாகவே எரிச்சலுறத் தொடங்கி விட்டாரென்றால் அவர் பழைய தலைமுறைக்குச் சென்றுவிட்டார் என்பதுதான் பொருள். அல்லது "பெரிசு என்னவாம்?" என்று தாயிடம் மகன் கேட்கும் போதே இந்த இடைவெளி ஏற்பட்டு விட்டதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்தத் தலைமுறை மாற்றம் தவிர்க்க முடியாததுதான். இதைப் புரிந்து கொள்வதிலிருந்துதான் இளைஞர்களுடனான நல்லுறவைப் பெரியவர்கள் ஏற்படுத்திக்கொள்ள முடியும். இல்லாவிட்டால் வயதானவர்களுக்கேயுரிய கலைநயத்தோடு சும்மா புலம்பிக் கொண்டிருக்க வேண்டியதுதான்.

ஆனால், இந்த வயதானவர்கள் 'வர வர உலகம் கெட்டுக் கொண்டே போகிறதே' என்ற கவலையைக் கொண்டிருந்தாலும், உண்மையில் அவர்கள் மகிழ்ச்சியானவர்கள் என்ற செய்தியை புதிய ஆய்வொன்று வெளிப்படுத்தியிருக்கிறது. இதைக் கண்டுசொன்ன ஆய்வாளர்கள் வயதானவர்களாகத்தான் இருந்திருப்பர் என்பதை யூகிப்பது ஒன்றும் கடினமல்ல.

நாற்பது வயதுக்கு மேல் மனிதன் மகிழ்ச்சியாக வாழ முடியாது; இளமையில்தான் ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம் எல்லாம் என்ற கருத்து சரியல்ல என்று அந்தப் புதிய ஆய்வு கூறுகிறது. வேலையில் இருந்து ஓய்வு பெறும் காலத்தில்தான் மனிதர்கள் மிகுந்த மகிழ்ச்சியை அனுபவிக்கிறார்கள் என்கிறது இந்த ஆய்வு. வாழ்க்கையின் ஆகக் கடைசி காலத்தில்தான் – அதாவது 80 வயதுக்குப் பிறகு – இப்படியொரு வாழ்க்கை தேவைதானா என்ற விரக்தி மேலிடுகிறதாம்.

குயின்ஸ்லாந்தில் இரு பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்கள் மேற்கொண்ட ஆய்வு இது. அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, ஜெர்மனி ஆகிய நாடுகளில் அறுபதாயிரம் பேரிடம் பத்தாண்டுகளாக சேகரித்த தகவல்களை அலசியதில், 55 வயதில் இருந்து 75 வயது வரையிலான காலகட்டத்தில் மனிதர்கள் உச்சகட்ட மகிழ்ச்சியில் வாழ்கின்றனர் என்பது தெரிய வந்தது. எப்போதும் சந்தோஷத்தில் மிதப்பது இளைஞர்கள் என்ற கருத்து தவறானது என்பது இத்தால் தெரியவந்தது.

முழுமையான மகிழ்ச்சிக்கு 10 புள்ளிகள் போடலாம் என்றால் உனது மகிழ்ச்சிக்கு எத்தனை புள்ளி கொடுப்பாய் என்று 18 வயது ஆண், பெண்களிடம் கேட்டபோது கிடைத்த சராசரி புள்ளிகள் ஏழுதான். ஆனால், ஜெர்மனியில் 65 வயதை தாண்டியவர்களும் இதே புள்ளியைக் கொடுத்தனர். அவுஸ்திரேலிய பெரியவர்கள் 7.3 சராசரி. இங்கிலாந்தில் 70 வயதுக்காரர்கள் 'வாழ்க்கை அட்டகாசமாகப் போகிறது' என்று 7.2 புள்ளி கொடுத்துள்ளனர்.

இதன்படி, 20 வயதில் அனுபவிக்கும் சந்தோஷங்கள் படிப்படியாக அதிகரித்து 70களில் உச்சத்தை எட்டுவதாக கூறலாம் என்று அந்தப் பேராசிரியர்கள் தெரிவித்துள்ளனர். உத்தியோக ஓய்வுக்குப் பிறகு வாழ்க்கை கசக்கும் என்ற கருத்து இதன் மூலம் தகர்க்கப்பட்டுள்ளது.

இளம் வயதில் எதிர்பார்ப்புகள் அதிகம் இருக்கும். நிறைய கனவுகள். அனைத்தும் பலிப்பதில்லை. அதனால் ஏமாற்றம். வயது ஏறும்போது மனம் முதிர்ச்சி அடைகிறது. சாத்தியமானதை மட்டுமே எதிர்பார்க்கிறது. ஏமாற்றம் குறைகிறது. அதனால் தன்னம்பிக்கை வலுக்கிறது. இழந்ததை எண்ணி கவலைப்படாமல் இருப்பதை பார்த்து திருப்தி அடைகிறது. அதில் மகிழ்ச்சி நிறைகிறது. இதுதான் அந்த ஆய்விலிருந்து கிடைத்த முடிவு.

முதுமைக்குக் கவலை இல்லை எனில், இளையோரிடம் எரிச்சலும் இல்லை. - ஆசிரியர்

# கட்டுமீறிச் செல்லும் குற்றச் செயல்கள் கட்டுப்படுத்த முடியாமல் திணறும் பொலிஸார்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் சமூக விரோதக் குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் குறித்த தகவல்களை வழங்கி அவற்றைத் தடுக்க உதவுமாறு யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிறிகுகநேசன் அனைத்துத் தரப்பினரிடமும் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

நேற்று யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ் வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அண்மைக்காலமாக குற்றச் செயல் சம்பவங்களின்போது ஒயில் வீச்சுக்கள் இடம்பெற்றிருக்கின்றன. இதில் பொதுமக்கள் பலர் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

பல்வேறு குற்றச் செயல்களும் நடைபெற்று வருகின்றன. இந்தச் சம்பவங்களின் போது குறறவாளிகளைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு பொலிஸார் மேற்கொள்ளும் முயற்சிக்கு குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் குறித்து தகவல்களை வழங்கி உதவுமாறு சகல தரப்பினரையும் அவர் கேட்டுக் கொண்டார்.

அண்மையில் சுன்னாகம் பொலிஸ் பிரிவிலும் யாழ். பொலிஸ் பிரிவிலும் இடம்பெற்ற ஒயில் வீச்சுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் குறித்து எவ்வித தகவலும் கிடைக்காததன் காரணமாக எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிகையில்,

கடந்த வாரத்தில் யாழ். மாவட்ட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் ஐந்து வீடுகள் உடைத்து திருட்டுச் சம்பவங்கள் நடைபெற்றிருப்பதாகவும், இந்தச் சம்பவங்கள் தொடர்பில் எவரும் இது வரை கைது செய்யப்படவில்லை. திருடப்பட்ட பொருட்களும் மீட்கப்படவில்லை.

இதில் யாழ். பொலிஸ் பிரிவில் ஒன்றும், சுன்னாகம் பொலிஸ் பிரிவில் மூன்றும், கோப்பாயில் ஒன்றுமாக மொத்தம் ஐந்து சம்பவங்கள் நடைபெற்றுள்ளது எனவும் யாழ் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மேலும் தெரிவித்தார். (பா)

# விமான எதிர்ப்பு துப்பாக்கி ரவைகள் வவுனியாவில் மீட்பு

(வவுனியா)

வவுனியா - உளுக்குளம் பகுதியில் வவுனியா பொலிஸாரால் விமான எதிர்ப்பு துப்பாக்கியினுடைய ரவைகள் உட்பட பல துப்பாக்கி ரவைகளும் கிளைமோர் குண்டுக்கான தானியக்கியும் மீட்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே இவ் ஆயுதங்கள் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்ததுடன், அவ் ஆயுதங்களில் 750 ரி.56 துப்பாக்கி ரவைகளும் விமான எதிர்ப்புத் துப்பாக்கியின் ரவைகள் 600 உம் அதிகளவில் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவித்தனர்.. (160)

# வவுனியாவில் சுகாதார சீர்கேடு அரசஅதிபருடன் கலந்துரையாடல்

வவுனியா அரசாங்க அதிபர் பந்துல கரிச்சந்திரவுடன் வவுனியா நகரசபையின் உப தலைவர் எம். எம். ரதன் தலைமையிலான உறுப்பினர்கள் அடங்கிய குழுவினர் கடந்த வெள்ளிக்கிழமை விசேடசந்திப்பு ஒன்றை மேற்கொண்டனர்.

புதிதாக பதவியேற்ற அரசாங்க அதிபரை சம்பிரதாயபூர்வமாக சந்தித்துக்கொண்ட வவுனியா நகரசபையினர் வவுனியாவில் காணப்படும் சுகாதார பிரச்சினைகள் உட்பட பல்வேறான பிரச்சினைகள் தொடர்பிலும் கலந்துரையாடியதாக சபை உறுப்பினர் செல்லத்துரை தெரிவித்தார்.

இதேவேளை வவுனியா நகரசபைக்கு அரசாங்க அதிபரை வருமாறு அழைப்பு விட்ட சபை உறுப்பினர்கள், எதிர்வரும் 10 ஆம் திகதி அரசாங்க அதிபருக்கு கௌரவிப்பு நிகழ்வொன்றினையும் நகரசபையில் நடத்துவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் சபையின் உபதலைவர் எம்.எம். ரதன் தெரிவித்தார்.

அத்துடன் வவுனியா பிரதேசத்தில் பலர் காணிகளுக்கு அனுமதிப்பத்திரம் இன்றியுள்ளமை தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதாகவும் தெரிவித்த நகரசபை உறுப்பினர் செல்லத்துரை இது தொடர்பில் நடமாடும் சேவை ஒன்றினை நடத்தி அது தொடர்பில் கவனம் செலுத்த முடியுமெனவும் அரசாங்க அதிபர் தெரிவித்ததாகவும் கூறினார். (160)

# கமக்கார அமைப்புக்களுக்கு பூநகரியில் புதிய நிர்வாகிகள்

## தேர்தல் திகதிகளும் அறிவிப்பு

(பூநகரி)

பூநகரி கமநலசேவை நிலையத்தின் கீழ் இயங்கும் 19 கமக்கார அமைப்புக்களுக்கான தேர்தல்கள் கடந்த மாதம் ஆரம்பமாகி கட்டம் கட்டமாக நடைபெற்று வருகிறது.

இதுவரை 10 அமைப்புக்களுக்கான தேர்தல்கள் தங்கள் கமநலசேவை அலுவலர் ந.சுந்தரமூர்த்தியினால் நடத்தி முடிக்கப்பட்டுள்ளதாக கமநல சேவை நிலையவட்டாரங்கள் தெரிவித்தன.

தொடர்ந்து தேர்தல் நடாத்தப் படவிருக்கும் கமக்கார அமைப்புக்களின் பெயர்களும் திகதியும் அறிவிக்கப்பட்டுள்ளது. விபரம் வருமாறு.

01.வாடியடி கமக்கார அமைப்பு 25.06.2012
02.மட்டுவில் நாடு மக்கள் அமைப்பு 28.06.2012
03.அரசபுரம் கமக்கார அமைப்பு 02.07.2012
04.செம்பன்குண்டு கமக்கார அமைப்பு 09.07.2012
05.பிள்ளையார்நகர் கமக்கார அமைப்பு 12.07.2012
06.சிவபூமி கமக்கார அமைப்பு 16.07.2012
07.பள்ளிக்குடா கமக்கார அமைப்பு 19.07.2012
08.மட்டுவில் நாடு மேற்கு கமக்கார அமைப்பு 23.07.2012
09.பரமன்கிராய் கமக்கார அமைப்பு 26.07.2012
10.கௌதாரிமுனை கமக்கார அமைப்பு 30.07.2012. (112)

# யுத்தம் புரிந்தமைக்கு சான்று இல்லை கிளிநொச்சி இளைஞர் விடுதலை

(திருநெல்வேலி)

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட இளைஞர் ஒருவர் யாழ். மேல் நீதிமன்றினால் நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டார்.

இவ்வழக்கில் கிளிநொச்சி தொண்டமான் நகரைச் சேர்ந்த ஜெயக்குமார் அனுஷிகன் (வயது - 23) என்பவர் 23.05.2009 இல் ஓமந்தையில் வைத்து கைது செய்யப்பட்டார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து கொண்டு வட பகுதி நிலத்தைக் கைப்பற்றுவதற்கு இலங்கை அரசை எதிர்த்து 2007ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ஆம் திகதிக்கும் 2009ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதிக்குமிடையில் பூநகரியில் யுத்த நடவடிக்கையில் ஈடுபட்டதாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

08.11.2011இல் யாழ்.மேல் நீதிமன்றத்தில் இவர் மீது வழக்குத் தொடுக்கப்பட்டது. இவருக்கு எதிராக இவரால் பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு அளிக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் சான்றாக இருந்தது.

கடந்த தவணையின் போது யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி ஜெ.விஸ்வநாதனால் குற்றம் ஒப்புதல் வாக்குமூலம் நிராகரிக்கப்பட்டு எதிரிக்கெதிராக வேறு சான்றுகள் உள்ளனவா என்பதை ஆராயும் பொருட்டு நேற்று முன்தினம் வரை வழக்கு ஒத்தி வைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது எதிரிக்கெதிராக வேறு சான்று கள் இல்லை என அரச சட்டவாதி வி.திருக்குமரன் மேல் நீதிமன்றுக்கு தெரிவித்ததை அடுத்து நீதிபதி எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

எதிரியின் சார்பில் சட்டத்தரணி மு.றெமிடியஸ் ஆஜரானார். (137)

# அரசியல் தீர்வைக் கிடப்பில் போட்டுவிட்டு நடத்தும்
# எந்தப் போராட்டமும் பலனளிக்காது

- சங்கர சிவன் -

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் தீர்வுக்கான கொள்கையோ அணுகுமுறையோ இல்லை. இனப்பிரச்சினைக்கான தீர்வு மற்றும் அணுகுமுறை தொடர்பாகக் கட்சி முக்கியஸ்தர்களிடையே முரண்பாடு நிலவுவதால் இவர்களால் தீர்வுத் திட்டமொன்றைத் தயாரிக்க இயலவில்லை. இப்படியே இருந்தால் மக்களிடமிருந்து அந்நியப்படும் நிலை ஏற்படலாம் என்பதால், காணி அபகரிப்புப் போன்ற பக்க விளைவுப் பிரச்சினைகளைக் கையில் எடுத்துப் போராட்டம் நடத்துகின்றார்கள்.**

கடந்த வாரம் வடக்கில் காணி அபகரிப்புக்கு எதிரான போராட்ட வாரம் போல இருந்தது. யாழ்ப்பாணத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அழைப்பு விடுத்த போராட்டம் பொலிஸாரினால் நீதிமன்ற உத்தரவு பெற்றுத் தடை செய்யப்பட்டது. போராட்டத்துக்கெனக் கூடிய மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர். வலிகாமம் வடக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்பாடு செய்த போராட்டத்தில் பங்குபற்றிய மக்களில் சிலர் திரும்பிச் செல்லும்போது தாக்குதலுக்கு உள்ளாகினர். இவ்விரு சம்பவங்களும் ஜனநாயகத்தைக் கேள்விக்கு உள்ளாக்குகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் ஒரே நோக்கத்துக்கான போராட்டத்தை வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு தினங்களில் ஏற்பாடு செய்திருந்தன. தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடுவதாகக் கூறும் இக்கட்சிகளினால் பொது விடயத்திலாவது போட்டி மனோபாவத்தைக் கைவிட இயலவில்லை.

அரச காணிகள் தாராளமாக இருக்கும் நிலையில் அரசாங்கத்தின் தேவைக்காகவோ படையினரின் தேவைக்காகவோ பொதுமக்களின் காணிகளை அபகரிப்பதற்கும், சுவீகரிப்பதற்கும் எதிர்ப்புத் தெரிவிப்பதையோ மக்களை அணி திரட்டிப் போராட்டம் நடத்துவதையோ எவரும் குறை கூற முடியாது. ஆனால், போராட்டத்தை முன்னெடுக்கும் தலைவர்கள் சற்றுப் பின்நோக்கிப் பார்ப்பது நல்லது.

தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்புலம் பறிக்கப்படுகின்றது என்றும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் நடைபெறுகின்றது என்றும் மேடைக்கு மேடை தலைவர்கள் குற்றப் பத்திரிகை வாசிப்பதும் போராட்டங்கள் நடத்துவதும் அரசாங்கத்துக்கு மகஜர்கள் கையளிப்பதும் கிட்டத்தட்ட அரை நூற்றாண்டுக்கு மேல் தொடர்ச்சியாக நடந்துவரும் சங்கதி. தங்க மூளைகள் என்றும் செயல் வீரர்கள் என்றும் போற்றிப் புகழப்பட்டவர்கள் இக்காலப்பகுதியில் தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்கினார்கள். அப்படியிருந்தும் இப்பிரச்சினைகள் தொடர்கின்றனவென்றால் அதற்கான காரணம் என்ன என்று ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும்.

காணி மற்றும் குடியேற்றம் தொடர்பான பிரச்சினைகள் தமிழ் மக்கள் முகங்கொடுக்கும் பிரதான பிரச்சினையான இனப்பிரச்சினையின் பக்க விளைவுகள். பிரதான பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் அதன் பக்க விளைவுகளுக்குத் தீர்வு காண முயற்சிப்பது ஒருபோதும் நிலையான தீர்வாக இருக்காது. மீண்டும் பிரச்சினை தலைதூக்கவே செய்யும். காணி அபகரிப்பு, சிங்களக் குடியேற்றம் போன்றவற்றை உதாசீனம் செய்துவிட்டு இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சியை மாத்திரம் கையாள வேண்டுமா என்ற கேள்வி இங்கு எழலாம். இனப்பிரச்சினையின் பக்க விளைவுகளுக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சி இனப்பிரச்சினையின் தீர்வுக்கான முயற்சியுடன் இணைந்து செல்ல வேண்டும். ஒன்றுக்காக மற்றதைப் பின்போட முடியாது.

முன்னைய தலைவர்கள் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சியிலும் முன்னேற்றம் காணவில்லை. குடியேற்றம் மற்றும் காணி அபகரிப்பு போன்றவற்றைத் தடுக்கும் முயற்சியிலும் முன்னேற்றம் காணவில்லை. இதற்கு அவர்கள் திறமையற்றவர்கள் என்பது காரணமல்ல. அவர்கள் மிகவும் திறமைசாலிகள். யதார்த்தத்துக்கு அமைவாகச் செயற்படாததும் பிரச்சினையின் தீர்விலும் பார்க்கத் தங்கள் அரசியல் இருப்புக்குக் கூடுதல் முக்கியத்துவம் அளித்ததுமே பிரதான காரணம்.



இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை ஒரே தருணத்தில் பெறமுடியாது என்பது யதார்த்தம். வழங்கப்படும் தீர்வு போதுமான அதிகாரங்களைக் கொண்டிருக்காவிட்டாலும் அதை ஏற்றுக் கொண்டு முழுமையான அரசியல் தீர்வை அடையும் முயற்சியைப் படிப்படியாக மேற்கொள்வதுதான் பலனளிக்கக்கூடிய அணுகுமுறை. அவ்வாறான தீர்வுகளைப் பற்றாக்குறைத் தீர்வு எனக் கூறித் தமிழ்த் தலைவர்கள் நிராகரித்துவிட்டார்கள். மாவட்ட சபையை ஏற்றவர்கள் மாகாண சபையை நிராகரித்தார்கள். மாகாண சபையிலும் பார்க்கக் கூடுதலான அதிகாரங்களைக் கொண்டிருந்த பிராந்திய சபையையும் நிராகரித்தார்கள். சந்திரிகாவின் பிராந்திய சபைத் தீர்வைத் தமிழ்த் தலைவர்கள் ஏற்றிருந்தால் காணி அபகரிப்புக்கும் குடியேற்றத்துக்கும் எதிராக இன்று போராட்டம் நடத்த வேண்டிய தேவை எழுந்திருக்காது.

**வழங்கப்படும் தீர்வு போதுமான அதிகாரங்களைக் கொண்டிருக்காவிட்டாலும் அதை ஏற்றுக் கொண்டு முழுமையான அரசியல் தீர்வை அடையும் முயற்சியைப் படிப்படியாக மேற்கொள்வதுதான் பலனளிக்கக்கூடிய அணுகுமுறை. அவ்வாறான தீர்வுகளைப் பற்றாக்குறைத் தீர்வு எனக் கூறித் தமிழ்த் தலைவர்கள் நிராகரித்துவிட்டார்கள். மாவட்ட சபையை ஏற்றவர்கள் மாகாண சபையை நிராகரித்தார்கள். மாகாண சபையிலும் பார்க்கக் கூடுதலான அதிகாரங்களைக் கொண்டிருந்த பிராந்திய சபையையும் நிராகரித்தார்கள். சந்திரிகாவின் பிராந்திய சபைத் தீர்வைத் தமிழ்த் தலைவர்கள் ஏற்றிருந்தால் காணி அபகரிப்புக்கும் குடியேற்றத்துக்கும் எதிராக இன்று போராட்டம் நடத்த வேண்டிய தேவை எழுந்திருக்காது.**

கிடைத்த சந்தர்ப்பங்களையெல்லாம் தமிழ்த் தலைவர்கள் தவறவிட்டதற்கான உண்மைக் காரணம் தங்கள் அரசியல் இருப்புக்கு அவர்கள் அளித்த முக்கியத்துவமாகும். பற்றாக்குறைத் தீர்வை ஏற்றால் கடுங்கோட்பாட்டாளர்களின் எதிர்ப்பிரசாரம் தங்கள் அரசியல் இருப்பைக் கேள்விக்குறி ஆக்கிவிடலாம் என்ற அச்சம் அவர்களுக்கு இருந்தது. தலைவர்கள் சரியான கொள்கையையும் அணுகுமுறையையும் பின்பற்றாததால் இனப்பிரச்சினை இன்று பூதாகரமாக வளர்ந்துவிட்டது. இன்னொருவிதமாகக் கூறுவதானால், தமிழ்த் தலைவர்கள் பிரச்சினையை வளர்த்துவிட்டார்கள்.

இனப்பிரச்சினையின் வளர்ச்சியோடு அதன் பக்க விளைவுகளான குடியேற்றம் மற்றும் காணி அபகரிப்புப் பிரச்சினைகளும் வளர்ந்துவிட்டன. இன்று தலைமை ஏற்றிருப்பவர்கள் முன்னைய தலைவர்களின் வழிவந்தவர்கள் என்பதால் அவர்களும் இக் குறை பாடுகளில் பங்காளிகள் ஆவர்.

இவ்வாறு குறைபாடுகளைக் கூறுவது காணி அபகரிப்புக்கு எதிரான போராட்டம் நடத்த வேண்டிய அவசியம் இல்லை என்பதற்காகவல்ல. முன்னைய தவறுகளைப் புரிந்து கொண்டு சரியான பாதையில் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காகவே தவறுகள் சுட்டிக்காட்டப்படுகின்றன.

காணி அபகரிப்பு போன்ற பக்க விளைவுகளுக்கு எதிரான போராட்டம் பிரதான பிரச்சினையான இனப்பிரச்சினையின் தீர்வுக்கான போராட்டத்துடன் இணைந்ததாக இருக்க வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்த வேண்டியுள்ளது. இனப்பிரச்சினை தீராதிருக்கும் வரை குடியேற்றம், காணி அபகரிப்பு ஆகியவற்றுக்குக் காணப்படும் தீர்வு நின்று நிலைக்கும் தீர்வாக இருக்காது. எனவே, நில அபகரிப்பு போன்றவற்றுக்கு எதிரான போராட்டம் இனப்பிரச்சினையின் தீர்வுக்கான போராட்டத்துடன் சமகாலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டியது.

கடந்த வாரம் யாழ்ப்பாணத்திலும் வலிகாமம் வடக்கிலும் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்த கட்சிகளிடம் இனப்பிரச்சினையின் தீர்வுக்குச் சரியான கொள்கையோ அணுகுமுறையோ இல்லை. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தேசம் என்றும், சுயநிர்ணய உரிமை என்றும் வாய்ப்பாடு சொல்கின்றதேயொழியத் தீர்வுத் திட்டம் எதையும் முன்வைக்கவில்லை. இவர்கள் யதார்த்தத்துக்கு வெகு தொலைவில் நின்று புத்தகப் பூச்சிகளாகச் செயற்படுகின்றார்கள். இவர்களின் செயற்பாடுகள் தனி நாட்டு இலக்கையே அடையாளங் காட்டுகின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடமும் தீர்வுக்கான கொள்கையோ அணுகுமுறையோ இல்லை. இனப்பிரச்சினைக்கான தீர்வு மற்றும் அணுகுமுறை தொடர்பாகக் கட்சி முக்கியஸ்தர்களிடையே முரண்பாடு நிலவுவதால் இவர்களால் தீர்வுத் திட்டமொன்றைத் தயாரிக்க இயலவில்லை. இப்படியே இருந்தால் மக்களிடமிருந்து அந்நியப்படும் நிலை ஏற்படலாம் என்பதால், காணி அபகரிப்புப் போன்ற பக்க விளைவுப் பிரச்சினைகளைக் கையில் எடுத்துப் போராட்டம் நடத்துகின்றார்கள்.

இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டமொன்றின் அடிப்படையில் மக்களை அணி திரட்ட இயலாத நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பில் சேர்ந்திருக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் போலவே எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பினாலும் இனப்பிரச்சினைக்குத் தீர்வுத் திட்டமொன்றைத் தயாரிக்க இயலாது. இக்கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் நவஹெல உருமயவுக்கு இனப்பிரச்சினையின் தீர்வில் அக்கறை இல்லை. ஐக்கிய தேசியக் கட்சி சிறுபான்மையினரின் உரிமைகள் பற்றி அடிக்கடி பேசுகின்றபோதிலும் அடிப்படையில் அது ஒரு இனவாதக் கட்சி. விக்கிரமபாகு கருணாரட்னவும் சிறிதுங்கவும் வாய்ப்பேச்சு வீரர்கள். சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதாகக் கூறும் இவர்களின் கட்சிகள் அந்த அடிப்படையில் தீர்வுத் திட்டமொன்றை இதுவரை தயாரித்து வெளியிடவில்லை. பிரிவினையா அல்லது ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வா என்பதில் ஒரு நிலைப்பாட்டை எடுக்க இயலாதவர்களாக இவர்கள் உள்ளனர். இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பில் சேர்ந்து செயற்படுவது ஆட்சி மாற்றத்துக்காகவேயொழிய இனப் பிரச்சினையின் தீர்வுக்காகவல்ல.

வெறுமனே ஆட்சி மாற்றம் தீர்வைக் கொண்டு வராது. நியாயமான தீர்வுத் திட்டமொன்றின் அடிப்படையில் சிங்கள மக்கள் மத்தியில் சாதகமான சூழ்நிலையைத் தோற்றுவிக்கக்கூடிய நேச சக்திகளை இனங்கண்டு அவற்றுடன் இணைந்து செயற்படுவதன் மூலமே தீர்வு சாத்தியமாகும். அவ்வாறான வேலைத் திட்டத்துடன் காணி அபகரிப்பு போன்றவற்றுக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுப்பதே சரியானது. பிரதான முன்தேவை நியாயமான தீர்வுத்திட்டம்.

# இறுதி யுத்த காலத்தில் ஐ.நா. என்ன செய்தது?

### மீளாய்வு அறிக்கை விரைவில்



(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற போரின் போது, ஐ.நாவின் பணிகள் தொடர்பாக மேற்கொள் ளப்படும் மீளாய்வு அடுத்த மாதம் நிறைவடையுமென ஐ.நா. பொதுச்செயலர் பான் கீ. மூனின் பேச்சாளர் மார்ட்டின் நெஸ்ர்கி தெரிவித்துள்ளார்.

இந்த மீளாய்வுப் பணி கடந்த ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட் டது. ஜூலை மாதமோ அதனை அண்மித்ததாகவோ முடிவடை யும்.

முன்னதாக கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் இந்த மீளாய்வுப் பணிகளை மேற் கொள்ளும் பொறுப்பு தொராயா ஒபெய்ட் அம்மையாரிடம் வழங்கப்பட்டிருந்தது.

தனிப்பட்ட காரணங்களால் அவர் இந்தப் பணியை ஆரம் பிக்கவில்லை.

அவர் விலகிக் கொண்டதை அடுத்து சார்ள்ஸ் பெட்ரி தலைமையிலான குழு இந்த மீளாய்வு பணிகளை மேற்கொண்டு வருகிறது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# சுதந்திர ஊடக நிறுவனத்தில் தலைவிரித்தாடுகிறது ஊழல்

### புலனாய்வு விசாரணை விரைவில்

(கொழும்பு)

சுதந்திர ஊடக நிறுவனத்தில் இடம் பெற்றதாகக் குறிப்பிடப்படும் ஊழல் மோசடிகள் குறித்து புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பிக்க உள்ளனர்.

சுதந்திர ஊடக நிறுவனத்தில் பாரியளவு நிதி மோசடி செய்யப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

வெளிநாடுகளிலிருந்து கிடைக்கப் பெற்ற பல மில்லியன் ரூபா பணம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

2008, 2009 ஆம் நிதியாண்டுகளில் சுமார் 40 மில்லியன் ரூபா நிதி மோசடி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை சட்டத்தின் அடிப்படையில் தன்னார்வத் தொண்டு நிறுவன ஆணையாளருக்கு சுதந்திர ஊடக நிறுவனம்

freemediasrilanka

freemedia movement

ஆண்டுதோறும் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை, சுதந்திர ஊடக நிறுவனத்தில் கடமையாற்றிய சிலர் உயிர் அச்சுறுத்தலைக் காரணம் காட்டி நாட்டை விட்டு வெளியேறிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஊழல் மோசடிகளை மூடி மறைக்கும் நோக்கில் இவர்கள் நாட்டை விட்டு வெளியேறிச் சென்றுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

# அச்சுறுத்தலுக்கு அடிபணிய மாட்டோம்
# தொழிற்சங்க நடவடிக்கை நிச்சயம்

(கொழும்பு)

பல்கலைக்கழக ஆசிரியர்கள் ஜூலை 4 ஆம் திகதி தொடக்கம் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவர் என்றும் தாம் எவ்விதமான பயமுறுத்தலுக்கும் அஞ்சி தமது தொழிற்சங்க நடவடிக்கையை கைவிட் போவதில்லை எனவும் பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கங்களின் சம்மேளனம் கூறியுள்ளது.

தனக்கு அல்லது தனது குடும்பத்தினருக்கு விடுக்கப்படும் பயமுறுத்தலுக்கு தான் பணியப்போவதில்லை என செய்தியாளர் மாநாட்டில் அச் சம்மேளனத்தின் தலைவர் நிமல் ரஞ்சித் தேசிறி கூறினார்.

இவ்வார முற்பகுதியில் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் என தம்மை அடையாளப்படுத்திய இருவர், அவரின் 17 வயது மகள் பற்றிய தகவல்களை கேட்டுக்கொண்டு தேவசிறியின் அயலுக்கு இரண்டு தடவை வந்துள்ளதாக கூறப்படுகிறது.

முதல் தடவை வந்தபோது இவர்கள் தமது அடையாள அட்டைகளை காட்டிய பின் மகள படிக்கும் பாடசாலை, பாடசாலை போகும்நேரம் பற்றி கேட்டதுடன் பல விடயங்கள் பற்றியும் விசாரித்தனர். இவரது வெளிநாட்டு பயணம் தொடர்பிலேயே இந்தத் தகவல்கள் தேவையாக உள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இரண்டாம் தடவை வந்த போது தனது மகள் பாதுகாப்பு அமைச்சில் ஒரு வேலைக்கு விண்ணப்பித்துள்ளதால் இந்த தகவல்கள் தமக்கு தேவைப்படுவதாக கூறியுள்ளனர். எனது மகள் மிகவும் வயது குறைந்தவர். இவர்கள் கூறிய காரணங்கள் யாவும் பொய்யானவை என அவர் மேலும் கூறினார்.

அயல்வீட்டவரின் மதில்மேல் பாய்ந்து தனது காரின் இலக்கத்தை பெற முடியுமா என கேட்டுள்ளனர். இப்படியான தகவலுக்காக மதில் பாய்ந்து வர வேண்டிய அவசியம் பாதுகாப்பு அமைச்சுக்கு கிடையாது. இவை எல்லாம் என்னை பயமுறுத்தும் நடவடிக்கைகள். அடுத்தமாதம் நாம் நடத்த திட்டமிட்டுள்ள தொழிற்சங்க நடவடிக்கையுடன் இந்த பயமுறுத்தல்கள் தொடர்பானவை என அவர் கூறினார்.

தனது மனைவிக்கு கடந்த வியாழக்கிழமை கிடைத்த கடிதத்தில் தான் அர சியல் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளதாகவும் அதனால் குடும்ப விடயங்களை கவனிப்பதில்லை எனவும் எழுதப்பட்டிருந்தது. தனக்கும் குடும்பத்தினருக்கும் பிரச்சினைகளை ஏற்படுத்தும் முயற்சியே இக்கடிதம் என அவர் கூறினார்.

இதையிட்டு அடுத்த நாள் உயர்கல்வி அமைச்சரிடம் முறையிட்ட போது அவர் இப்போது இந்த புதிய கதையை காவித் திரிகிறீர்களா? என கேட்டார். அமைச்சர் தனது முறைப்பாட்டை கணக்கில் எடுக்கவில்லையென தேவசிறி கூறினார்.

அமைச்சருடனான பேச்சுவார்த்தையில் நாம் சம்பளங்களை முக்கியப்படுத்தி பேசவில்லை. நாம் ஆட்சேர்ப்பு, பல்கலைக்கழகத்தில் சுயாதீனம், பல்கலைக்கழகங்களை தனியார்மயமாக்கல், கல்வி மீதான பொதுச் செலவு என்பன பற்றியே கூடுதல் கவனம் செலுத்தினோம். இவ்விடயங்கள் ஆழமாக பேசப்பட வேண்டிய விடயங்கள். ஆயினும் அது நடப்பதில்லை என அவர் கூறினார்.

பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்க சம்மேளனத்தின் உப தலைவர் வண. தம்பர அமில தேரர் தமது சங்கம் வேலை நிறுத்தத்தை நடத்தியே தீரும். என்ன நடந்தாலும் எத்தனை மிரட்டல் வந்தாலும் எம்மை தடுக்க முடியாது என கூறினார்.

இதேவேளை, நாட்டை நாஸி முறைமையில் ஆளுவது நிறுத்தப்பட வேண்டும். நாம் இதை இப்போது நிறுத்த வேண்டும் இது இனி மேலும் நடக்க அனுமதிக்க கூடாது என இச் சம்மேளனத்தின் உபதலைவரான வண. அமில தேரர் கூறினார்.

# கிழக்கில் மறு சீரமைப்பு
# முஸ்லிம் காங்கிரஸ் தீவிரம்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சி தனது கிளைக்குழுக்களை மறுசீரமைக்கும் பணிகளைத் தீவிரமாக்கியுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் திருகோணமலை மாவட்ட கிளைகளை மறுசீரமைப்பு செய்யும் நடவடிக்கை கடந்த புதன் கிழமை குச்சவெளி பிரதேசத்திற்குட்பட்ட கிளைகளின் மறுசீரமைப்பு வேலைகளில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் தனது ஆதரவாளர்களுடன் ஈடுபட்டிருந்தார்.

இதற்கமைவாக புல்மோட்டை, புடவைக்கட்டு, நிலாவெளி, குச்சவெளி, இக்பால் நகர் ஆகிய பிரதேசத்தில் மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்நிகழ்வில் கட்சித் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பிடிவிறாந்து நபர்கள் பலர் சுதந்திரமாகத் திரிகின்றனர்

(கொழும்பு)

நீதிமன்றங்களால் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட சந்தேக நபர்கள் சுதந்திரமாகச் சுற்றித் திரியும் நிலை இருக்கும் வரை நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட முடியாது என்று அமைச்சர் டியு குணசேகர தெரிவித்துள்ளார்.

எனவே திறந்த பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட குற்றவாளிகளுக்கு எதிராக நாடாளுமன்றம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென அமைச்சர் டியு குணசேகர கேட்டுக்கொண்டிருக்கிறார்.

குற்றச் செயல்களில் ஈடுபட்ட நபர்கள் சுதந்திரமாக திரிவதனை அனுமதிக்கக் கூடாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் பாரத லக்ஸ்மன் பிரேமசந்திரவிற்கான இரங்கல் உரை நிகழ்த்தும் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

திறந்த பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட நபர்கள் சுதந்திரமாக சமூகத்தில் சுற்றித் திரியும் சூழ்நிலை இருந்தால் நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட முடியாது என அவர் சுட்டிக்



காட்டியுள்ளார்.

இவ்வாறான நடவடிக்கைகள் குறித்து நாடாளுமன்றம் உன்னிப்பாக கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் வலியுறுத்தினார்.

# தினமும் கொள்ளை போகிறது இலங்கையின் கடல் வளங்கள்

### ஜனாதிபதி மகிந்த குற்றச்சாட்டு

இலங்கை கடற்பரப்பினுள் இழுவைப் படகுகளில் அத்துமீறிப் பிரவேசித்து மீன் வளங்களும், கடல் செல்வங்களும் கொள்ளையடித்துச் செல்லப்படுவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

பிறேசிலின் ரியோ டி ஜெனிரோவில் இடம்பெறும் ஐக்கிய நாடுகளின் ரியோ 20 மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளார்.

அவர் தனதுரையில் பாக்கு நீரிணையே பிரச்சினைக்குரிய பகுதியாகும்

அத்துடன், இலங்கை கடற்பரப்பினுள் இவ்வாறு அத்துமீறிப் பிரவேசிப்பவர்கள் மீது சர்வதேச கடல் சட்ட விதிகளின்படி நடவடிக்கை எடுக்க முடியும்.

அதேவேளை, உலகம் வெப்ப மயமாவதற்கு அபிவிருத்தி அடைந்த நாடுகளே காரணம் எனவும் ஜனாதிபதி தனதுரையில் குற்றம் சுமத்தியுள்ளார்.

உலகம் வெப்ப மயமாவது தீவுகளுக்கு பெரும்பாதிப்பை ஏற்படுத்தும் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அபிவிருத்தி அடைந்த நாடுகளின் இத்தகைய செயற்பாடுகளின் விளைவுகளை அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் அனுபவிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

# "கற்பனைக்கும் அப்பால்" மட்டக்களப்பில் கண்காட்சி

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி பிரதேசத்துக்குட்பட்ட பெரியகல்லாறு சூரியா விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் "கற்பனைக்கும் அப்பால்" எனும் தொனிப்பொருளிலான தொழில்நுட்ப, விஞ்ஞான, கல்வி மற்றும் வர்த்தக கண்காட்சி நடைபெற்று வருகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் முதன்முறையாக மாணவர்களின் கண்டுபிடிப்புக்களை உள்ளடக்கியதான மாபெரும் கண்காட்சியாக இது நடைபெற்று வருகின்றது.

பெரியகல்லாறு, உதயபுரம் தமிழ் வித்தியாலயத்தில் நடைபெறும் இக்கண்காட்சியை பிரதம அதிதியாக கலந்துகொண்டபட்டிருப்பு வலய கல்விப் பணிப்பாளர் என்.புள்ளநாயகம் திறந்துவைத்தார்.

சிறப்பு அதிதிகளாக கோட்டக்கல்விப் பணிப்பாளர் பி.பாலச்சந்திரன், பெரியகல்லாறு ஸ்ரீசர்வார்த்த சித்திவிநாயகர் ஆலய வண்ணக்கர் பேரின்பராசா, உதயபுரம் தமிழ் வித்தியாலய அதிபர் சி.பேரின்பராசா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்தக் கண்காட்சியில் பொறியியல், நில அளவைகள் திணைக்களம், பனைபொருள் திணைக்களம் என்பன தமது காட்சிக் கூடங்களை அமைத்திருந்தன.

# வயிற்றில் கட்டி வெடித்ததாலேயே சந்திரதாஸ் பேபி மரணமடைந்தார்

## திடீர் மரண விசாரணை அதிகாரி

(யாழ்ப்பாணம்)

வயிற்றில் கட்டி வளர்ந்து கட்டியில் சீழ் பிடித்து கட்டி வெடித்ததில் குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். சங்கானைப் பகுதியைச் சேர்ந்த சந்திரதாஸ் பேபி (வயது -43) என்ற குடும்பப் பெண்ணே உயிரிழந்தவராவார்.

இவரது கணவர் இத்தாலி நாட்டில் வசித்து வருகின்றார். இப்பெண் தனது இரண்டு பிள்ளைகளுடன் வசித்து வந்துள்ளார்.

மகள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரியில் உயர்தரம் படிக்கும் காரணத்தினால் இத்தாலி நாட்டில் இருந்து 2 மாதங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்திற்கு வந்துள்ளனர்.

தாயாரின் வயிற்றுக்குள் கட்டி இருப்பதை அறியாத காரணத்தினால் கட்டி பெரிதாக வளர்ந்து உடைத்து குடும்ப பெண் உயிரிழந்துள்ளதாக திடீர் மரண விசாரணை அதிகாரி உதயசிறி தெரிவித்தார்.

# கசூரினா கடற்கரைப் பகுதியில் மது அருந்தத் தடை விதிப்பு

(காரைநகர்)

காரைநகர் கடற்கரைப் பகுதியில் (கசூரினா) மது அருந்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

தற்போது இக் கடற்கரைப் பகுதிக்கு வரும் சுற்றுலாப்பயணிகள் மற்றும் இளைஞர்கள் மதுபானம் அருந்திவிட்டு தவறான நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும், குறிப்பாக மதுபானப் போத்தல்களை கடலில் வீசுவதாகவும், இதனால் அங்கு செல்லும் ஏனைய பொது மக்கள் பல்வேறு இடையூறுகளை அனுபவிப்பதை அடுத்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இக்கடற்கரைப் பகுதிக்கு யாராவது மதுபானங்கள் எடுத்துச் செல்வதாக அவதானிக்கப்படும் இடத்து அவற்றை கடமையில் இருக்கும் பொலிஸார் தடுத்து திருப்பி அனுப்பி விடுகின்றனர்.

மேலும் அதனைமீறி வாகனங்களில் மறைத்து உள்ளே எடுத்துச் சென்றால் அவர்களைக் கொண்டே அம் மதுபானங்கள் நிலத்தில் ஊற்றப்பட்டு அவர்கள் பொலிஸாரினால் திருப்பி அனுப்பப்படுகின்றனர்.

இவ்வாறான பொலிஸாரின் நடவடிக்கைகள் கலாசார சீரழிவுகள் மற்றும் தகாத செயற்பாடுகள், பொதுமக்களுக்கான இடையூறுகள் போன்றன ஏற்படுவது தடுக்கப்படுவதாகவும் இச் செயற்பாடுகள் வரவேற்கத்தக்கது எனவும் அப்பகுதி பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (50)

# தகவல் தொழில்நுட்ப அறிவை மாணவர்கள் மேம்படுத்த வேண்டும்

## கலாநிதி ஆறு.திருமுருகன்

(தெல்லிப்பளை)

தற்காலத்தில் விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் நவீன தொலைத்தொடர்பு சாதனங்கள் எமக்கு வரப்பிரசாதமாகக் கிடைத்துள்ளன. இவற்றை மாணவர்கள் கல்வி வளர்ச்சிக்காக சரியான முறையில் பயன்படுத்த வேண்டும் என யாழ்.ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்துள்ளார்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி உயர்தர மாணவர்களுக்கான ஒன்று கூடல் நிகழ்வு அண்மையில் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றபோது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், நான் அண்மையில் அவுஸ்ரேலியாவுக்குச் சென்றிருந்த வேளை அங்குள்ள பாடசாலை ஒன்றுக்கு சென்றிருந்தேன். அங்கு ஆசிரியரைக் காணவில்லை. மாணவர்கள தொலைக்காட்சியின் கல்வி ஒலிபரப்பு மூலம் கற்றுக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் நாங்கள் தொலைக்காட்சியை தொடர் நாடகங்கள் மற்றும் திரைப்படங்கள் பார்ப்பதற்குமே பயன்படுத்துகிறோம். தொலைக்காட்சியில் இடம்பெறும் செய்திகளைக் கூடப்பார்ப்பதில்லை. இவை மாறவேண்டும் மாணவர்கள் தொலைத்தொடர்பு சாதனங்கள் மூலம் அறிவதற்கான நல்ல விடயங்கள் நிறையவுள்ளன. இவற்றை மாணவர்கள் சரியான முறையில் பயன்படுத்தி தகவல் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்த வேண்டும்.

கல்வி கல்லறை வரை என்பார்கள். கல்வியைக் கற்க கற்க அறிவுவளரும். கல்விக்கு வயதோ எல்லையோ கிடையாது. நான் கற்று முடித்து விட்டேன் என்று ஒருவன் கருதினால் அவனது வளர்ச்சி அப்போதே நின்று விடும் எனத்தெரிவித்தார். (44)

# கண்சிகிக்சை முகாம்

(கற்சிலைமடு)

முல்லைத்தீவு- தண்ணீரூற்று பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவின் பல பகுதிகளிலும் இலவச கண்சிகிச்சை முக்காம்கள் நடாத்தப்பட்டு வருகின்றது.

இச் செயற்திட்டத்தின் ஓர் அங்கமாக கற்சிலைமடு அ.த.க. பாடசாலையின் ஒட்டுசுட்டான், கற்சிலைமடு, பேராறு, முத்தையன்கட்டு பகுதி மக்கள் பயன் அடையும் வகையில் இன்று இலவச சண்சிகிச்சை முகாம் ஒன்றை கண்சிகிச்சை வைத்திய நிபுணர்கள் மூலம் நடாத்தப்படவுள்ளது.

இக் கண்சிகிச்சை முகாமில் இப்பகுதி மக்களை கலந்து கொண்டு பயன்பெறுமாறு தண்ணீரூற்று பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (42)

# கிருஷ்ணபுரம் விளையாட்டுக்கழக அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி-கிருஷ்ணபுரம் விளையாட்டுக் கழகத்திற்கு பன் முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித்தலைவருமான மு. சந்திரகுமார் 75 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார்.

கிருஷ்ணபுரம், விநாயகபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களின் தேவைகள் குறித்த கலந்துரையாடலின் போதே மேற்குறித்த நிதி ஒதுக்கீடு சம்பந்தமாக தெரிவிக்கப்பட்டது.

இப்பகுதிலுள்ள மாதர் சங்கங்கள் கூட்டுறவு அடிப்படையில் செயற்பட்டு தொழில் முயற்சியில் ஈடுபட முன்வருமிடத்து இலகு கடன்களைப் பெற்றுத்தர முடியும் என நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

மேலும் வறுமைக் கோட்டிற்குட்பட்டவர்களின் வாழ்வாதாரம் கருதி சமுர்த்தி திட்டத்தில் அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் எனவும் குளப்புனரமைப்பு, முன்பள்ளி மைதானப்புனரமைப்பு போன்ற வற்றுக்கான நடவடிக்கைகளையும் நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கொண்டுள்ளார்.

# மின்தடை பற்றிய தகவல்

(யாழ்ப்பாணம்)

ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த மின்தடை பற்றிய செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்த இடங்களுக்கு மேலதிகமாக வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர்அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்யவேண்டியிருப்பதால் 24.06.2012 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரையும் யாழ். பிரதான வீதியில் நீதிமன்ற பிரதேசம் முதல் கச்சேரிப் பிரதேசம் வரையான இடங்களிலும், கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி, கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப்பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவ பீடப்பிரதேசம், ஆடியபாதம் வீதி, கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம், இணுவில், மருதனார்மடம், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், கட்டுடை, தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, கோண்டாவில், கோம்பயன்மணல் பிரதேசம், தட்டாதெரு பிரதேசம், கொட்டடி, நாவாந்துறை, மீனாச்சிபுரம், காக்கைதீவு, குருநகர், பாசையூர். 25.06.2012 திங்கட்கிழமை, 27.06.2012 புதன்கிழமை 29.06.2012 வெள்ளிக்கிழமை 01.07.2012 ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரையும்.

புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம், சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயப்பகுதி, மல்லாகம், தெல்லிப்பளை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், யாழ். பிரதான வீதியில் நீதிமன்ற பிரதேசம் முதல் கச்சேரிப் பிரதேசம் வரையான பிரதேசம் ஆகிய இடங்களில் 26.06.2012 செவ்வாய்க்கிழமை, 28.06.2012 வியாழக்கிழமை, 30.06.2012 சனிக்கிழமை ஆகிய தினங்களிலும் உரும்பிராய், கோண்டாவில், மருத்துவ பீடப்பிரதேசம், திருநெல்வேலிப்பிரதேசம், யாழ். நகரம் முழுவதும் ஆகிய இடங்களில் 30.06.2012 சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரையும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.



காரைநகர் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த இரதோற்சவம் அண்மையில் நடைபெற்றது. இதில் பக்தர்கள் தேங்காய் உடைப்பதையும், விநாயகப்பெருமான் தேரில் வீதியுலா வருவதையும் காணலாம். (50)

# முரசின் இன்றைய பலன்

(24.06.2012 -ஞாயிற்றுக்கிழமை

நந்தன வருஷம் ஆனி மாதம் 10 ஆம் திகதி. பஞ்சமி முன் இரவு 9.48 வரை.
நட்சத்திரம் மகம். மரணயோகம் பின்னிரவு 4.55 வரை. ஸ்கந்த பஞ்சமி.
இராகுகாலம் 4.25 - 5.55 வரை. சுபநேரம் 8.55 - 10.25 வரை.
எமகண்டம் 11.55 - 1.25 வரை. குளிகைகாலம் 2.55 - 4.25 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | கேளிக்கைகளில் ஈடுபாடு, தொழில்துறையில் நட்டம், முதலீடுகளைத்தவிர், செலவுகள். |
| ரிஷபம் | பாராட்டு, பெற்றோருடன் முரண்பாடு, சண்டை சச்சரவு தேடிவரும், முன்னேற்றத்தில் தடை. |
| மிதுனம் | வாழ்க்கையில் உயர்வு, மனதில் நம்பிக்கை, வெளிவட்டாரப் பழக்கம், பாராட்டுக்கள். |
| கடகம் | நன்மைகள், சகோதரர் ஒத்துழைப்பு, முயற்சிகளில் வெற்றி, பிரயாண அனு கூலம். |
| சிம்மம் | ஞாபகமறதி, இழுபறி நிலை ஏற்படும், நண்பர்கள் விடயத்தில் அவதானம். |
| கன்னி | பகை அதிகரிப்பு, அனுபவ உற்சாகம், வருவாயில் உயர்வு, ஸ்தலயாத்திரை. |
| துலாம் | புத்திரபாக்கியம், முயற்சியில் வெற்றி, அரச உதவிகள் கிட்டும், நினைத்தது நிறைவேறும். |
| விருச்சிகம் | புத்தி மேன்மை, வாழ்க்கையில் ஏமாற்றம், வெளிவட்டாரப்பழக்கம், பெற்றோரால் செலவு. |
| தனுசு | பணவரவு, உறவினர் அனு கூலம், ஒப்பந்த வேலையில் இலாபம், கல்வியில் வெற்றி. |
| மகரம் | சந்திராட்டமம்புதுமுயற்சி கூடாது, பயண அலைச சல், தடைகள் அகலும், திருமணம் கை கூடும். |
| கும்பம் | மனதில் குழப்பம், திடீர்தனவரவு, காலங் கடந்த கடன் குறையும், வாழ்க்கையில்சந்தோஷம், |
| மீனம் | உறவினர் சகாயம், குடும்பத்தில் சந்தோஷம், விரும்பிய இடமாற்றம், சுபச்செய்திகள். |

### ஜெயரூபன், பங்குஜன் அதிரடி ஆட்டம்

# ஜே.பி.எல். கிண்ணத்தை வசப்படுத்தியது கே.சி.சி.சி.




படப்பிடிப்பு : சுரேஷ்

(யாழ்ப்பாணம்)

ஜெயரூபன், பங்குஜன் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் ஜே.பி.எல். ருவென்ரி - 20 கிரிக்கெட் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை கொக்குவில் கே.சி.சி.சி. அணி கைப்பற்றியது.

யாழ். மாவட்டத்திலுள்ள இளம் வீரர்களை வளர்க்கும் நோக்கில் அவ பிரண்ட் பௌன்டேஷன் நிறுவனத்தினால் நடத்தப்பட்ட யாழ்ப்பாண பிறிமியர் லீக் (ஜே.பி.எல்.) ருவென்ரி - 20 கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி நேற்றைய தினம் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டித் தொடரில் யாழ். மாவட்டத்திலுள்ள எட்டு முன்னணி அணிகள் பங்குகொண்டபோதும் கொக்குவில் கே.சி.சி.சி. மற்றும் யாழ். சென்றலைட்ஸ் அணிகள் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றன.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். சென்றலைட்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து. இறுதிப் போட்டி என்ற பதற்றம் இரு அணிகளுக்கும்இருந்தபோதும்முதலில் துடுப்பாட வந்த சென்றலைட்ஸ் அணிக்கு அதிகம் இருந்ததாகவே தெரிந்தது. ஏனெனில் கொக்குவில் கே.சி.சி.சி. அணியின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் தடுமாறிய சென்றலைட்ஸ் ஒரு சீரான இடைவெளியில் விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. அரையிறுதியில் தொடர்ந்து நான்கு சிக்ஸர்கள் அடித்து அணியை வெற்றிப் பாதைக்கு இட்டுச் சென்ற எட்வேட் எடினின் ஆட்டமிழப்பு சென்றலைட்ஸ் அணிக்குப் பெரும் பின்னடைவாகவே அமைந்தது. இருப்பினும், மாதுசனன், கோகுலன், செல்ரன் ஜேணாசன் ஓரளவு சிறப்பான முறையில் ஆடி அணியைக் கௌரவமான ஓட்ட எண்ணிக்கையைப் பெற துணைபுரிந்தனர். இறுதியில் சென்றலைட்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 134 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மாதுசனன் ஒரு சிக்ஸர், இரண்டு பவுண்டரிகள் அடங்கலாக 21 ஓட்டங்களையும், கோகுலன், செல்ரன், ஜேணோசன் ஆகியோர் தலா 16 ஓட்டங்களையும், வினோத் ஆட்டமிழக்காது 10 ஓட்டங்களையும், மதூசனன் 11, பிரசாத் 09 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் உமாகாந், பிரதீசன், கிருபவன், சாம்பவன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 135 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் கொக்குவில் கே.சி.சி.சி. அணி களமிறங்கியது. லீக் ஆட்டத்தில் அடைந்த தோல்விக்குப் பழி தீர்க்கும் வகையிலும், இறுதிப் போட்டியில் வெல்ல வேண்டும் என்ற முனைப்புடனும் களமிறங்கிய ஆரம்ப வீரர்களான ஜெயரூபன், பங்குஜன் இணை சென்றலைட்ஸ் வீரர்களின் பந்து வீச்சை நாலாபுறமும் பறக்கவிட்டனர். ஜெயரூபன், பங்குஜன் இணையின் அதிரடி ஆட்டம் கொக்குவில் கே.சி.சி.சி. அணியின் வெற்றியை உறுதி செய்ததுடன் கிரிக்கெட் இரசிகர்களையும் மகிழவைத்தது. இறுதியில்கொக்குவில் கே.சி.சி.சி. அணி 15.4 ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ஜெயரூபன் 48 பந்துகளை எதிர்கொண்டு ஆறு சிக்ஸர்கள், ஐந்து பவுண்டரிகள் அடங்கலாக 74 ஓட்டங்களையும், பங்குஜன் மூன்று பவுண்டரிகள் அடங்கலாக 21 ஓட்டங்களையும் பெற்று அணியின் வெற்றிக்குத் துணை புரிந்தனர். அத்துடன் இந்த இணை இணைப்பாட்டமாக 65 ஓட்டங்களைப் பெற்றது. பந்து வீச்சில் கோகுலன் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார். இதன் மூலம் ஜே.பி.எல். ருவென்ரி - 20 கிரிக்கெட் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை கே.சி.சி.சி. அணி கைப்பற்றிக் கொண்டது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக கே.சி.சி.சி. அணியைச் சேர்ந்த ஜெயரூபனும், தொடரின் ஆட்டநாயகனாக ஜொலிஸ்ரார் அணித் தலைவர் சைலோஸ்வரனும், போட்டித் தொடரின் சிறந்த களத்தடுப்பாளராக ஜொலிஸ்ரார் அணியைச் சேர்ந்த சந்திரவதனனும், தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரராக கொக்குவில் கே.சி.சி.சி. அணியைச் சேர்ந்த ஜெயரூபனும், தொடரின் சிறந்த பந்து வீச்சாளராகஜொலிஸ்ரார் அணியைச் சேர்ந்த சைலோஸ்வரனும் தெரிவு செய்யப்பட்டனர். இதேவேளை,இந்தப் பரிசளிப்பு நிகழ்வின் போது 17 வயதுப் பிரிவில் தேசியரீதியில் நான்காமிடம் பிடித்துக் கொண்ட யாழ். இந்துக் கல்லூரி அணிக்கு விசேட பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இப்போட்டியின் நிகழ்வில், இலங்கை அணியின் முன்னாள் அணித் தலைவர் அர்சுண ரணதுங்க, கைத்தொழில் அபிவித்தி அமைச்சர், யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி ஹத்துருசிங்க,யாழ்.மாவட்ட பொலிஸ் அத்தியசகர், வடமாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் அண்ணாத்துரை உட்பட துறைசார் அதிகாரிகள், பயிற்றுநர், வீரர்கள், கிரிக்கெட் ரசிகர்கள் எனப் பலர் கலந்துகொண்டு போட்டியைக் கண்டு களித்தமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி., 20, 42)

## யூரோ கிண்ண கால்பந்து அரையிறுதியில் ஜேர்மனி

யூரோ கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகளில் நேற்று முன்தினம் இடம்பெற்ற காலிறுதிப் போட்டியில் ஜேர்மனி அணி வெற்றிபெற்றுள்ளது. கிரேக்க அணிக்கெதிராக இடம்பெற்ற இப்போட்டியில் ஜேர்மனி அணி 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுள்ளது.

இப்போட்டியில் முழுமையான ஆதிக்கத்தை வெளிப்படுத்திய ஜேர்மனி அணி ஆட்டத்தின் 39ஆவது நிமிடத்தில் முதலாவது கோலைப் பெற்றுக் கொண்டது. முதற்பாதியில் வேறு கோல்கள் பெறப்படாத நிலையில் 1-0 என்ற கணக்கில் ஜேர்மனி அணிக்குச் சாதகமாக முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆரம்பித்ததும் போட்டியின் 55ஆவது நிமிடத்தில் கிரேக்க அணி சார்பாக சமராஸ் கோலொன்றைப் பெற்றுக் கொடுக்க கோல் எண்ணிக்கை 1-1 என்ற கணக்கில் சமப்பட்டது.

எனினும் மேலும் சிறப்பாக ஆடிய ஜேர்மனி 61ஆவது நிமிடத்தில் போட்டியில் இரண்டாவது கோலை அடித்தது. அதனை அடுத்து 68ஆவது நிமிடத்தில் மூன்றாவது கோலை அடித்த அவ்வணி, 74ஆவது நிமிடத்தில் 4ஆவது கோலை அடிக்க ஜேர்மனி அணி 4-1 என்ற கணக்கில் முன்னிலை வகித்தது.

போட்டி நிறைவடைய சற்று நேரத்துக்கு முன் கிடைத்த பெனால்ட்டி உதை வாய்ப்பை சரியாகப் பயன்படுத்திய கிரேக்க அணி அதைக் கோலாக்கிய போதிலும் போட்டியில் தோல்வியடைவதைத் தடுக்க முடியவில்லை.

போட்டியில் ஜேர்மனி அணி 4-2 என்ற கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

இப்போட்டியில் 66 சதவீதமான பந்துப்பரிமாற்றங்கள் ஜேர்மனி அணியால் மேற்கொள்ளப்பட்டதோடு, அதிக கோல் பெறும் வாய்ப்புக்களும் ஜேர்மனி அணியாலேயே மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கையுடனான காலி டெஸ்ட் திணறுகின்றது பாகிஸ்தான்

(காலி)

இலங்கை அணிக்கெதிரான காலி டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி திணறி வருகின்றது. இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி காலி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 300 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டத்தை இலங்கை அணி தொடர்ந்தது. குமார் சங்கக்கார ஒருபுறம் தனது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்த அதேவேளை, மறுபுறத்தில் இலங்கை அணியில் விக்கெட்டுக்கள் விரைவாக வீழ்தப்பட்டது. இருப்பினும் சங்கக்காரவுடன் பிரசன்ன ஜெயவர்த்தன இணைப்பாட்டம் ஒன்றை ஏற்படுத்தியபோதும் அந்த இணையும் பிரிக்கப்பட்டது. இறுதியில் இலங்கை அணி முதலாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 472 ஓட்டங்களைப் பெற்றது. இதில் குமார் சங்கக்கார ஆட்டமிழக்காது 199 ஓட்டங்களைப் பெற்று ஒரு ஓட்டத்தினால் இரட்டைச் சத வாய்ப்பை இழந்தார். மற்றும் டில்சான் 101, மஹேல ஜெயவர்த்தன 62, பிரசன்ன ஜெயவர்த்தன 48 ஓட்டங்களைப் பெற்றனர. பந்து வீச்சில் சயிட் அஜ்மல் ஐந்து விக்கெட்டுக்களையும், மொகமட் ஹபீஸ் மூன்று விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய பாகிஸ்தான் அணி, குலசேகர மற்றும் ரண்டீவ் ஆகியோரின் பந்து வீச்சை எதிர்கொள்ளத் திணறிவருகின்றது. நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை பாகிஸ்தான் அணி ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 48 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் மொகமட் ஹபீஸ் 20 ஓட்டங்களைப் பெற்றார். ஏனைய வீரர்கள் சொற்ப ஓட்டத்துடன் ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் குலசேகர, ரண்டீவ் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். ஐந்து விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் பாகிஸ்தான் அணி 428 ஓட்டங்களால் பின்னிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.



வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற சதுரங்கப் போட்டியில் 19 வயதுப் பிரிவில் முதலிடம் பிடித்த பருத்தித்துறை ஹாட்ரிக் கல்லூரி அணியினரைக் காணலாம்.

# கிண்ணம் வெல்ல அதிக வாய்ப்பு

(வார்ஷா)

யூரோ கிண்ண கால்பந்துத் தொடரில் கிண்ணம் வெல்ல வாய்ப்பு தமக்கு அதிகம் இருப்பதாக போர்த்துக்கல் அணியின் நட்சத்திர வீரர் கிறிஸ்டினா ரொனால்மோ தெரிவித்தார்.

காலிறுதி ஆட்டத்தில் வெற்றி பெற்ற பின் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், காலிறுதிப் போட்டியில் குடியரசு அணியை வீழ்த்தியது சிறப்பானது. இருப்பினும் அடுத்து அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகளில் விளையாடும் வாய்ப்பு எமக்கு அதிகம் இருப்பதாகவே கருதுகின்றோம். காலிறுதி ஆடியது போன்று ஏனைய ஆட்டங்களில் ஆடும் பட்சத்தில் யூரோ கிண்ணம் வெல்ல அதிக வாய்ப்பு எமக்கு இருக்கும் என்றே கருத்துகின்றேன்.

முதல் கட்டம் அரையிறுதியில் வென்று இறுதிப் போட்டிக்குத் தெரிவாவதே எமது தற்போதைய இலக்கு. அதை நிச்சயம் நாம் அடைவோம் என்ற நம்பிக்கை உள்ளது என்றார்.

# சிறந்த கழகமாக "போர் ஸ்ரார்" தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேச செயலகப் பிரிவுக் குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக் கிடையே நடாத்தப்பட்ட மெய்வல்லுனர் போட்டிகளில் ஆகக்கூடிய பிரிவுகளில் வெற்றியீட்டி 2012 ஆம் ஆண் டிற்கான சம்பியனாக "போர் ஸ்ரார்" விளையாட்டுக்கழகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

பல போட்டிகளிலும் திறமையாக போர் ஸ்ரார் விளையாட்டுக்கழகம் எல்லை, வலைப்பந்து மற்றும் பெண்களுக்கான மெய்வல்லுனர் போட்டிகளில் சம்பியனாக வந்ததுடன் ஆண்களுக்கான மெய்வல்லுனர் போட்டிகளில் ரண்ணர்ஸ் அப் தரத்தையும் பெற்றுக்கொண்டது.

கடந்த பத்தாண்டுகளாக (2002-2011) போர்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் மெய்வல்லுனர் போட்டிகளில் சம்பியன் பட்டத்தை பெற்றுவரும் நிலையில் இந்த ஆண்டு அனைத்துப் பிரிவுகளுக்குமான சம்பியன் தரத்தை பெற்றிருப்பது சிறப்பானதாகும்.

2009 ஆம் ஆண்டில் நடைபெற்ற தேசிய ரீதியான உயரம் பாய்தல் போட்டியில் போர் ஸ்ரார் விளையாட்டுக்கழக உறுப்பினர் கஜிதா என்பவர் வெள்ளிப்பதக்கத்தை பெற்றுக்கொண்டது குறிப்பிடத்தக்கதாகும்.

# வடமாகாண மேசைப்பந்து; யாழ்., வவுனியா ஆதிக்கம்

(மன்னார்)

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப்போட்டிகளில் மேசைப்பந்துப் போட்டியில் 15 வயதுப் பிரிவில் வவுனியா வடக்கு வலயம் இரு பிரிவுகளிலும் முதலாமிடத்தினைப் பெற்றுள்ள அதேவேளை, 19 வயதுப் பிரிவு ஆண், பெண்கள் பிரிவில் யாழ். மாவட்டப் பாடசாலைகள் ஆதிக்கம் செலுத்தியுள்ளது.

மன்னார் சென். சேவியர் ஆண்கள் கல்லூரியில் கடந்த திங்கட்கிழமை இப்போட்டி நடைபெற்றது. இப்போட்டி முடிவுகள் வருமாறு:

15 வயதுப்பிரிவு ஆண்கள்

முதலாமிடம் – சுந்தரபுரம் அ.த.க.பாடசாலை வவுனியா வடக்கு வலயம், இரண்டாமிடம் – யாழ். மத்திய கல்லூரி யாழ்ப்பாண வலயம், மூன்றாமிடம் – சென். சேவியர் ஆண்கள் கல்லூரி மன்னார் வலயம்.

15 வயதுப்பிரிவு பெண்கள்

முதலாமிடம் – சுந்தரபுரம் அ.த.க.பாடசாலை வவுனியா வடக்கு வலயம், இரண்டாமிடம் – யூனியன் கல்லூரி வலிகாமம் வலயம், மூன்றாமிடம் – சுண்டுக்குழி மகளிர் கல்லூரி யாழ்ப்பாண வலயம்.

19 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு

முதலாமிடம் – யாழ். மத்திய கல்லூரி யாழ்ப்பாண வலயம், இரண்டாமிடம் சுந்தரபுரம் அ.த.க. பாடசாலை வவுனியா வடக்கு வலயம், மூன்றாமிடம் சென். சேவியர் ஆண்கள் கல்லூரி மன்னார் வலயம்.

19 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு

முதலாமிடம் – யூனியன் கல்லூரி வலிகாமம் வலயம், இரண்டாமிடம் – உரும்பிராய் இந்துக்கல்லூரி யாழ்ப்பாண வலயம், மூன்றாமிடம் – சுந்தரபுரம் அ.த.க.பாடசாலை வவுனியா வடக்கு வலயம்.

# ஒப்பந்தப் பட்டியல் அறிவிப்பு

நியூசிலாந்துக் கிரிக்கெட் அணிக்கான2012 –13 பருவகாலத்திற்கான தேசிய ஒப்பந்தப் பட்டியல் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் 20 வீரர்களுக்கான ஒப்பந்தப் பட்டியல் அறிவிக்கப்பட்டுள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ள ஒப்பந்தப் பட்டியலில் டீன் பிறெளண்லி, டக் பிரேஸ்வெல், அன்ட்ரூ எலிஸ், தருண் நெதுலா, க்ரூகர் வான் வைக் ஆகியோர் முதன்முதலாக ஒப்பந்தத்தில் இணைப்பட்டுள்ளதோடு, கடந்த வருடம் ஒப்பந்தம் வழங்கப்படாது விடப்பட்ட சகலதுறை வீரரான ஜேம்ஸ் பிராங்ளினுக்கு இவ்வாண்டுக்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த நியூசிலாந்துக் கிரிக்கெட் சபையின் தேசிய தெரிவு முகாமையாளர் கிம் லிட்டில்ஜோன், தெரிவுசெய்யப்பட்டுள்ள வீரர்கள் எதிர்வரும் ஒரு – வருட காலத்திற்கு நியூசிலாந்து அணிக்கு அதிகளவு பங்களிப்பை வழங்கக்கூடியவர்களாகக் காணப்படுகிறார்கள் எனத் தெரிவித்தார். இந்த ஒப்பந்த வீரர்களுக்கான தெரிவில் லிட்டில்ஜோன் மற்றும் ஜோன் புக்கனன் ஆகியோரே ஈடுபட்டிருந்தனர்.

கடந்த மாதம் அறிவிக்கப்பட்டிருந்தபடி நியூசிலாந்து அணியின் சர்ச்சைக்குரிய அதிரடி ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் ஜெஸி ரைடருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருக்கவில்லை. மன அழுத்தம் மற்றும் ஒழுக்கவீனங்கள் காரணமாக அவர் கிரிக்கெட் போட்டிகளிலிருந்து தானாக தற்காலிக ஓய்வொன்றை எடுத்து வருகிறார்.

எதிர்பார்க்கப்பட்ட வீரர்களில் வேகப்பந்து வீச்சாளர் மார்க் கிலெஸ்பிக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருக்கவில்லை. 3 வருடங்களுக்குப் பின்பு அண்மையில் இடம்பெற்ற தென்னாபிரிக்கத் தொடருக்காக அழைக்கப்பட்டிருந்த மார்க் கிலெஸ்பி, அத்தொடரில் மிகச்சிறப்பாகப் பந்துவீசியிருந்தபோதிலும் அவருக்கு ஒப்பந்தம் வழங்கப்படவில்லை.

ஒப்பந்த வீரர்கள்:

ட்ரென்ட் போல்ட், டக் பிரேஸ்வெல், டீன் பிறெளண்லி, அன்ட்ரூ எலிஸ், டானியல் ஃபிளைன், ஜேம்ஸ் பிராங்ளின், மார்ட்டின் கப்ரில், கிறிஸ் மார்ட்டின், பிரென்டன் மக்கலம், நேதன் மக்கலம், கைல் மில்ஸ், தருண் நெதுலா, ரொப் நிக்கல், ஜேக்கப் ஓரம், ரிம் சௌதி, ரொஸ் ரெய்லர், க்ரூகர் வான் வைக், டானியல் விட்டோரி, பி.ஜே. வற்லிங், கேன் வில்லியம்ஸன்.

# வளர்ந்து வரும் கிரிக்கெட் வீரர்களை கண்டறிவதற்குப் பயிற்சி முகாம்



படப்பிடிப்பு : சுரேஷ்

(யாழ்ப்பாணம்)

தேசிய ரீதியில் அடி மட்டத்திலிருந்து வளர்ந்து வரும் கிரிக்கெட் வீரர்களை கண்டறியும் முகமாக கொக்கக்கோலா நிறுவனத்தின் மூன்றாவது பயிற்சி முகாம் நேற்று முன்தினம் யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் அரவிந்தடிசில்வா அறக்கட்டளை நிலையத்தின் தலைவரும், முன்னாள் இலங்கை அணித் தலைவருமாகிய அரவிந்த டி சில்வாவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இன்று வரை நடைபெறவுள்ள இந்த மூன்று நாள் பயிற்சி முகாமில் சுமார் 72 வடபகுதி மாணவர்கள் கலந்து கொள்கின்றனர்.

இப்பயிற்சி முகாமில் இருந்துதெரிவு செய்யப்படும் பத்து வீரர்களில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறும் வீரர்கள் தேசிய அணியில்இடம் பெற ஏற்பாடுகள் செய் யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் 1.00 மணியளவில் யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரியில் ஆரம்பமாகிய இந்நிகழ்வில் அரவிந்த டி சில்வா, இலங்கை இராணுவத்தின் 51ஆவது படைப் பிரிவின் தளபதி விக்கிரமரட்ண, கொக்கக்கோலாவின் சந்தைப்படுத்தல் அதிகாரி சாந்த பெர்னாண்டோ மற்றும் கொக்கக்கோலா நிறுவன அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

விளையாட்டுச் செய்திகள்

இப்பயிற்சி முகாமின்போது வீரர்களுக்கு அரவிந்த டி சில்வா மற்றும் மாவட்டப் பயிற்சியாளர்கள் பயிற்சிகளை வழங்குகின்றனர். இப்பயிற்சி முகாமின் இறுதி நாள் நிகழ்வுகள் இன்றைய தினம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(பா, 20)

# விசா மறுப்பு

(லண்டன்)

லண்டன் ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொள்வதற்கு சிரிய ஒலிம்பிக் குழுவின் தலைவருக்கு வீசா அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக பி.பி.சி செய்தி வெளியிட்டுள்ளது.

சிரிய ஜனாதிபதி அசாட்டுடன் தொடர்புகளைக் கொண்டுள்ளதால், அவரது வீசா விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானம் வெளிவிவகார, உள்விவகார அலுவலகம், கலாசாரம், விளையாட்டு மற்றும் ஊடக திணைக்களங்களின் சிரேஷ்ட அதிகாரகளுடன் கலந்தாலோசிக்கப்பட்டதன் பின்னர் எடுக்கப்பட்டதாக தகவல்கள் குறிப்பிடுகின்றன.



# பாதுகாப்பு காரணங்களுக்காக காணிகளை சுவீகரித்தல்

**– சாலையூரான் –**

வடக்கே பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் பேணிக் கொள்வதற்கான ஒரு முன்னேற்பாடாக தமக்கான காணிகளை பாதுகாப்புத் தரப்பினர் பெற்றுக் கொள்ள மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் தமிழ் மக்கள் மத்தியில் சர்ச்சைக்குரிய ஒரு விவகாரமாக உருவெடுத்திருக்கின்றன.

குடிமக்களின் அசைவற்ற ஆதனமாக அவர்களின் எதிர்கால இருப்புக்கும் வாழ்வுக்கும் அடித்தளமாக இருந்துவரும் இந்த நிலப்பகுதிகள், படையினருக்கான காணிகளைப் பெற்றுக் கொள்ளும் முயற்சிகளை அடுத்து, தம் எதிர்காலச் சந்ததியின் பயன்பாட்டுக்காக இந்நிலங்கள் கிடைக்காமற் போய்விடுமோ என்கிற ஒரு அச்சம் கலந்த சந்தேகம் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

சாராம்சத்தில் இக்காணி விடயத்தை தமிழ் மக்கள் சர்ச்சையாக நோக்குவதற்கான பிரதான காரணம் தமது நிலங்களிலிருந்து தம்மை அப்புறப்படுத்த பாதுகாப்புத் தரப்பினர் முயற்சிகளை மேற்கொள்வதாக சந்தேகம் கொண்டிருப்பதாகும்.

இந்த விவகாரத்தில் ஒரு இடைத்தலையீடாக வந்துநிற்பது சர்வதேசத்தை தொடர்புபடுத்தி தமிழ் மக்கள் அரச விரோத சக்திகளாகப் பார்க்கப்படும் நிலையும், தமிழ்த் தலைவர்கள் என்று கூறப்படுவோர் தேசத்துரோகிகள், இவர்களுக்கு எதிராக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தென்னிலங்கை தரப்புகளால் சித்திரிக்கப்படும் ஒரு சூழ்நிலையில் இக்காணி விவகாரமும் முனைப்புப் பெற்றிருப்பதாகும்.

இதேவேளை, இந்த விவகாரத்தை தனியொரு விடயமாக ஆராய முடியாதளவிற்கு பல சம்பவங்கள் அண்மைக் காலத்தில் இக்காணி விடயத்துடன் தொடர்புபட்டதாக நிகழ்ந்திருக்கின்றன.

குறிப்பாக வடக்கு மாகாண சபைக்கு அதிகாரங்கள் பற்றிய பேச்சுக்களில் அதற்கான காணி அதிகாரத்தை வழங்குவது குறித்து இரு இனங்கள் மத்தியிலும் தவறான பிரசாரங்கள் ஊடகங்களால் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன.

இதன் மறுவிளைவாக காணி அதிகாரங்களை வழங்குவது வடக்கை தமிழர்களிடம் தாரைவார்ப்பதற்கான ஒரு நிகழ்வாகவே அமையும் என தென்னிலங்கை இனவாத சக்திகள் கூச்சலிடுவதிலேயே இவ்விவகாரம் சென்று முடிந்திருக்கின்றது.

மறுபுறத்தில் தமிழ் மக்கள் இழந்துள்ள நிலப்பகுதிகள் என்ற வகைக்குள் உயர்பாதுகாப்பு வலயங்களில் பல பகுதிகள் இன்றும் மக்களின் பாவனைக்கு அனுமதிக்கப்படாத நிலையில் இருந்து வருகின்றன.

அங்கு வாழ்ந்த மக்கள் வெளியே தமது உறவினர்கள் வீடுகளிலும், வெளிமாவட்டங்களிலும் வாழ்ந்து வரும் நிலையில், தம்மை மீளவும் தம் சொந்த இடங்களில் குடியமர்த்துமாறு வேண்டுதல் விடுத்த வண்ணமுள்ளனர்.

இதனைவிட போருக்குப் பிந்திய மூன்று ஆண்டுகாலத்தில் இடப்பெயர்வுக்குள்ளான ஒரு தொகுதி குடும்பங்கள் தமது சொந்த நிலங்களுக்கு இன்னமும் திரும்பமுடியாது இடைத்தங்கல் முகாம்களில் வாழ்ந்துவரும் நிலையில் - சொந்த வாழ்விடங்களுக்கு மீளவும் திரும்பமுடியுமா என்ற நம்பிக்கையை இழந்துள்ள ஒரு சூழலில் பாதுகாப்புத் தரப்பினரின் இக்காணி சுவீகரிப்பு விவகாரமும் அவர்கள் முன்னால் ஒரு சர்ச்சையாக வந்து நிற்கின்றது.

இதற்குப் புறம்பாக குடாநாட்டில் இன்று தமக்கான சொந்தக் காணிகள் எதுவுமில்லாது பிறரது நிலங்களில் நீண்டகாலம் வாழ்ந்து வரும் வறிய மக்களின் காணியில்லாப் பிரச்சினையும் கணிசமானதாக இருக்கின்றது.

இந்த மக்கள் பொருத்தமான இடங்களில் உரிய முறையில் குடிமர்த்தப்படாமையால் அரசினால் வழங்கப்படும் வீடுகளை நிர்மாணிப்பதற்கான உதவித்திட்டங்கள் எதனையும் பெறமுடியாத நிலையில் தமக்கான நிரந்தர வதிவிட வசதியை இழந்த நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

பிந்தியதாக பௌத்த ஆலயங்களை நிர்மாணிக்கவென மேற்கொள்ளப்படும் நிலவொதுக்கீடுகளினூடே பாதுகாப்புத் தரப்பினருக்கான புதிய நிலவொதுக்கீடுகளும் சேர்ந்து தமது வாழ்விடச் சூழல் பற்றிய மிகையான சந்தேகங்கள் அச்சங்கள் தமிழ் மக்களுக்கு இப்போது ஏற்பட்டு இருக்கின்றன.

மொத்தத்தில் போருக்குப் பின் சுதந்திரமாக வாழ்வதற்கும் அன்றாட தேவைகளை நிறைவு செய்வதற்குமான வாய்ப்புக்களை அரசு ஏற்படுத்தி தருவதற்கு பதில் மேலும் தம்மை சூழவுள்ள இடங்களையும் இழந்து தாம் ஏதிலிகளாக்கப்பட்டு விடுவோமோ என தமிழ் மக்கள் சிந்திக்கின்ற சூழலை படையினருக்கான இக்காணி சுவீகரிப்பு விவகாரம் ஏற்படுத்தியிருக்கின்றது.

இதுவிடயத்தில் தமக்கான நிலங்களை உரித்தாக்கிக் கொள்ளும் தேவை பாதுகாப்புத் தரப்பிற்கு இப்போது ஏன் ஏற்பட்டிருக்கின்றது என்ற கேள்வியும் இங்கே தவிர்க்க முடியாததாகும்.

குறிப்பாக போர்ச்சூழலில் நடைபெற்ற தவறுகளுக்காக தமிழ்மக்களுக்கு பொறுப்பு கூறுவது என்பதை விட சர்வதேசத்தின் முன் பொறுப்பு கூற இலங்கை நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கும் ஒரு நிலைமையும் இக்காணி விவகாரத்தில் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கின்றது.

வடக்கே தமிழர் பகுதிகளிலிருந்து படையினரை விலக்கிக் கொள்ள வேண்டும் என்ற சர்வதேசத்தின் அழுத்தங்கள் ஒருபுறமும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயர்மட்டக்குழுவை இலங்கைக்குள் அனுமதிக்க வேண்டும் என அமெரிக்கா மறுபுறத்திலும் இலங்கை அரசிற்கு கொடுத்து வரும் அழுத்தங்களும் வடக்கின் மீதான அரசின் நிர்வாக மேலாண்மை குறித்து நிச்சயமற்ற ஒரு நிலையை இலங்கை அரசிற்கு ஏற்படுத்தியிருக்கிறது.

ஒரு சந்தர்ப்பத்தில் பாதுகாப்பு நிலைகளை மாற்றியமைக்க வேண்டும் அல்லது நிலைகளை தளர்த்த வேண்டுமென்கிற சர்வதே[illegible] நிர்ப்பந்தங்கள் வலுப்பெறும் போது பெற்றுக் கொள்ள முனையும் சட்டரீதியான இக்காணி உரிமங்கள் தமது பாதுகாப்பு நோக்கங்களுக்கு உதவியாக அமையும் எனச் சிந்திக்கும் நிலை அரசுக்கு ஏற்பட்டிருக்கலாம்.

இந்த முயற்சி சரியானதா அன்றி தவறானதா என இங்கே ஆராய்வதைவிட உண்மையான இன நல்லிணக்கத்தை குறைந்தபட்சமாவது அனைத்து இன மக்களிடையே ஏற்படுத்தும் அரசின் முயற்சிகள் பலனளிப்பதாக அமையவேண்டும் என்பதே அனைத்து தரப்பினரதும் பெருவிருப்பமாகும்.

அதனை செவிமடுக்காது வடக்கே தமிழர்கள் வாழும் பகுதிகளில் ஒருதலைப்பட்சமாக அரசு மேற்கொள்ளும் முயற்சிகள் இனங்களிடையே மேலும் பிளவை வலுப்படுத்துவதில் சென்று முடியுமே தவிர வேறு எதுவும் நிகழ்ந்தேறப் போவதில்லை.

# குமுதம் பிரார்த்தனை கிளப்



**– யுவகிருஷ்ணா –**

குமுதம் "பிரார்த்தனை கிளப்" என்கிற பகுதியை இந்த தலைமுறை குமுதம் வாசகர்கள் எவ்வளவு பேர் அறிந்திருப்பார்கள் என்று தெரியவில்லை. ஆசிரியர் எஸ்.ஏ.பி-க்கு கூட்டுப் பிரார்த்தனையில் நம்பிக்கை அதிகம். பிரார்த்தனை மூலமாக இறைவனிடம் எதையும் சாதித்துவிடலாம் என்கிற கருத்தை கொண்டிருந்தவர். எனவேதான் தன்னுடைய இதழில் "பிரார்த்தனை கிளப்" என்கிற வாசகர்கள் அமைப்பை உருவாக்கியிருந்தார். நோய் நொடியில் இருப்பவர்கள், அறுவைச் சிகிச்சைக்காக காத்திருப்பவர்கள் என்று இன்னலில் இருப்பவர்கள் குமுதத்துக்கு கடிதம் எழுதிப் போடுவார்கள். பிரார்த்தனை கிளப் பகுதியில் அக்கடிதம் பிரசுரிக்கப்படும். கீழே ஆசிரியர் "இவருக்காக இன்ன நேரத்தில் அனைவரும் அவரவர் வழிபடும் இடத்தில் கூட்டுப் பிரார்த்தனையில் ஈடுபடுவோம்" என்று வாசகர்களை கோருவார்.

சிறுவயதில் அப்பகுதியை வாசிக்கும்போது "டைம் வேஸ்ட்" என்று நினைப்பேன். எங்கோ இருக்கும் யாருக்கோ எதற்காகவோ யார் மெனக்கெட்டு பிரார்த்திப்பார்கள் என்றெல்லாம் கருதியிருக்கிறேன். ஆனால் என்னுடைய அப்பாவே அதை தொடர்ச்சியாக பின்பற்றி வந்திருக்கிறார் என்பது எனக்கு கொஞ்சம் லேட்டாகத்தான் தெரிந்தது. பிற்பாடு நானெடுத்த குட்டி கணக்கெடுப்பு ஒன்றில் அப்போதிருந்த குமுதம் வாசகர்கள் (பிரார்த்தனையில் நம்பிக்கை கொண்டவர்கள்) பெரும்பாலான பேர் நேரமெடுத்து, மெனக்கெட்டு இந்த கூட்டுப் பிரார்த்தனையில் கலந்துகொள்ளும் வழக்கம் கொண்டவர்கள் என்பதை அறிந்துகொண்டேன். ஒருமுறை ஞாயிற்றுக்கிழமை, உள்ளகரம் யாக்கோபு தேவாலயத்துக்கு சென்றபோது, குமுதம் புத்தகத்தை வைத்துக்கொண்டு ஒரு அன்பர் மனமுருக "யாருக்கோ" பிரார்த்தித்துக் கொண்டிருந்ததை கூட கண்டிருக்கிறேன்.


இப்போது குமுதத்தில் "பிரார்த்தனை கிளப்" வருவதில்லை. அப்படியே வந்தாலும் ஞாயிற்றுக்கிழமை ஒன்பது முதல் ஒன்பது மணிக்குள்ளாக வாசகர்கள் ஒட்டுமொத்தமாக முகம் தெரியாத யாரோ ஒருவருக்காக கூட்டுப் பிரார்த்தனையில் ஈடுபடுவார்களா என்பதற்கு நிச்சயமுமில்லை.

கடந்த இருபது ஆண்டுகளில் மனிதநேயம் நிறைய வளர்ந்திருக்கிறது. மனித உரிமை அமைப்புகள் நிறைய உருவாகியிருக்கின்றன. சாதி, சமய, இன, தேச வேறுபாடுகள் குறித்த பிரக்ஞை குறைந்திருக்கிறது. அடுத்தவர் மீதான அக்கறை அதிகரித்திருக்கிறது. அதே நேரம் ஆன்மீகமும் பல்வேறு வடிவங்களில் முன்பிலும் அதிகமாக மக்களை ஈர்க்கிறது. இப்படியெல்லாம் ஒரு தோற்றம் எனக்குள் இருக்கிறது. சமகால தலைமுறை குறித்து சமகாலத்தில் வாழும் யாருக்கும் இருக்கும் பெருமிதம்தான் இது. ஆனால், போன தலைமுறையிடம் இருந்த ஏதோ ஒன்று, இன்றைய தலைமுறையிடம் "மிஸ்" ஆகிறது என தோன்றுகிறது. முந்தையத் தலைமுறை அதற்கு முந்தையத் தலைமுறையோடு ஒப்பிட்டு இவ்வாறாக "ஃபீல்" செய்ததாக தெரியவில்லை.

என் அப்பாவை விட நான் அறிவாளி. என் அப்பாவுக்கு கிடைத்த வாய்ப்புகளைவிட எனக்கு அதிகமான வாய்ப்புகள் கிடைக்கிறது. அவரைவிட வசதியாக வாழ்கிறேன். அவர் நினைத்தே பார்க்க முடியாத உயரங்களை நான் அனாயசமாக அடைகிறேன். ஆனால் அவரளவுக்கு நான் உன்னதமானவனாக, உண்மையானவனாக இல்லை. சமூகம் குறித்த அப்பாவின் மதிப்பீடும், அக்கறையும் அவரளவுக்கு எனக்கில்லையோ என்கிற குற்றவுணர்வு தோன்றுகிறது.

கடந்த தலைமுறைக்கும், இன்றைய தலைமுறைக்குமான மரபுத்தொடர்ச்சியில் ஏதோ கோளாறு ஏற்பட்டிருக்கிறது. அடுத்த தலைமுறைக்கும், இப்போதையத் தலைமுறைக்கும் தொடர்ச்சியேஇல்லாத விரிசலுக்கும்வாய்ப்பிருக்கிறது. எதை, எங்கே தொலைத்திருக்கிறோம் என்பதைக் குறித்து கொஞ்சம் துல்லியமாகவே ஆராய வேண்டும்.

# ஆரோக்கியம் காக்கும் கைப்பட்டை!



சுமார் 80 பவுண் விலையுள்ளகைப் பட்டையை மணிக்கட்டில் அணிந்து கொண்டால், அது அவரது சாப்பாடு தூக்க முறைகள், உடற் பயிற்சி முறை போன்றவற்றைக் கண்காணிக்கும். அதனுடன் இணைக்கப்பட்டுள்ள கணினி மென்பொருள் வாயிலாக குறிப்பிட்ட நபர் எப்படி ஆரோக்கியமாக இருப்பது என்று தனிப்பட்ட ஆலோசனையை வழங்கும். இந்தக் கைப்பட்டையை உருவாக்கியிருக்கும் நிறுவனமான "ஜ-போன்" இது ஒரு நீடித்து உழைக்கக் கூடிய கவர்ச்சிகரமான தண்ணீரால் பாதிக்கப் படாத உபயோகமான பொருள் என்று பெருமையடித்துக் கொள்கிறது. இந்தப் பட்டையில் உள்ள அசைவு உணர்வி (மோசன் சென்சர்) இதை அணிந்திருப்பவர் எடுத்து வைக்கும் அடிகள், எரிக்கப்படும் கலோரிகள், நடக்கும் தூரம், "சும்மாயிருந்த" நேரத்துடன் ஒப்பிடுகையில் வேலை அல்லது பயிற்சிகளில் ஈடுபட்ட நேரம் ஆகியவற்றைப் பதிவு செய்துகொள்ளும். அத்துடன், ஒருவர் தூங்கும் நேரம் அது ஆழமான தூக்கமா, மேலோட்டமான உறக்கமா என்பன போன்ற விடயங்களும் பதிவாகும்.

சிகரெட்,
உபயோகப்ப
MGR – ஒரே
நடித்திருக்கிற
அந்தப் பட



# வியாபார ஸ்தலமாகிய வழிப்போக்கர் மடம்...

- தாட்சா யோகராஜா -

எத்தனையோ இடங்களில் வியாபாரம் செய்வதற்காக பல கோடிக்கணக்கான செலவுகளை மேற்கொண்டு வர்த்தக நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. ஆனால், பணமே செலவு செய்யாமல் வியாபார ஸ்தலமாக மாறி வருகின்றது ஒரு



வழிப்போக்கர் மடம்.

எங்கே எனக் கேட்கிறீர்களா? கள்ளியங்காட்டில் இருக்கிறது இந்த பழைமை வாய்ந்த மடம்.

கள்ளிமரங்களின் காடாக ஒரு காலத்தில் விளங்கியதே "கள்ளியங்காடு". ஆனால் இன்று நெருக்கமான வீடுகளும் கடை-களுமாக காட்சி தருகின்றது இக்கிராமம்.

நல்லூரிற்கு வடக்குப் புறமாக அமைந்திருக்கும் கள்ளியங்காடு, கிராமத்திற்குரிய தனித்துவத்தை இழந்து நகரமயமாக்கத்திற்குள் உள்வாங்கப்பட்டிருப்பது அதன் தோற்றத்திலேயே தெரிகின்றது. அதே போன்ற மாற்றத்தை தன் பெயரிலும் பெற்றுவிட்டது. "கள்ளியங்காடு" என காரணப்பெயருடன் விளங்கிய கிராமம் இன்று "கல்வியன்காடு" எனப்படுகின்றது. கால ஓட்டத்தின் தாக்கம் பெயரில் தெரிகிறது.

கள்ளியங்காடு பொதுச்சந்தைக்கு பிரசித்தி பெற்ற இடம். குறிப்பாக அசைவ உணவுகளுக்காக மக்கள் இச்சந்தையை நாடி வந்தாலும் மரக்கறி வகைகளும் குறிப்பிடத்தக்க அளவில் விற்பனை செய்யப்படுகின்றது. வங்கி, தபாற்கந்தோர், பாடசாலை, ஆலயங்கள் முதற்கொண்டு பலசரக்குக் கடைகள், மின் உபகரணக் கடைகள், வைத்தியசாலை, மருந்துக்கடைகள் உட்பட அனைத்து கடைகளும் சந்திப் பகுதியிலேயே காணப்படுவதால் இப்பகுதியானது குடிவாழ்வதற்கு ஏற்ற வசதிகள் நிரம்பிய இடமாகக் கருதப்படுகின்றது.

இக்கிராமத்தில் ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கட்டடம் இருக்கிறது. இக்கட்டடத்தை இப்பகுதி மக்கள் சாதாரணமாக பார்ப்பதாலும் இதன் வரலாறு அறிந்தவர்கள் காலமாகி விட்டதாலும் அதனைப் பற்றிய செய்திகள் வெளிவரவில்லை.


அந்தக் கட்டடம் ஒரு வழிப்போக்கர் மடம். மிகப் பழமை வாய்ந்த கட்டடமாக காணப்படும் இந்த வழிப்போக்கர் மடம் கள்ளியங்காட்டுச் சந்தியில் இருந்து பருத்தித்துறை செல்லும் பக்கமாக சிறிதளவு தூரத்திலும், இலங்கை நாயகி அம்மன் ஆலயத்திற்கு முற்புறமாகவும் அமைந்துள்ளது.

முன்னைய காலத்தில் ஊர் ஊராகச் சென்று வாணிபம் செய்பவர்கள் இளைப்பாறுவதற்காக கட்டப்பட்டதே இந்த வழிப்போக்கர் மடம். இவ்வழியாகச் செல்லும் வியாபாரிகள் சற்று நேரம் இளைப்பாறிவிட்டுச் செல்ல இது பயன்பட்டது. மிகவும் குளிர்மையாக இருப்பதற்காக இந்த வழிப்போக்கர் மடத்திற்கு மிக அருகாமையில் ஒரு அரச மரமும் இருந்தது. ஆனால் பத்து வருடங்களிற்கு முன்னர் இடம்பெற்ற இயற்கை அனர்த்தத்தினால் முறிவடைந்து இன்று அரச மரத்தின் அடி மரம் மட்டுமே எஞ்சி நிற்கின்றது.

கள்ளியங்காடு இலங்கை நாயகி அம்மன் ஆலய குருக்களிடம் கேட்டால் மேலதிக விளக்கம் பெறலாம் என கிராம மக்கள் கூறியதை அடுத்து அந்தக் கோயிலுக்கு உரித்துடையவர்களின் குடியிருப்புப் பகுதிக்கு சென்றேன். துரதிஷ்டவசமாக பிராமணர் குடியிருப்பே கவலையில் ஆழ்ந்திருந்தது. காரணம், அந்த மூத்த குருக்கள் வயோதிபம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அவருடைய மகனிடம் வழிப்போக்கர் மடம் பற்றி கேட்டதற்க்கு "மிகப்பழமை வாய்ந்தது. இன்று இது வழிப்போக்கர் மடமாக இல்லை. ஏனெனில் யாரும் பெருமளவான பொருட்களைக் காவிச்சென்று வியாபாரத்தில் ஈடுபடுவதில்லை" என்று சுருக்கமாக கூறினார். நான் அவரிடம் எதிர்பார்த்த தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை.

ஊர்மக்கள் இம்மடத்தைப் பற்றிக் கொடுத்த தகவல்கள் சுவாரஷ்யமானவை. இந்த மடத்திற்கு அருகாமையில் சுமைதாங்கி இருந்துள்ளது. சுமைதாங்கி என்பது ஒரு ஆள் உயரத்தை விட சற்றுக் குறைவான சிறிய திண்ணையாக இருக்கும். ஊர் ஊராக தலையில் பொருட்களை தூக்கிச் சென்று வியாபாரம் நடத்துபவர்கள் மடத்திற்கு வந்ததும் இளைப்பாறுவதற்காக தமது சுமையை இறக்கி வைக்க முயல்வர். குனிந்து பொருட்களை இறக்கி மீண்டும் தலையில் தூக்கி வைத்துச் செல்வது சிரமமான



தால் தோள் அளவு உயரமுடைய சுமைதாங்கியில் பொருட்களை இறக்கி வைத்து இளைப்பாறியுள்ளனர். அந்தச் சுமைதாங்கி பல வருட காலமாக இப்பகுதியில் இருந்ததாகவும் சில வருடங்கள் முன்னதாக அது அழிக்கப்பட்டு விட்டதாகவும் ஊர் மக்கள் கூறுகின்றனர்.

வழிப்போக்கர்களிற்காக வெட்டப்பட்ட கிணறொன்றும் இப்பகுதியில் காணப்படுகிறது. மடத்தினுடைய காலப்பழமையே அக்கிணற்றிற்கும் இருக்கும். ஆரம்ப காலங்களில் கிணற்றில் இருந்து நீர் எடுப்பதற்கு துலா முறையே பின்பற்றப்பட்டது. துலா உபயோகித்ததற்கான ஆதாரம் இருக்கின்ற போதிலும் தற்போது பாவனையில் இல்லை. இக்கிணறு 2003ஆம் ஆண்டில் புதிதாக சுற்றுக்கட்டுக் கட்டப்பட்டுள்ளமைக்கு கிணற்றில் பொறிக்கப்பட்டுள்ள திகதி சான்று பகர்கின்றது.

இப்பகுதியில் ஓர் "ஆவுரஞ்சிக் கல்" இருந்ததாகவும் அதனை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்பொருட் துறையினர் எடுத்துச் சென்று விட்டதாகவும் குருக்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வான சிறப்புக்களை எல்லாம் தன்னகத்தே கொண்டிருக்கும் இந்த வழிப்போக்கர் மடம் இன்று தென்னிலங்கை வர்த்தகர்களின் வியாபார ஸ்தலமாகிவிட்டது!

## திலகங்கள்!

நடிகர் திலகம் சிவாஜி பற்றி மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் நிறைய பேசியிருப்பார். ஆனால், சிவாஜியுடனான தனது நெருக்கத்தை இதை விட அழுத்தமாக வேறு எதிலும் சொல்லி இருக்க மாட்டார் எம்.ஜி.ஆர்!

"என் மனைவியின் (சதானந்தவதி) மரணத்தின் போது யார் யாரெல்லாமோ வந்தார்கள். எனக்கு அழத்தோன்றவில்லை. அப்போது என் வீட்டிற்கு சிவாஜி வந்தபோதுதான் என்னையும் மீறி அழுகை வந்தது. அஸ்திவாரம் வெடிக்கும் அளவு என்பார்களே, அந்த அளவு அழுதேன். அன்று இறுதி வரை இருந்த சிவாஜி, என்றும் என்னுடன் இருப்பார்" - எம்.ஜி.ஆர்.



## ஒன்றே ஒன்று!

...ரெட், மது போன்றவற்றை
...ப்படுத்தும் காட்சிகளில் நடிக்காத
...ரே ஒரு படத்தில் மட்டும் பீடி குடித்து
...கிறார்.
...ப் படத்தின் பெயர் – அந்தமான் கைதி!

## அவர் ஒரு சமுத்திரம்

பல பக்தர்களுக்கு மத்தியில் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தார் வாரியார். பத்து விரல் மோதிரம் பளபளக்க, பல்லிலும் தங்கம் மின்ன அங்கு வந்த பணக்காரர் ஒருவர், "சாமி, கூட்டத்தில் பேசும்போது என்னைப் பற்றியும் ஒரு தடவை சொல்லுங்களேன்" என்றார். கூட்டத்தில் வாரியாரும், "இவர் பெரிய சமுத்திரம், அள்ள அள்ளக் குறையாத கடல் மாதிரி, பெரிய செல்வந்தர்... சமுத்திரம் என்றால் சமுத்திரம்தான், ஏரி, குளம் மாதிரி சின்ன ஆள் இல்லை" என்றார். பாராட்டை வாங்கிக்கொண்டு சந்தோஷமாக கிளம்பினார் செல்வந்தர். பக்தர்களில் ஒருவர் எழுந்து தயக்கத்துடன், "சாமியைப் போன்ற பெரியவர்கள் இப்படிப் பொய்யாகப் பாராட்டலாமா? அந்த ஆள் பெரிய கஞ்சன். ஒரு நல்ல காரியத்துக்கும் உதவியதில்லையே" என்றார்.

"அதைத்தானே நானும் சொன்னேன்... புரியவில்லையா? சமுத்திரம் ரொம்பப் பெரியது. நிறையத் தண்ணீர் வெச்சிருக்கும். ஒரு வாய் தண்ணி ஒருத்தனுக்கு பயன்படுமா? எவன் தாகத்தையும் தீர்க்காது. இந்த ஆளும் சமுத்திரம் மாதிரி நிறைய வச்சிருக்கார். ஒருத்தனுக்கும் பயன்பட்டதில்லை. புரிஞ்சுதா?" என்று வாரியார் போட்டார் ஒரு போடு!

## ஆரூர்தாஸ்

கிட்டத்தட்ட ஆயிரம் படங்களுக்கும் மேல் வசனம் எழுதியவர்.

ஒரு சொட்டு கண்ணீர் கூட சிந்தாமல் தியேட்டரை விட்டு வெளியேற முடியாத அற்புத உணர்ச்சிக் காவியங்களை தமிழில் படைத்தவர்.

எம்.ஜி.ஆர் இவரை ஆசிரியர் என்று அழைப்பார்.

சிவாஜி உரிமையுடன் பழகக் கூடியவர்.

அவர்கள் இருவரின் படங்களுக்கும் ஒரு சேர வசனம் எழுதியவர்.

பாசமலர், தாய் சொல்லை தட்டாதே, விதி ஆகிய படங்கள் அவரின் வசனத்தில் ஒரு துளி.

ஆரூர்தாஸ் என்கிற யேசுதாஸ்.

துளியும் கோபம் வராத மனிதர்.

சமீபத்தில் சதாபிசேகம் கொண்டாடிய அவரின் நெகிழ வைக்கும் திரை அனுபவம் இது.

ஒரு நாள் ஒப்பனை அறையில் நாங்கள் தனித்திருந்த வேளையில் எம்.ஜி.ஆர், என்னிடம் (ஆரூர்தாஸ்) சொன்னார்:

'பசி பட்டினியின் எல்லையையே பார்த்தவன் நான். அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளின் சிகரத்தைத் தொட்டிருக்கேன். இப்போ புகழின் உச்சியிலே இருக்கேன். வசதிக்குப் பஞ்சம் இல்லை. தினமும் என் வீட்டில் மூன்று வேளையும் குறைஞ்சது 50 - 60 இலைகள் விழுது. ஆனாலும், ரெண்டே ரெண்டு குறைகளை மட்டும் என்றைக்குமே என்னால போக்கிக் கொள்ளவே முடியாது. ஒன்று: குழந்தைகள் வாரிசு இல்லாத குறை! இன்னொன்று.'

நான் இடைமறித்து, 'ஏன், பெருந்தலைவர் காமராஜருக்குக் கூடத்தான் குழந்தைகள் வாரிசு இல்லை. அதனால் என்ன குறைஞ்சு போயிட்டாரு!' என்றேன்.

'அப்படி இல்லை. காமராஜருக்குக் கல்யாணமே ஆகாத காரணத்தால குழந்தைகள் இல்லாமல் போச்சு. ஆனால், எனக்கு ரெண்டு, மூனு கல்யாணம் ஆகியும் ஒரு குழந்தை கூட பிறக்கவில்லையே! எந்த ஒரு புண்ணியவதியாவது என் வாரிசை அவ வயித்திலே பத்து மாசம் சுமந்து பெத்து என் கையிலே குழந்தையா கொடுக்க மாட்டாளா?' என்கிற அந்த நிரந்தரமான ஏக்கம் என் நெஞ்சை விட்டு எப்பவுமே நீங்க மாட்டேங்குது.

பெரிய, பெரிய ஜோசியரை எல்லாம் ரகசியமா வீட்டுக்கு வரவழைச்சு என் ஜாதகத்தைக் காட்டிக் கலந்து ஆலோசனை பண்ணுவேன், ஜோதிடர் கலையில் நிபுணர்களான ரெண்டு, மூனு பேர் மட்டும் ஒத்து ஒரே கருத்தைச் சொன்னாங்க. இது பலதார ஜாதகம்! உங்க வாழ்க்கையிலே பல பெண்கள் குறுக்கிடுவாங்க. அவங்களுக்கு வேண்டியதை எல்லாம் நீங்க குடுப்பீங்க. ஆனால், அவங்க யாரும் உங்களுக்கு வேண்டிய ஒரு குழந்தையைக் குடுக்க மாட்டாங்க. குடுக்கவும் முடியாது. குறை அவங்ககிட்டே இல்லை'ன்னு சொன்னாங்க.

சமீபத்தில் ஆயுள் இன்சூரன்சுக்காக முக்கியமான ஒரு பெரிய மருத்துவரிடம் உடல் பரிசோதனை பண்ணிக் கொண்டேன். அவர் உங்களை மாதிரி என் அன்புக்கும், நம்பிக்கைக்கும் உரியவர். இனிமேல் எனக்கு குழந்தை உண்டாகிறதுக்கு வாய்ப்பே இல்லைன்னு உறுதியா சொல்லிவிட்டார். அதைக் கேட்டு நான் அப்படியே உடைஞ்சு நொறுங்கிப் போயிட்டேன். அன்று ராத்திரி முழுக்க நான் தூங்கவே இல்லே. அழுது, அழுது தலையணையே நனைஞ் சிடுச்சு. என் அண்ணனுக்கு அத்தனை குழந்தைகளைக் கொடுத்த கடவுளுக்கு, எனக்கு ஒரு குழந்தை - ஒரே ஒரு குழந்தையைக் கூட குடுக்க மனசு வரல்லே பாத்தீங்களா?

எத்தனையோ சகோதரிகள், தாய்மார்கள் அவங்க பெத்த குழந்தைகளை என் கையில் கொடுத்து என்னைப் பேர் வைக்கச் சொல்லும்போது, உள்ளுக்குள்ளே என் நெஞ்சு பதறும். ஆனாலும், அதை வெளியில் காட்டிக்கொள்ளாமல், அந்தக் குழ்ந்தைகளுக்கு அப்பப்போ எனக்குத் தோன்றுகிற பேரை வைச்சு, அவங்க ஆசையை நிறைவேற்றுகிறேன். போகட்டும். நான் கொடுத்து வைச்சது அவ்வளவுதான்!

என்னுடைய இரண்டாவது குறை என்னென்னா, ஏதோ ஒரு அடிப்படைக் கல்வி அறிவு



என்னிடம் இருக்கு. அதுவும் நானாக, ஆர்வத்திலே கற்று வளர்த்துக்கொண்டது. அதைத் தவிர பெரிசா ஒண்ணும் படிக்கத் தெரிஞ்சுகொள்ளவில்லை. இளமையிலே பட்ட வறுமை காரணமாக அந்த வாய்ப்பு, வசதி இல்லாமப் போச்சு.

அண்ணாதுரை, கிருபானந்த வாரியார் இவர்களுடைய சொற்பொழிவைக் கேட்கும்போது, என்னால் அவங்களை மாதிரி பேச முடியலையே என்று நினைச்சு வருத்தப்படுவேன். ஆனாலும், எப்படியோ பேசிச் சமாளிச்சு, மத்தவங்களை சந்தோஷப்படுத்திடுவேன். ஆயிரந்தான் இருந்தாலும் குறை, குறைதானே! அதுவும் பூர்த்தி செய்ய முடியாத குறை. அடுத்த பிறவியென்று ஒன்று இருந்தால் அதிலேயாவது நான் பெரிய பிள்ளை குட்டிக்காரனாகவும், சிறந்த கல்விமானாகவும் இருக்கணும்!'

நடிப்பிற்கு அப்பாற்பட்டு அவரது கண்கள் நீர் நிலைகளானதை நேரில் நான் கண்டது அதுவே முதல் முறை!




A.J.Nimalrajan


பிரபல ஏல நிறுவனமான ஸ்தபிஸ் ஆப்பிள் நிறுவனர் ஸ்டீவ் ஜொப்ஸ் உருவாக்கிய முதல் ஆப்பிள் மக் கணினியை ஏலத்துக்கு விடுகிறது.

ஆப்பிள் நிறுவனத்தை தோற்றுவித்தவர்களான ஸ்டீவ் ஜாப்ஸ், ஸ்டீவ் வாஸ்னியாக் இதனைத் தங்கள் கைப்படவே தயார் செய்தனர்.

1976ஆம் ஆண்டு ஜூலையில் இந்த மக் கணினி விற்பனைக்கு வந்த போது இதன் விலை 666.66 டொலர்களாக நிர்ணயம் செய்யப்பட்டது. ரூபாய் மதிப்பில் அப்போதை மதிப்பில் ரூபா. 6 ஆயிரம்.

வருகின்ற ஜூன்15ஆம் திகதி நியூயோர்க்கில் நடக்கவுள்ள ஏலத்தில் இவ் ஆப்பிள் கணினி அதிக தொகைக்கு ஏலம் போகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

உலகின் ஆரம்பகால தன் உபயோக கணினிகள் அதிக எண்ணிக்கையில் உருவாக்கி விற்பனைக்கு கொண்டு வந்த



நிறுவனம் ஆப்பிள்தான். இன்றைய மிகப் பிரபலமான ஐ-போன், ஐ-பாட், ஐ-பேட உருவாக்கிய ஆப்பிள் நிறுவனத்தின் முதல் படைப்பு இக் கணினிதான்.

## முதல் கணினி ஏலம் ஆப்பிள் ஜொப்ஸ் தயாரித்தது

தற்போதைய செய்தி: ற்போது நடை பெற உள்ள நவீன தொழில் நுட்ப கண்காட்சியில் ஆப்பிள் நிறுவனம் தனது புதிய இயங்குதளமான iOS 6 வெளியிட உள்ளதாக தகவல்கள் கசிந்துள்ளன. அத்துடன் முப்பரிமாண தன்மையுடன் கூடிய கணினியையும் அறிமுகப்படுத்தலாம் எனத் தெரிகிறது.

இப் புதிய iOS 6 இல் முப்பரிமாண வரைபடங்கள்(3D maps ) வசதிஇருக்குமென ஏற்கனவே தகவல்கள் வந்துள்ளன. எனவே iOS 6 தொடர்பான எதிர்பார்ப்பு தகவல்




தொழில்நுட்ப உலகில்அதிகமாகியுள்ளது. iOS 6 உடன் இணைந்து செயலாற்றும் 7 புதிய விளையாட்டுக்களும் இணைப்பாக வெளியிடப்பட உள்ளன எனவும் தெரிகிறது.

## Blogger சேவையை நிறுத்தியது கூகுள்


Blogger வலைபூக்களை பதிவர்களுக்கு Blogger in Draft வசதியைப் பற்றி தெரிந்திருக்கும். பிளாக்கர் நிறுவனம் ஏதேனும் புதிய வசதியை அறிமுகப் படுத்தினால் சோதனை ஓட்டமாக முதலில் Blogger in Draft தலத்தில் தான் அறிமுகப்படுத்தும். பின்பு பதிவர்களிடம் இருந்து வரும் குறைகளை சரி செய்து பின்பு அனைவருக்கும் புதிய சேவையை வழங்கும். இப்பொழுது Blogger in Draft சேவையை நிறுத்தி விட்டது கூகுள் நிறுவனம். இனி Blogger in Draft தளத்தில் எந்த பதிவும் வெளிவராது என அறிவித்து உள்ளது.

கூகுள் தனது புதிய தயாரிப்பான கூகுல் பிளஸ் சேவையை பிரபலமாக்குவதில் முழு மூச்சாக உள்ளது. அதற்காக சில தளங்களை மூடவும் செய்தது. முதலில் Buzz அடுத்து பிக்னிக் இப் பொழுது Blogger in Draft.




சமூக தளங்களுக்கு இடையேயான போட்டி நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டே உள்ளது. இந்த வரிசையில் மைக்ரோசாப்டும் தன பங்குக்கு so.col என்ற சமூக இணைய தளத்தை அறிமுகப்படுத்தி உள்ளது. இதை பிரபலப் படுத்தும் நோக்கில் விண்டோஸ் இயங்கு தளம் உபயோகிக்கும் அனைவரும் இந்தப்புதிய சமூக இணைய தளத்தை கட்டாயம் உபயோகிக்க வேண்டும் என அறிவிப்பு வெளியிடும் போலிருக்கே.!

## பேஸ்புக் chating விதவிதமான போட்டோக்களைப் பகிர...




மிகப் பிரபலமான சமூக இணையதளமான பேஸ்புக்கில் எண்ணற்ற வசதிகள் உள்ளன. அதில் முக்கியமான ஒன்று CHAT வசதி. இந்த வசதியின் மூலம் நண்பர்களிடம் மணிக்கணக்கில் அரட்டை அடித்து மகிழலாம். இதில் உள்ள ஒரு குறை எழுத்துக்களை மூலமே இதன் மூலம் பகிர்ந்து கொள்ள முடியும். போட்டோக்களைப் பகிர முடியாது. உதாரணமாக காலையில் சாதரணமாக குட்மோர்னிங் என அனுப்புவதற்குப் பதில் ஏதாவது ஒரு குட்மோர்னிங் போட்டோவை அனுப்பினால் நன்றாக இருக்கும் தானே! இது போன்று நீங்கள் விரும்பும் அழகான போட்டோக்களை உங்கள் நண்பர்களுக்கு அனுப்பி நீங்கள் மகிழ்வதோடு மட்டுமல்லாமல் உங்கள் நண்பர்களையும் மகிழ்விக்கலாம். பேஸ்புக் சாட்டில் போட்டோக்களை எப்படிப் பகிர்வது என்று கீழே பார்ப்போம்.




- முதலில் நீங்கள் அனுப்ப வேண்டிய போட்டோவை தேர்வு செய்து கொண்டு இந்தத் தளத்திற்கு செல்லுங்கள்.
- Choose File என்ற பட்டனை அழுத்தி நீங்கள் சாட்டில் பகிர வேண்டிய போட்டோவை தேர்வு செய்து கொள்ளுங்கள்.
- captcha கோடினை சரியாகக் கொடுத்து Upload Now என்ற பட்டனை அழுத்தவும்.
- போட்டோ அப்லோட் ஆகியவுடன் அதற்கான கோடிங் தயாராகி விடும் அதை முழுவதுமாக கொப்பி செய்து பேஸ்புக் சாட் விண்டோவில் பேஸ்ட் செய்து எண்டர் அழுத்தினால் அந்த போட்டோ உங்கள் நண்பருக்குச் சென்றடையும்.

## தீங்கு விளைக்கும் 6 வித வைரஸ்கள்

கணினிகளைத் தாக்க நாள்தோறும் பல்லாயிரக் கணக்கான வைரஸ்கள் உருவாக்கப்படுகின்றன. அவற்றை பண்புவாரியாகப் பிரித்துப் போட்டுப் பார்த்தால், மொத்தமாக 6 வகைகள் தேறும். அவை என்னென்ன? எப்படிப் பட்டவை?

1. Boot Sector Viruses: அதாவது,

பூட் செக்டர் வைரஸ் என்பது, நமது கணினியின் BIOS என சொல்லப்படும்.

"அடிப்படை உள்ளீட்டு அல்லது வெளியீட்டு முறை" எனும் சிஸ்டம் மீதுதான் தாக்குகின்றன. பொதுவாக வைரஸ் வந்ததை உணர்ந்தால் உடனே இயங்குதள நிறுவி குறுந்தகட்டை தேடி எடுத்து, மறு நிறுவல் செய்து விடுவோம். அப்படி எல்லாம் செய்தால் இந்த பூட் செக்டர் வைரஸை அசைத்துக் கூடப் பார்க்க முடியாது.

நீங்கள் புதியதாக ஒரு HDD வாங்கி வந்து வைத்தாலும் சரி, அதுவும் பாதிக்கப்படும். காரணம் இது தாக்குவது பாதிப்பது எல்லாம் MBR (MBR என்றால் Master Boot Record ஆகும். இது இயங்குதளத்தைக் கண்டுபிடித்து இயங்க வகை செய்யும்) எனும் தகவலைச் சேமித்து வைத்திருக்கும் BIOS-இன் பகுதியைத் தான்.

அதனால் BIOS ரெகவரி டிஸ்க் ஒன்று உருவாக்கி BIOS-ஐ மீள்-நிறுவல் செய்து, HDD-இனையும் அழித்து, இயங்குதளம் மீள்-நிறுவல் செய்துதான் கணினியைக் காப்பாற்ற முடியும்.

*2. கூடாத நிரல் அல்லது கோப்புகள்:*

இந்த வகை வைரஸ்கள், நிரல்களாகவோ



அல்லது கோப்பாகவோ ஹார்ட் டிஸ்கில் இயங்குதளத்தின் பார்ட்டீசனில் உட்கார்ந்து கொள்ளும். இவை, இயங்குதளம் தொடங்கும் போதே, தானும் தொடங்கி தன் கூடாத செய்கையினால் கணினியைப் பாதிப்புக்குள்ளாக்கும். அந்த நிரல்/கோப்பு எதுவென்று தெரிந்தாலே, Task Manager கொண்டு நிறுத்திவிடலாம். பின்னர் அழித்தும் விடலாம்.

3. **Stealthy Virus:**

இவையும் இரண்டாவதாக சொல்லப்பட்ட வைரஸ் போலத்தான். ஆனால், இந்த வகை வைரஸ்கள் தனது அடையாளத்தைக் காட்டிக் கொள்வதே இல்லை. இதனால், இதனைக் கண்டுபிடித்து முடக்க/அழிக்க மிகவும் கடினமானதும் கூட. Anti-Virus இருக்கிறதே என தப்புக் கணக்குப் போடாதீர். வேட்டையாடும் Anti-Virus-களிடம் தான் இதன் விளையாட்டே. நீங்கள் வைரஸ் ஸ்கேன் செய்யத் தொடங்கியவுடன் தனது கோப்பிற்கு, ஒரு நல்ல நிரல் என்ற பிம்பத்தை உருவாக்கிவிட்டுத் தானே தற்காலிகமாக முடங்கிக்கொள்ளும். இதனால், Anti-virus-களிடம் இது அகப்படாது தப்பித்துவிடும்.

4. **MultiPartite:**

இந்த வகை வைரஸ்கள் மேலே சொல்லப் பட்ட மூன்று வகையிலும் சார்ந்தவை. இதனால், இது பாதிக்காத இடமே கணினியில் இருக்காது. இவ்வாறான வைரஸ்கள் பெரும்பாலும் தாக்குவது குறைவாக இருந்தாலும், தாக்கப்பட்டால் பெரும்பாதிப்பு உண்டாகும்.

5. **Polymorphic:**

பொலிமார்பிக் வைரஸ்கள், தங்களைத் தாங்களே திருத்தி எழுதிக்கொள்ளும் வல்லமை கொண்டவை. இதனால் வைரஸ் ஸ்கேன் செய்யும் போது தன்னை ஒரு ஸ்பைவேராகவும், ஸ்பைவேருக்கு ஸ்கேன் செய்யும் போது தன்னை ஒரு வைரஸாகவும் மாற்றிக் கொண்டு பாதிப்பை உண்டாக்கிய வண்ணம் இருக்கும்.

6. **Macro**

மேக்ரோ என்பது, சொல் திருத்திகளில் அடிக்கடி செய்ய வேண்டி இருக்கும் ஒரு பணியை தானே செய்துக்கொள்ளும் வகையில் அமைக்கப்படும் நிரலாக்கம் தான். அதையே தீங்கிழைக்கும் ஒரு பணியை இயக்க நிரலாக்கப் படுவதுதான் மேக்ரோ வகை வைரஸ்கள். பெரும்பாலும், நமது மின்னஞ்சல் முகவரியில் இருந்து எல்லோருக்கும் மெயில் அனுப்புவது போன்ற சிறு சிறு தொந்தரவு தரும்.

# துணிவு, தன்னம்பிக்கையே சாதனைகளின் படிக்கற்கள்



(சிகரம்)

சிறுவனாக இருந்த காலத்தில் என்னால் சாதிக்க முடியும் என்ற மனத்துணிவு, என் மீது நான் கொண்ட நம்பிக்கை என்பவையே 11வயதில் 12மைல் தூரம் ஓடிச் சாதனை படைக்க உதவியது என கிளிநொச்சியைச் சேர்ந்த பொலிக்காப் என்ற 56 வயது முதியவர் குறிப்பிட்டார்.

கொழும்பு சென். பனடிஸ் கல்லூரியில் ஆறாம் தரத்தில் கல்வி கற்றுக் கொண்டிருந்த வேளையில் பாடசாலையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வொன்றில் 9ஆம் தரத்திற்கு மேற்பட்ட 200-300 வரையிலான மாணவர்கள் கலந்து கொண்ட ஓட்டப் போட்டி ஒன்றில் அதிபரின் அனுமதி இன்றிக் கலந்து கொண்டதுடன், அத்தனை மாணவரகளிலும் வயது குறைந்த மாணவனான நான் சம்பியன்பட்டம் பெற்றுக்கொண்டேன். இந்த விளையாட்டு நிகழ்வே என்னுடைய வாழ்க்கையில் திருப்பு முனையாக அமைந்தது என அவர் குறிப்பிட்டார்.

பாடசாலை மட்டத்தில் ஆரம்பித்த தன்னுடைய விளையாட்டு கொத்தணி மற்றும் கோட்ட மட்டங்களைத் தாண்டி மாவட்ட மட்டங்கள் வரை சென்று பல சாதனைகள் புரிய வைத்ததாகவும், இதற்கு பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்கள் தன் மீது அக்கறை கொண்டு வழங்கிய உதவிகளே காரணம் எனவும் குறிப்பிட்ட பொலிக்காப்,

விளையாட்டின் மூலம் பல சாதனைகளுக்குச் சொந்தக்காரனாகிய நான் கிளிநொச்சியில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக விளையாட்டுச் சான்றிதழ்கள் மற்றும் தனக்குக் கிடைக்கப்பெற்ற சம்பியன்களை உரப்பையினுள் இட்டுக் கட்டியபடி இடம்பெயர்ந்து சென்ற இடங்களிற்கெல்லாம் காவிச் சென்றதாகக் கூறினார்.


இறுதிக்கட்ட யுத்தத்தின் போதும் முள்ளி வாய்க்கால் வரையும் காவிச் சென்றதாகவும், அதன் பின்னர் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் முயற்சியில் முள்ளி வாய்க்காலின் கரையோரப் பகுதிகளில் தன்னுடைய கல்விச் சான்றிதழ்கள், விளையாட்டுச் சான்றிதழ்கள் மற்றும் விளையாட்டின் மூலம் கிடைக்கப்பெற்ற பல இலட்சம் பெறுமதியான விருதுகளையும் விட்டுச் சென்றதாகவும்,

எனினும், வவுனியா புனர்வாழ்வு முகாம்களில் புனர்வாழ்வு பெற்று சுமார் 6 மாதங்களின் பின்னர் சொந்த இடங்களிற்குத் திரும்பிய வேளை அனைத்தும் 'இரும்புக் கறல்' பிடித்த நிலையிலேயே காணப்பட்டதால் எவற்றையுமே எடுத்து வரவில்லை எனக் கவலையுடன் குறிப்பிட்டார் இந்த விளையாட்டு வீரன்.

# செப்பனிடப்பட்டு வரும் தனங்கிளப்பு–சாவகச்சேரி வீதி

(கிரு-சிகரம்)

தென்மராட்சி-கேரதீவு வீதியின் தனங்களப்பு சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் வீதி தற்போது செப்பனிடப்படுகிறது. சாவகச்சேரி செல்வதற்கு மிக இலகுவான பாதையாகக் காணப்படும் இந்த வீதி, நீண்ட காலமாக செப்பனிடப்படாத நிலையில் காணப்பட்டதுடன், வீதிப் போக்குவரத்திற்கும் இடையூறாகக் காணப்பட்டதால் வாகனங்கள் இவ் வீதியூடாகப் பயணம் செய்ய முடியாத நிலை காணப்பட்டது.



வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால்கேரதீவு வீதி அகலமாக்கிப் புனரமைக்கும் பணிகள் மிக துரிகதியில் நடைபெற்றுவரும் இந்நிலையில்,தனங்கிளப்பு சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் வீதியும் செப்பனிடப்படுகின்றது.

இந்த வீதி செப்பனிடப்படுவது மட்டுமன்றி வீதியின் இரு மருங்கிலும் உள்ள புல்பூண்டுகளும் வெட்டப்பட்டு சுத்தம் செய்யப் படுகிறது.

# கொடும் பசி நேரத்திலும் பகிர்ந்து உண்ட மகிழ்ச்சி

## – 17வயது யுவதியின் அனுபவம்

(சிகரம்)

கொடும் பசி நேரத்திலும் கொடுத்து உண்ட அனுபவம் மிகவும் மகிழ்ச்சி அளிப்பதாக 17வயது இளம் யுவதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

"பசி வந்தால் பத்தும் பறந்துவிடும்", "பந்திக்கு முந்து படைக்குப் பிந்து" எனப் பல பழமொழிகளைச் சொல்லிச் சென்றார்கள் நமது முன்னோர்கள். ஆனால், "பசி வந்தால் பக்கத்து வீட்டுக் குழந்தையின் பிஸ்கட்டை பிடுங்கிச் சாப்பிடு" என யுத்தம் புதுமொழி சொல்லிக் கொடுத்துள்ளது என யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இந்த பெண் நகைச்சுவையாகக் குறிப்பிட்டார்.

முள்ளிவாய்க்கால் பகுதியில் யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்த காலப்பகுதியில் பலரை பசி வாட்டி வதைத்தது. பலர் தம்மால் இயன்ற வரை பசியை மறைத்து வாழ்ந்தனர். ஆனால் சிலர் பசியைப் பொறுக்க முடியாது, பசி வந்தவுடன் உணவுகளை தட்டிப் பறித்து சாப்பிடத் தொடங்கினர். அந்தவகையில், 8 வயதுச் சிறுமி ஒருவர் போராடிப் பெற்ற பிஸ்கற் பைக்கட்டை ஒன்றினை நானும் தட்டிப்பறிக்கநேர்ந்தது.

பல மாதங்களாக நடைபெற்ற யுத்தின்போது தம்மிடம் கிடைக்கப் பெற்ற பிஸ்கட் பைக்கற்றுக்களை யாருக்குக் கொடுப்பது என்று தெரியாமல் வாகனத்திலிருந்து எறிந்தபோது எனக்குக் கிடைத்து விட்டதே எனச் சிறுமி ஒருவர் ஆசையுடன் எடுத்த போது என்னுடைய பசியைப் போக்குவதற்காக அந்த பிஸ்கட் பையைத் தட்டிப்பறித்தேன். இங்கே பசிக்கு வயது வேறுபாடுகள் கூடத் தெரியவில்லை. பல நாட்களாக இருந்த பசி பிஸ்கற்றைக் கண்டவுடன் மீண்டும் தலை தூக்கிய நிலையில் சிறு குழந்தையின் பிஸ்கற்றைப் தட்டிப்பறித்துச் சாப்பிடும் நிலையை உருவாக்கிவிட்டது

எனினும்,அதில் அரைவாசி பிஸ்கற்றை அந்தச் சிறுமிக்குக் கொடுத்தேன் மிகுதியை என் சகோதரிக்குக் கொடுத்து நானும் சாப்பிட்டேன்.

பசி என்பது மனிதர்கள் முதல் கடவுளால் படைக்கப்பட்ட அனைத்து உயிரினங்களுக்கும் பொதுவானது. கதைக்கத் தெரியாத குழந்தை பசி வந்தவுடன் அழுகின்றது. உடனே அன்னைக்குத் தெரிந்து விடும் குழந்தைக்குப் பசி என்று. வயது வந்தவர்கள் என்றால் அம்மா பசிக்கிறது என்பார்கள். சிலர் தாமே எடுத்துச் சாப்பிடுவார்கள். இந்தப் பசிக்கு வறியவர்கள், செல்வந்தவர்கள் என்ற பாகு பாடு எதுவும் கிடையாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கொடியேற்றம்

(சாவகச்சேரி)

பெருமுளச்சந்தி ஸ்ரீ அம்பலவாணர் வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த திருவிழா இன்று ஞாயிற றுக்கிழமை காலை 11 மணிக்கு கொடி யேற்றத் துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் முதலாம் திகதி மாலை சப்பறத்திருவிழாவும், 2ஆம் திகதி காலை 11 மணிக்கு இரதோற்சவமும், மறுநாள் காலை 11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (11)

# பதிவிறக்கப் பெட்டகம்

**கவிஞனுடன் ஒரு உரையாடல்**

நீ ஒரு கவிஞனா?
ஆம். நான்தான்.
அது எப்படி உனக்குத் தெரியும்?
நான் கவிதைகள் எழுதியிருக்கிறேன்.
நீ கவிதைகள் எழுதியிருந்தால் அதன் பொருள் நீ ஒரு கவிஞனாய் இருந்தாய் என்பதுதான். ஆனால் இப்பொழுது?
நான் மீண்டும் ஒரு நாள் ஒரு கவிதை எழுதுவேன்.
விஷயம் அப்படியானால் ஒருநாள் மீண்டும் நீ கவிஞனாக ஆவாய். ஆனால்
எப்படி அது ஒரு கவிதைதான் என்று நீ தெரிந்து கொள்வாய்?
கடைசிக் கவிதை போலவே அதுவும் ஒரு கவிதையாக இருக்கும்.
அப்படியானால் அது ஒரு கவிதையாக இருக்காது.
கவிதை என்பது ஒரே முறைதான்.
மற்றும் அது இரண்டாவது தடவை பழையதைப் போலவே இருக்காது
அதே அளவு சிறப்பாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்
எப்படி அவ்வளவு உறுதியாக நீ இருக்க முடியும்?
கவிதையின் தரமே ஒரு முன்றதான்.
மற்றும் அது உன் மீது சார்ந்திருப்பதில்லை. ஆனால் சந்தர்ப்பங்களின் மீது.
சந்தர்ப்பங்களும் கூட அது போலவே இருக்கும் என்று நம்புகிறேன்.
அதை நீ நம்புவாய் ஆயின் நீ கவிஞனாக இருக்க மாட்டாய் மற்றும் ஒரு கவிஞனாக இருந்திருக்க மாட்டாய்.
வேறு எது உன்னை கவிஞன் என நினைக்கச் செய்கிறது?
சரி– இப்போது எனக்குச் சரியாகத் தெரியவில்லை.
மேலும் நீதான் எவன்? **– மிராஸ்லாவ் ஹோலுப்**

எந்தக் கவியும் அவனவன் சமூகத்தின் அங்கம்தான். அச்சமூகத்தின் பாதிப்பு அவனையும் பாதிக்கத்தான் செயகிறது. ஆனால் அந்தப் பாதிப்புக்கு எதிரொலிக்கும் முறையிலும், அவற்றின் மீது படும் அவன் பார்வை கவித்துவ சிந்தனை வாய்ந்ததாகவும் இருக்க வேண்டும். கவிஞனுக்கு வேண்டுவது – மொழியைத் தொட்டு, அணைத்து, முகர்ந்து, சுவைத்து உணரும் திறன். ஓவியன் வர்ணத்தை உணர்வது போல, சங்கீதக்காரன் நாதத்தை உணர்வது போல கவிஞன் தன் மொழியை உணர்தல் வேண்டும். அத்துடன் சிந்தனைத் திறன் வேண்டும், கவித்துவ பார்வை வேண்டும். தானிருக்கும் சமூகத்தை – தன் ஒரு பாதி தனித்திருந்து வேறுபட்டு, தூர நின்று பார்க்கும் திறன் வேண்டும். தானும் சமூகம் என்பது மறக்கக் கூடாது; தன் மனிதத்துவமும் மறக்கக் கூடாது. **– வெங்கட் சாமிநாதன்**

கவிஞன் ஒரு சுமையால் நசுக்கப்படுகிறான். ஆறுதல் அடைவதற்காக அவன் அதனை இறக்கி வைத்தாக வேண்டும். **– ரி.எஸ்.எலியட்**

எனது எழுத்துமுறையின் பொதுப்படையான பண்பு "சுமை நீக்குதல்". **– இடாலோ கால்வினோ**


நினைத்திராத நொடிப் பொழுதுகளில் நமக்குள்ளிருந்து வெளிப்படுகிறான் நாமறிந்திராத வேறொருவன். அவன் பரிணாமத்தின் தொடக்கத்தில் குகைகளிலும், கானகங்களிலும் ஒளிந்து வாழ்ந்த காலத்திலிருந்தே மனிதர்களுடன் வசிப்பவன். வேறு ஒருவிதத்தில் கூறுவதெனில், கலை இலக்கியங்களின் நோக்கமே சமூக ஒழுக்க விழுமிய மதிப்பீடுகளுக்குப் பழகாத பிறிதொருவன் நம்மிடமிருந்து வெளிப்படும் எதிர்பாராத தருணங்களை பரிச்சயம் கொள்ளவும், அவற்றின் தர்க்கமின்மையை எதிர்கொள்ள நம்மைத் தயார் செய்வதுமே எனப் படுகிறது. **– க.மோகனரங்கன்**

கவிதை தன்னைக் காட்டிக் கொள்ளும் போதே, கவிஞனுக்கு அவனையும் காட்டிவிடுகிறது. **– ஆனந்த்**

கலக மனமே கலை மனமாக விழித்தெழுகிறது.
**– பிரபஞ்சன்**

கவிஞனே!
மக்களின் அபிமானத்தை மதித்துவிடாதே.
அவர்களின் கைதட்டல் ஓசை விரைவில் மடியும்.
மூடர்களின் தீர்ப்புகளையும்
பன்மைப்பட்டவற்றின் நடுங்கச் செய்யும் சிரிப்பையும்
நீ கேட்பாய். ஆனால் நிமிர்ந்து நில்,
இடர்ப்பாடற்றும், சீலத்தோடும்
நீதான் வேந்தன்.
வேந்தர்கள் தனிமையில்தான் வாழவேண்டும்.
**– அலெக்ஸாண்டர் புஷ்கின்**

# அபிவிருத்தித் திட்டங்களில் இணைந்து நிலையான முன்னேற்றத்தை எட்டலாம்



(முல்லைத்தீவு)

ஏனைய பகுதிகளையும் விட வடபகுதி அபிவிருத்தியில் ஜனாதிபதி அவர்களும் அமைச்சர் பசில் ராஜபக்ஷ அவர்களும் அதிக கவனம் செலுத்தி வருகின்றனர்.

இதனை எமது மக்கள் சரிவரப் பயன்படுத்தி பொருளாதாரத்துறையில் நிலையான முன்னேற்றங்களை எட்ட வேண்டும் என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கான வாழ்வு எழுச்சி முன்னேற்பாட்டுக் கூட்டம் நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன் போது மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர், இப் பகுதியானது கடந்த காலங்களில் பாரிய அழிவுக்குட்பட்டிருந்தது. அந்த நிலையிலிருந்து மீண்டு இப்போது படிப்படியாக முன்னேறி வரும் நிலையில் வாழ்வு எழுச்சித் திட்டம் போன்ற நல்ல திட்டங்களை இப்பகுதி மக்கள் சரிவரப் பயன்படுத்திக் கொள்வதற்கு முன்வரவேண்டும்.

இத் திட்டத்தின் மூலம் மரக்கறி வகைகள், பழ வகைகள் உற்பத்தி, கடற்தொழில் மற்றும் கால்நடை வளர்ப்பு, சிறு கைத்தொழில் முயற்சிகள் என்பன தொடர்பில் பயிற்சிகள் வழங்கப்பட்டு உபகரணங்கள் மற்றும் வங்கிக்கடன் வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

இத் திட்டத்தின் மூலம் உரிய பயன்களைப் பெற்று தங்களது குடும்ப பொருளாதார நிலையை மேம்படுத்திக் கொள்வதுடன் போசாக்குள்ள குடும்பங்களைக் கட்டியெழுப்பவும் இயலும்.

இதன் ஊடாக கிராமத்தின் பொருளாதாரம் வளர்ச்சி கண்டு நாட்டின் தேசிய பொருளாதாரத்துடனும் இணைந்து பங்களிப்புக்களை வழங்க முடியும். எனவே உங்களது பொருளாதார நிலையை நிலைப்படுத்திக் கொள்வதற்கு இத் திட்டத்தின் மூலம் பயன்பெற அனைவரும் முன்வர வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

# யாழ். நகரில் வலம் வரும் கட்டாக்காலி கால் நடைகள்

## கட்டுப்படுத்துவது யார்?

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் கட்டாக்காலிகளாகத் திரியும் நாய்கள் மற்றும் மாடுகளால் யாழ். நகருக்கு வரும் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களையும் அவலங்களையும் சந்தித்து வருவதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

நேற்று முன்தினம் யாழ். ஆஸ்பத்திரி வீதிக்கு முன்பாக மகாத்தமா காந்தி சிலையருகில் உலாவிய ஐந்து நாய்களில் ஒன்று பாதசாரி ஒருவரைக் கடிக்க முறபட்டதோடு, அப்பாதசாரி பின்னால் வந்த வாகனத்தின் மீது மோதி விபத் துக்குள்ளாக வேண்டிய நிலை ஏற்பட்டதையும் காணக் கூடியதாக இருந்தது.

அத்தோடு யாழ். மத்திய பேருந்து நிலையத்துள்ளும் அதனை அண்டிய பகுதிகளிலும் உலாவும் கால்நடைகளால் வாகன விபத்துக்கள் ஏற்படக்கூடிய தான நிலையிருப்பதால் சம்பந்தப்பட்டவர்கள் இவ்விடயத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கேட்டுக் கொள்கின்றனர். (138)

# விழிப்புணர்வு கண்காட்சி

(பூநகரி)

போசாக்கு சத்துணவு விழிப்புணர்வு வாரத்தையொட்டி பூநகரி சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையினால் முழு நாள் கண்காட்சியொன்று நடைபெறவுள்ளது.

நாளை திங்கட்கிழமை காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 5 மணிவரை பூநகரி மகா வித்தியாலயத்தில் இக்கண்காட்சி நடைபெறுமென பூநகரி சுகாதார சேவைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இக்கண்காட்சியை சிறுவர் முதல் பெரியோர் வரை பார்த்துப் பயனடையுமாறு கேட்கப்பட்டுள்ளார்கள். (112)

# பொதுக்கூட்டம்

(முழங்காவில்)

முழங்காவில் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க இவ்வாண்டுக்கான பொதுக்கூட்டம் நாளை பிற்பகல் 3.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

பாடசாலை அதிபர் சு.கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறவிருக்கும் இப்பொதுக் கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தெரிவு நடைபெற இருப்பதால் சகல பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளார்கள். (112)

# நூற்றாண்டு விழாவையொட்டி சிறுகதைப்போட்டி

(தொண்டைமானாறு)

தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம் இவ்வருடம் தனது நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுகின்றது.

இதனையொட்டிச் சிறுகதைப் போட்டி ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது.

இப்போட்டியில் இலங்கையில் வாழும் படைப்பாளிகள் பங்கு கொள்ள முடியும். குறித்த படைப்பு இதுவரை எந்தவொரு ஊடகத்திலும் வெளிவந்ததாக இருத்தலாகாது.

போட்டியாளர்கள் படைப்புகளோடு தமது பெயர் விபரங்களை வேறாக இணைத்து அனுப்புதல் வேண்டும். பரிசில் பெறும் கதைகளோடு மேலும் தகுதியானவை நூற்றாண்டு விழாவையொட்டி வெளியிடப்படும் சிறுகதைத் தொகுப்பு நூலிலும் சேர்த்துக்கொள்ளப்படும்.

படைப்புக்களை எதிர்வரும் 25.06.2012 இற்கு முன்னராக 'மலர்க்குழு', நூற்றாண்டு விழா, யாழ். தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம் என்ற முகவரிக்கோ அல்லது thondaimanaruvid@ gmail.com என்ற மின்னஞ்சலுக்கோ அனுப்பி வைக்கலாம். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. (17)

# வைத்தியர் மீது தாக்குதல்; கண்டித்து வேலை நிறுத்தம்

(வவுனியா)

வவுனியா பொது வைத்தியசாலையின் வைத்தியர்கள் மற்றும் அங்கு பணிபுரியும் அனைத்து உத்தியோகத்தர்களும் நேற்று முனதினம் காலை 10.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணிவரை அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

நேற்று முனதினம் வெளி நோயாளர் பிரிவில் வைத்து வைததியர் ஒருவர் தாக்கப்பட்டதை கண்டித்தே இந்த அடையாள வேலை நிறுத்தம் இடம்பெறறது.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

கடந்த புதன்கிழமை இரவு 7 மணியளவில் வவுனியா வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவிற்கு, மின்சாரம் தாக்கப்பட்டு ஒருவர் கொண்டு வரப்பட்ட நிலையில் அவரை பரிசோதித்த வைத்தியர் அவர் இறந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

எனினும் அவருடன் வருகை தந்த உறவினர் ஒருவர் அதனை ஏற்றுக்கொள்ளாத நிலையில் வைத்தியரின் தலையில் டோர்ச் லைட்டால் அடித்துள்ளார்.

இத் தாக்குதலால் காயமடைந்த வைத்தியர் சிகிச்சை பெற்று வரும் நிலையில் வைத்தியரைத் தாக்கியவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

எனினும் வைத்தியர்கள் தமது கடமையை சரிவர செய்யும் நிலையில் பொது மக்கள் இடையூறு விளைவித்தல் கூடாது எனவும், மக்களின் மீது கரிசனையுடன் கடமையாற்றும் வைத்தியர்களை தாக்குவதை கண்டித்தும், இனி வரும் காலங்களில் இவ்வாறான நிகழ்வுகள் இடம்பெறுவதை தடுப்பதற்குமாகவே இவ் வேலை நிறுத்தப்போராட்டத்தில் ஈடுபடடதாக வைத்தியர்கள் சங்கத்தின் வவுனியா கிளை செயலாளர் எம்.எம்.எம். அனாஸ் தெரிவித்தார்.

இதேவேளை அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட வைத்தியர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுடன் வவுனியா பொலிஸ் பரிசோதகர் ஐ.பி. ரணதுங்க கலந்துரையாடியதுடன் தாம் சம்பவம் தொடர்பில் எடுத்துள்ள நடவடிக்கைகளையும் எடுத்துரைத்தார்.

இதேவேளை வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (160)

# கல்விக்கான உணவுத் திட்டம்; மரக்கறி கொடுப்பனவு அதிகரிப்பு

(கிளிநொச்சி)

கல்விக்கான உணவு விநியோகம் என்ற வேலைத்திட்டத்தில் இதுவரை மதிய உணவு வழங்கப்பட்டு வந்தது. இந்த மதிய உணவு விநியோகத்திற்காக அரிசி, பருப்பு, எண்ணெய் போன்ற உணவுப் பொருட்களினை உலக உணவுத் திட்டத்தின் அனுசரணையுடன் மாவட்ட செயலகத்தினால் பாடசாலைகளுக்கு வழங்கப்படுவதுடன் மேலதிக உணவு வகைகளை கொள்வனவு செய்வதற்காக மாணவர்களை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த அடிப்படையில் 50 மாணவர்களுக்கு குறைவான வர்களைக் கொண்ட பாடசாலைகளுக்கு மாணவர் ஒருவருக்கு 7 ரூபா 25 சதவீதமும், 50 -100 இற்கு இடைப்பட்ட மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளுக்கு 6 ரூபா 25 சதவீதமும், 100 இற்கு மேற்பட்ட மாணவர்கள் காணப்படும் பாடசாலைகளுக்கு 5 ரூபா 75 சதவீதமும் நிதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிதி உணவு வழங்கும் தினங்களில் நாளாந்த சமுகமளிப்புக்கு அமைய வழங்கப்படவுள்ளது. இத்திட்டத்தில் நான்கு நாடகளுக்கு அரை முட்டை வீதமோ அல்லது இரண்டு நாட்களுக்கு 1 முட்டை வீதமோ பாடசாலை சிறார்களுக்கு அமுல் படுத்தப்படவுள்ள போசாக்கு வேலைத் திட்டம் - 2012 இன்படி பொருள்ர் தார அபிவிருத்தி அமைச்சினால் வழங்கப்படும்.

உணவுத் திட்டத்திற்கு மேலாக வழங்குமாறு கோரப்பட்டுள்ளது. இந்த வேலைத்திட்டத்தை அமுல் படுத்தும்பொழுது ஒரு முட்டையினை 8 ரூபா வீதமாக மட்டுமே கொள்வனவு செய்யுமாறும் அறிவூறுத்தப்பட்டுள்ளது.

எனவே தற்பொழுது யாழ்ப்பாணத்தில் 14 ரூபா வீதம் முட்டை விற்பனை செய்வதால் 8 ரூபா வீதம் முட்டையினைக் கொள்வனவு செய்ய முடியாமையினால் முட்டையினை பெற்றுக் கொள்வதில் பல பாடசாலைகள் பின்னடைந்து வருவதாக அறிய முடிகின்றது. (42)

# காணி சுவீகரிப்பு வழக்கு மீண்டும் ஒத்திவைப்பு

(கிளிநொச்சி)

திருமுறிகண்டி - இந்துபுரம் பொதுமக்களின் காணியை இராணுவத்தின் 57 ஆவது படைப்பிரிவிடமிருந்து மீட்பதற்காக கடந்த 2012.03.30 ஆம் திகதி அன்று முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் பொது மக்களால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

எதிர்த்தரப்பினர் பதில் பத்திரத்தை கோவையிட்டு அணைப்பதற்காக எதிராளிகளின் சட்டத்தரணி பரஞ்சோதி விண்ணப்பித்ததையடுத்து இவ்வழக்கு விசாரணைகள் 20.08.2012ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இதன்போது அப்பகுதி பொதுமக்களும் நீதிமன்றத்திற்கு சமுகமளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

Grade - 13

# க.பொ.த.(உயர்தர) மாதிரி வினாத்தாள்

G.C.E. (A/L) Examination model Paper

02 | T | II

பௌதிகவியல் - I

Physics - I


# கல்வி முரசு

நேரம் :
2 மணித்தியாலம்

**பௌதிகவியல்** I - பகுதி II *தொடர்ச்சி...*

15. X,Y என்னும் இரு செய்மதிகள் சமதிணிவுகளை உடையன. இவை புவி மேற்பரப்பிலிருந்து r 2r ஆரைகளில் பூமியைச் சுற்றி வலம் வருகின்றன.

$\frac{\text{Y யில் தாக்கும் மைய நாட்ட விசை}}{\text{X இல் தாக்கும் மைய நாட்ட விசை}}$ இன் விகிதம்




1) 1/8  2) 1/4
3) 1/2  4) $1/\sqrt{2}$  5) 1

16. ஒலி அலைகளை உருவாக்கும் முதல் ஒன்றைப் பற்றிய பின்வரும் கூற்றுக் களைக் கருதுக.
A) அதிர்வெண்ணுடன் அதன் சுருதி அதிகரிக்கும்.
B) ஒலியின் பண்பு அதன் மேற்றோனிகளில் தங்கியிருக்கும்.
C) ஒலியின் உரப்பு அதன் செறிவுக்கு நேர்விகித சமனாகும்.
இக்கூற்றுக்களில் சரியானது / சரியானவை.
1) A மாத்திரம் உண்மையானது.
2) B மாத்திரம் உண்மையானது.
3) A யும் B யும் மாத்திரம் உண்மையானவை.
4) B யும் C யும் மாத்திரம் உண்மையானவை.
5) எல்லாம் உண்மையானவை.


17. கட்புலனாகு திருசியப்பட்டை தொடர்பான பின்வரும் கூற்றுக்களை கருதுக.
A) சிவப்பின் அலைநீளம் நீலத்தின் அலைநீளத்திலும் பெரியது.
B) நீலநிறத்திற்கான போட்டோன் சக்தியானது சிவப்பிலும் அதிகமாகும்.
C) குறித்த ஊடகம் ஒன்றில் நீல நிறத்திற்கான விலகற்கோணம் சிவப்பின் விலகற்கோணத்திலும் அதிகமாகும். இக்கூற்றுக்களில் சரியானது - சரியானவை.
1) C மாத்திரம்  2) B யும் C யும் மாத்திரம்
3) A யும் B யும் மாத்திரம்  4) A யும் C யும் மாத்திரம்
5) எல்லாம்

18. ஒரு புள்ளியிலுள்ள ஒலிச் செறிவானது முதலில் இருந்து இப்புள்ளிக்கான தூரத்தின் வர்க்கத்திற்கு நேர்மாறு விகித சமனாகும். முதலில் இருந்து 10 m தூரத்திலுள்ள புள்ளியில் ஒலிச் செறிவு மட்டம் 50 dB ஆயின் 100 m தூரத்தில் ஒலிச் செறிவு மட்டம்,
1) 30 dB  2) 40 dB  3) 50 dB  4) 60dB  5) 70dB

19. வளியில் ஒலியின் வேகமானது
A) வெப்பநிலை அதிகரிப்புடன் குறையும்.
B) வளியமுக்கம் திடீரெனக் குறையும் போது வேகம் குறைவடையும்.
C) வளியின் சார்ஈரப்பதன் அதிகரிப்புடன் அதிகரிக்கும்.
இக்கூற்றுக்களில் சரியானது - சரியானவை.
1) A மாத்திரம்  2) B மாத்திரம்
3) B யும் C யும் மாத்திரம்  4) A யும் C யும் மாத்திரம்
5) A, B, C எல்லாம்.


20. இயல்பான செப்பம் செய்கையிலுள்ள கூட்டு நுணுக்குக்காட்டியில் 2.4 cm குவியத்தூரமுடைய பொருளியினால் உருவாக்கப்படும் பொருள் ஒன்றின் விம்ப மானது அதிலிருந்து 12 cm இல் உருவாகின்றது. பார்வைத் துண்டின் ஏகபரிமாண உருப்பெருக்கம் 5 ஆகும் ஆயின் நுணுக்குக்காட்டியில் கோண உருப்பெருக்கம்,
1) 20  2) 16  3) 12  4) 6  5) 4

21. சீரான கம்பியினால் உருவாக்கப்பட்ட அரைவட்ட பகுதிகளின் அமைப்பு ஒன்று ஒரு காட்டுகின்றது. வளைந்த பகுதிகளின் அலகு நீளத்திற்கான தடை சமனாகும். நேரான கம்பிகளின் தடை புறக்கணிக்கத்தக்கது. படத்தில் காட்டியவாறு 7 A மின்னோட்டம் பாய்ந்தால் மையம் O வில் விளையுள் காந்தப்பாய அடர்த்தி.





1) $\frac{5\mu_o I}{8r}$  2) $\frac{13\mu_o I}{16r}$  3) $\frac{8\mu_o I}{2\pi r}$
4) $\frac{8\mu_o I}{13\pi r}$  5) 0

22. A யின் திணிவு 2 m ஆகும். மற்றைய எல்லாக் குண்டுகளும் m திணிவை உடையவை. A யானது ஒரு பக்கத்திற்கு இழுக்கப்பட்டு விடப்படும்போது அது B யுடன் V வேகத்துடன் மோதுகின்றது. எல்லா மோதுகைகளும் பூரண மீள் தன்மை உடையவை. A யானது B யுடன் மோதிய பின்னர்,




1) A யானது V கதியுடன் பின்னதைக்கும். மற்றைய எல்லாம் ஓய்வில் இருக்கும்.
2 A யானது உடனடியாக ஓய்வுக்கு வர D யும், E ஆனது V கதியுடன் இயங்கும்.
3) A யானது உடனடியாக ஓய்வுக்கு வர மற்றைய எல்லாம் V/4 கதியுடன் இயங்கும்.
4) A யானது ஓய்வுக்கு வர E ஆனது V/2 கதியுடன் இயங்கும்.
5) A, B, C, D, E எல்லாம் V/5 என்னும் ஒரே கதியுடன் இயங்கும்.

23. கருவொன்றை நோக்கி புரோத்தன் ஒன்று எறியப்படுகிறது. அதன் பாதையாக இருக்க முடியாதது.




1) 1
2) 2
3) 3
4) 4
5) 5

24. ஓர் மூடிய கொள்கலன் ஒன்றினுள் 1 mol ஒட்சிசனும் 4 mol ஐதரசனும் உள்ளன. ஒட்சிசன், ஐதரசன் என்பவற்றின் மூலர்த்திணிவுகள் முறையே 32, 2 ஆகும் ஆயின்,

$\frac{\text{ஒட்சிசனின்வர்க்க இடைமூலவேகம்}}{\text{ஐதரசனின்வர்க்க இடைமூலவேகம்}}$ என்னும் விகிதம் தருவது,


1) 16  2) 4  3) 2  4) 1/4  5) 1/16

25. பார்வைக் குறைபாடுடைய நபர் ஒருவரின் அண்மைப் புள்ளி 40 cm. 30 cm தூரத்திலுள்ள பொருளைப் பார்ப்பதற்கு அவர் அணியும் வில்லையின் வகையும், புதிய பார்வை வீச்சும்.


| | வகை | வீச்சு |
|---|---|---|
| 1) | குவிவுவில்லை | 40 cm தொடக்கம் முடிவிலி |
| 2) | குழிவுவில்லை | 40 cm தொடக்கம் முடிவிலி |
| 3) | குவிவுவில்லை | 60 cm தொடக்கம் 30 cm வரை |
| 4) | குழிவுவில்லை | 60 cm தொடக்கம் 30 cm வரை |
| 5) | குவிவுவில்லை | 120 cm தொடக்கம் 30 cm வரை |

26. அருகே காட்டப்பட்ட உருக்களானது அலை ஒன்றின் இடப்பெயர்ச்சி தூர வரைபை உரு (a) யும், இடப்பெயர்ச்சி நேர வரைபை உரு (b) யும் வகைக்குறிக்கின்றன எனின், இவ்வலையின் கதி,

1) $2\ cm\ s^{-1}$
2) $4\ cm\ s^{-1}$
3) $6\ cm\ s^{-1}$
4) $5\ cm\ s^{-1}$
5) $10\ cm\ s^{-1}$






27. A, B என்னும் இரு மின்குமிழ்களும், ஓர் ஆளி S உம் படத்தில் காட்டியவாறு கம்பியினால் இணைக்கப்பட்டுள்ளது. வட்டத்தளத்திற்கு உள்நோக்கி அதிகரிக்கும் காந்தப்புலம் படத்தில் காட்டியவாறு பிரயோகிக்கப்படுகின்றது. அப்போது மின்குமிழ்கள் ஒளிருகின்றன. தற்போது ஆளி S மூடப்படுகின்றது. தடத்திலுள்ள மின்னோட்டத்தின் திசையும் மின்குமிழின் ஒளிர்வு பற்றிய கூற்றுக்களில் சரியானது.




| S ஆனது மூடப்படமுன் மின்னோட்டம் | S ஆனது மூடப்படபின் மின்னோட்டம் A | B |
|---|---|---|
| மணிக்கூட்டுத்திசை | ஒளிரும் | ஒளிரும் |
| மணிக்கூட்டுக்கு எதிர்த்திசை | ஒளிராது | ஒளிரும் |
| மணிக்கூட்டுத்திசை | ஒளிராது | ஒளிராது |
| மணிக்கூட்டுக்கு எதிர்த்திசை | ஒளிரும் | ஒளிராது |
| மணிக்கூட்டுத்திசை | ஒளிராது | ஒளிராது |


28. புள்ளி ஏற்றம் + q ஆனது கடத்தி பொன்கோளத்தினுள் நிறுத்தப்பட்டுள்ளது. பின்வரும் உருக்களில் மின்விசைக் கோடுகளை சரியாகக் காட்டுவது,







29. X,Y என்னும் இரு குமிழ்கள் முறையே 2V, V என்னும் கனவளவுகளை உடையவை. குமிழ் X இன் வெப்பநிலை 200 K இலும் Y இன் வெப்பநிலை 400 K இலும் பேணப்படுகின்றது. X இல் உள்ள வாயுவின் திணிவு m ஆயின் Y யிலுள்ள வாயுவின் திணிவு,

1) m/8 2) m/6
3) m/4 4) m/2
5) m





30. குவிவுவில்லை ஒன்றினால் உருவாக்கப்படும்பொருள் O வின் விம்பம் I ஆகும். படத்தில் காட்டியவாறு வில்லையானது மூன்று சம பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு படத்தில் காட்டியவாறு வைக்கப்படும் போது தோன்றும் விம்பங்களின் எண்ணிக்கை,

1) 1 2) 2
3) 3 4) 4
5) 4 இற்கு மேல்





31. காட்டப்பட்ட இலக்கச் சுற்றில் பெய்ப்புகள் X, Y இற்கு ஒத்த பயப்பு Z சரியாக இருப்பது.




| | | | | | |
|---|---|---|---|---|---|
| X | 1 | 0 | 1 | 0 | 0 |
| Y | 0 | 1 | 1 | 1 | 0 |
| Z | 1 | 0 | 0 | 1 | 1 |
| | 1) | 2) | 3) | 4) | 5) |


32. காட்டப்பட்ட மின்சுற்றில் கலங்களினதும் அம்பியர்மானிகளினதும் அகத்தடைகள் புறக்கணிக்கத்தக்கவை ஆயின் $A_1$, $A_2$ என்னும் அம்பியர்மானிகளின் வாசிப்புகளை சரியாகத் தருவது,

| | $A_1$ | $A_2$ |
|---|---|---|
| 1) | 1.4A | 1.4A |
| 2) | 1.4A | 2.0A |
| 3) | 0.5A | 2.0A |
| 4) | 2.9A | 1.0A |
| 5) | 3.0A | 4.0A |





33. ஒரு முனை மூடப்பட்ட குழாய் ஒன்றின் அதிரும் வளித்துணிக்கைகள் அடிப்படை அதிர்வெண் 200 Hz ஆகும். பின்னர் இக்குழாய் சர்வசமனான இரு துண்டுகளாகப் படத்தில் காட்டியவாறு பிரிக்கப்படுடன் குழாய்கள் A யிலும், B யிலும் உருவாகும் அடிப்படை அதிர்வெண்கள் முறையே,

1) 200 Hz, 400 Hz 2) 400 Hz, 800 Hz
3) 400 Hz, 200 Hz 4) 800 Hz, 400 Hz
5) 200 Hz, 800 Hz





34. படிகூட்டு நிலைமாற்றி ஒன்றில் சுற்றுக்களின் எண்ணிக்கைகளின் விகிதம் 1: 5 தடைகள் காரணமாக ஏற்பட்ட வெப்ப சக்தி இழப்பு 4 W ஆகும். முதற்சுற்றில் அழுத்தமும் மின்னோட்டமும் முறையே 10 V உம் 2A உம் ஆகும். துணைச்சுற்றில் மின்னோட்டம்





1) 0.1A 2) 0.4A 3) 0.5A
4) 0.6A 5) 0.8A

35. சீரான காந்தப்பாய அடர்த்தி B ஐ உடைய பிரதேசத்தில் ஒரு r ஆரையுடைய x என்னும் மின்னோட்டம் I பாயும் கடத்தும் தடம் வைக்கப்பட்டுள்ளது. தடத்தில் உருவாக்கப்படும் இழுவை,





1) BIr 2) 2BIr 3) 2BI/r
4) BI/2r 5) 2r/BI

36. ஒரே பரிமாணங்களை உடைய X,Y,Z என்னும் மூன்று கம்பிகளில் தொங்கவிடப்படும் சுமையுடன் நீட்சி மாறுபடுவதை வரைபு காட்டுகிறது. X,Y,Z என்பன முறையே இருக்கக்கூடியது





| | X | Y | Z |
|---|---|---|---|
| 1) | கண்ணாடி | செப்பு | இறப்பர் |
| 2) | கண்ணாடி | இறப்பர் | செப்பு |
| 3) | இறப்பர் | கண்ணாடி | செப்பு |
| 4) | செப்பு | கண்ணாடி | இறப்பர் |
| 5) | செப்பு | இறப்பர் | கண்ணாடி |

37. A,B என்னும் ஒரே மைய உலோக ஓடுகளில், கோள ஓடு A யிற்கு + Q ஏற்றம் கொடுக்கப்பட்டு B யானது புவிக்கு இணைக்கப்பட்டுள்ளது.




1) A யிலும் B யிலும் மின்புலச் செறிவுகள் சமனாகும்.
2) A யிற்கும் B யிற்கும் இடையில் மாத்திரம் மின்புலச் செறிவு காணப்படும்.
3) B யிற்கு வெளியே மாத்திரம் மின்புலச் செறிவு காணப்படும்.
4) A யின் உள்ளே வெளியிட்ட மின் அழுத்தம் சமனாகும்.
5) B யானது புவிக்கு இணைக்கப்படாது இருப்பின் மாத்திரம் B யிற்கு வெளியே மாத்திரம் மின்புலச் செறிவு இருக்கும்.


38 காட்டப்பட்ட அழுத்தமானிச் சுற்றில் உள்ள மின்கலங்கள் எல்லாம் புறக்கணிக்கத்தக்க அகத்தடையை உடையவை. $E_2 > E_1$ ஆயின் சமநிலைப்புள்ளியைப் பெறுவதற்கு,




1) $E_2$ வுடன் தொடராக தடை ஒன்றை இணைத்தல் மூலம்,
2) $E_1$ உடன் தொடராக தடை ஒன்றை இணைத்தல் மூலம்,
3) கம்பி AB ஐ அகற்றி அதற்குப்பதிலாக உயர் தடையுடைய கம்பியை பயன்படுத்தல்,
4) $E_2$ விற்கு சமாந்தரமாக ஏற்றத்தடை ஒன்றை இணைத்தல்,
5) $E_1$ இந்த சமாந்தரமாக ஏற்றத்தடை ஒன்றை இணைத்தல்.

39. X,Y என்னும் புள்ளிகள் புவிமேற்பரப்பிலிருந்து முறையே r, 2 r தூரங்களில் உள்ளன. புள்ளி X இல் ஈர்ப்பு அழுத்தம் - 8j $kg^{-1}$ x இல் இருந்து Y யிற்கு 2 kg திணிவைக் கொண்டு செல்வதில் செய்யப்பட வில்லை.


1) -8 kJ
2) -4 kJ
3) +4 kJ
4) +8 kJ
5) +16 kJ




(தொடரும்.....)

# சுற்றுச்சூழல் சீர்கேட்டைத் தடுக்க வளர்ந்த நாடுகள் உதவவேண்டும்

## - பிரேசிலில் இந்தியப்பிரதமர் உரை -



தொழில்வளர்ச்சியில் முன்னேறியுள்ள வளர்ந்த நாடுகள், கரியமில வாயு வெளியீட்டைக் கட்டுப் படுத்தத் தேவையான நவீன தொழில்நுட்பங்களை யும், நிதி உதவியையும் வளரும் நாடுகளுக்கு வழங்க வேண்டும். அப்போதுதான் சர்வதேச அளவில் கரியமில வாயு வெளியாவது குறைந்து, சுற்றுச்சூழல் சீர்கேடு அடைவது தவிர்க்கப்படும். ஆனால் மிகக்குறைந்த அளவிலேயே வளரும் நாடுகளுக்கு உதவிகள் கிடைத்து வருகின்றன என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் குற்றம் சாட்டியுள்ளார்.

பிரேசிலில் ரியோ - டி - ஜெனிரோ நகரில் நடைபெற்று வந்த "ரியோ பிளஸ் 20" மாநாட்டின் கடைசி நாளன்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

இப்போது ஏற்பட்டுள்ள பொருளாதார மந்த நிலை, நிலைமையை மேலும் சிக்கலுக்குள்ளாக்கி விட்டது.

பொருளாதார வளர்ச்சி என்பது சமூக மேம்பாடு, சுற்றுச்சூழல் சீர்கெடாமல் பாதுகாப்பது ஆகியவற்றை உள்ளடக்கியதுதான். ஒவ்வொரு நாடும் தங்களுடைய சூழ்நிலைக்கு ஏற்ப வளர்ச்சியடைய துணை நிற்க வேண்டியது சர்வதேச சமூகத்தின் கடமை.

வளரும் நாடுகள் பல்வேறு சிக்கல்களுக்கு நடுவே முன்னேறி வருகின்றன. சுற்றுச்சூழல் பாதுகாப்பைச் சுட்டிக்காட்டி அவற்றின் மீது மேலும் சுமைகளை ஏற்றுவது ஏற்றுக் கொள்ளக் கூடியது அல்ல.

அனைத்து நாடுகளுமே எரிசக்தித்துறையில் அதிக முக்கியத்துவம் செலுத்த வேண்டியுள்ளது. பெட்ரோல், டீசல், எரிவாயு, மின்சாரம், நிலக்கரி உள்ளிட்டவற்றை சரியான முறையில் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும்.

இந்தியாவில் சூரிய சக்தி மூலம் மின்சார தயாரிப்பை அதிகரிக்க தேசிய சூரியசக்தி திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நாடும் பொருளாதார வளர்ச்சிக்காக தொழில்மயமாதல் நடவடிக்கைகளை எடுக்கும்போது அது சுற்றுச்சூழலை பாதிக்கிறது.

சுற்றுச்சூழல் பிரச்சினைகளை வளரவிடாமலும், அதே நேரத்தில் பொருளாதார வளர்ச்சியையும் தொடர்ந்து மேம்படுத்த வேண்டியது அவசியமாகும். இதில் அனைத்து நாடுகளும் சமமாகப் பங்காற்ற வேண்டும்.

இந்தியாவில் இதற்கான சிறப்பான முயற்சிகள் எடுக்கப்பட்டு, கரியமில வாயு வெளியிடப்படுவது பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எதிர்காலத்திலும் இதுபோன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பல்லுயிர் பெருக்கம் தொடர்பான சர்வதேச மாநாடு இந்தியாவில் இந்த ஆண்டு நடைபெறவுள்ளது. இதுபோன்ற மாநாடுகள் மூலம் சர்வதேச சமூகம் ஒன்றிணைந்து சுற்றுச்சூழலைக் காக்க வேண்டும் என்றார்.

# இந்து கொள்கையை பின்பற்றுபவரே அடுத்த பிரதமராக வேண்டும்



(மும்பை)

இந்து கொள்கையை பின்பற்றும் ஒருவர் தான், நாட்டின் அடுத்த பிரதமராக தேர்வு செய்யப்பட வேண்டும் என சிவசேனா தலைவர் பால் தாக்கரே கூறியுள்ளார்.

சிவசேனா கட்சி பத்திரிகையான "சாம்னா"வில், கட்சித் தலைவர் பால் தாக்கரே எழுதியுள்ளதாவது; மதச்சார்புடையவர் அடுத்த பிரதமர் பதவிக்கான வேட்பாளராக தேர்வு செய்யப்படுவதை, ஒருபோதும் ஏற்க மாட்டோம் என சிலர் கூறியுள்ளனர். இந்துத்வா கொள்கையை பின்பற்றுவோர் மீது, அவர்கள் வைத்துள்ள வெறுப்புத் தான் இதைப் பிரதிபலிக்கிறது. என்னைப் பொறுத்தவரை, இந்துத்வா கொள்கையை பின்பற்றும் ஒருவரை தான், நாட்டின் அடுத்த பிரதமராக தேர்வு செய்ய வேண்டும். ஜனாதிபதி தேர்தலில், சங்மாவை ஆதரிக்கப் போவதாக, பா.ஜ. அறிவித்துள்ளது. ஆனால், எங்களுக்கு அதில் விருப்பம் இல்லை. நாட்டின் நலன் கருதி, பிரணாபை ஆதரிக்கப்போவதாக அறிவித்துள்ளோம். தே.ஜ. கூட்டணியில் உள்ள ஐக்கிய ஜனதா தளமும், பிரணாபை தான் ஆதரிக்கிறது. அதற்காக, தே.ஜ. கூட்டணியில் விரிசல் ஏற்பட்டு விட்டதாக காங்கிரஸ் நினைத்தால், அது மிகவும் தவறு. இவ்வாறு பால் தாக்கரே கூறியுள்ளார்.

நாட்டின் அடுத்த பிரதமர் பதவிக்கான வேட்பாளராக, தே.ஜ. கூட்டணி சார்பில், நரேந்திர மோடி யை நிறுத்தக் கூடாது என ஐக்கிய ஜனதா தளம் தலைவரும், பீகார் முதல்வருமான நிதிஷ் குமார் ஏற்கனவே கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.




# நித்தியானந்தா, ரஞ்சிதா மீது பொலிஸார் வழக்குப் பதிவு

மதுரை ஆதீன மடத்தில் புலித்தோல், யானைத் தந்தம் பரப்பப்பட்டு ஆபாச நடனம் ஆடியதாக சுவாமி நித்தியானந்தா, நடிகை ரஞ்சிதா மற்றும் மதுரை ஆதீன மடம் பணியாளர் வைஷ்ணவி உள்ளிட்டோர் மீது மதுரை மாநகரப் பொலிஸார் நேற்று முன்தினம் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

மதுரை ஆதீனத்தின் 293ஆவது ஆதீனமாக சுவாமி நித்தியானந்தா நியமிக்கப்பட்டதற்கு இந்து அமைப்புகள் உட்பட பல்வேறு தரப்பினரும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.


ஆதீன மடம் மீட்புக் குழு எனும் அமைப்பின் கீழ் எதிர்ப்பாளர்கள் போராடி வருகின்றனர். மேலும் மீட்புக் குழு சார்பில் ஆதீன மடத்துக்கு எதிராக வழக்குகளும் தொடரப்பட்டுள்ளன.

இந்நிலையில், மதுரை ஆதீன மடத்தின் ஒழுக்க முறைகள் மீறி பூஜை எனும் பெயரில் ஆபாசநடனங்கள் நடப்பதாகவும், புலி, யானைத் தந்தங்கள் வைக்கப்பட்டுள்ளதாகவும் இந்து மக்கள் கட்சியைச் சேர்ந்த சோலைக்கண்ணன் புகார் கூறியிருந்தார்.






இப்புகாரின் மீது மதுரை விளக்குத்தூண் பொலிஸார் வழக்குப் பதிய உத்தரவிடக் கோரி சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் மனுத் தாக்கல் செய்தார். மனு மீதான விசாரணை நேற்று முன்தினம் நடைபெற்றது.




# இந்திய இராணுவத்திற்கு ஏவுகணைகள்; 20 ஆயிரம் கோடி ரூபா ஒதுக்கீடு



இராணுவத்திற்கு ஏவுகணைகள் வாங்க ரூபா 20 ஆயிரம் கோடி ஒதுக்கீடு செய்ய மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இந்திய இராணுவத்திற்கு ஏவுகணைகள், ஆயுதங்கள், நவீனக் கருவிகள் வாங்குவதில் மத்திய அரசு போதிய அக்கறை காட்டவில்லை எனப் புகார் கூறப்பட்டு வந்தது.

இந்நிலையில் மத்திய அரசு இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

தலைநகர் புதுடில்லியில் பாதுகாப்புத்துறையின் கொள் முதல் சபைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்துக்கு, மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ஏ.கே.அந்தோனி தலைமை வகித்தார்.

இதில், இராணுவத்தின் 8 படைப் பிரிவுகளுக்காக தரையிலிருந்து வான் இலக்குகளை விரைவாகத் தாக்கும் ஏவுகணைகளை வாங்க ரூபா20 ஆயிரம் கோடி ஒதுக்கீடு செய்ய ஒப்புதல் அளிக்கப்பட்டது.

மேலும் விமானப் படைக்கு சிறிய ரக போர் விமானங்களை வாங்குவதற்கும், நாடு முழுவதும் இராணுவத் தகவல் தொடர்பை மேம்படுத்தவும், கடற்படைக்கு நவீன துப்பாக்கிகள் வாங்குவதற்கும் ரூபா 8,500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

விமானப் படையின் தகவல் தொடர்புத் திட்டம் ரூபா 7 ஆயிரம் கோடியில் செயற்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் பருவமழை நன்றாகப் பெய்யும்

## இந்திய வானிலை ஆய்வு மையம்



(புதுடில்லி)

தென்மேற்கு பருவமழை இந்த ஆண்டு வழக்கமான அளவுக்கு இருக்கும். இருந்தாலும், பெரிய அளவிலான கனமழை பெய்ய வாய்ப்பு இல்லை என இந்திய வானிலை ஆய்வு மையத்தினர் கூறியுள்ளனர்.

டில்லியில் உள்ள இந்திய வானிலை ஆய்வு மையத்தின் இயக்குனர் ஜெனரல் லட்சுமண் சிங் ரத்தோர், தென்மேற்கு பருவமழை தொடர்பான புதிய முன்னறிவிப்பை வெளியிட்டார்.

அப்போது அவர் கூறியதாவது; நீண்ட கால சராசரியில் கணக்கிட்டால், தென்மேற்கு பருவமழை 96 சதவீத அளவுக்கு பெய்யும் முன்னர் நாங்கள் வெளியிட்ட அறிவிப்பில், தென்மேற்கு பருவமழை 99 சதவீத அளவுக்கு பெய்யும் என தெரிவிக்கப்பட்டது.

கடந்த 50 ஆண்டு கால சராசரி மழை அளவைக் கணக்கிட்டால், 96 முதல் 104 சதவீத அளவுக்கு மழை பெய்தால், அது வழக்கமான அளவாகக் கருதப்படும். ஜூன் முதல் செப்டம்பர் வரையிலான காலகட்டத்தில் இந்த மழை பெய்யும்.

இந்த மாதம் பருவமழை பெரிய அளவில் பெய்யாவிட்டாலும், ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில், நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் பருவ மழை நன்றாகப் பெய்யும். நீண்ட கால சராசரி அடிப்படையில் கணக்கிட்டால், இந்த ஆண்டு ஜூலை மாதத்தில் 98 சதவீத அளவுக்கும், ஆகஸ்ட் மாதத்தில் 96 சதவீத அளவுக்கும் பருவமழை பெய்யும். பஞ்சாப், அரியானா உட்பட வடமேற்கு பிராந்தியங்களில், வழக்கமான அளவுக்கு குறைவாக 93 சதவீத அளவுக்கு மழை பெய்யும் என்றார்.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ........................................

முகவரி : ........................................

பிறந்த ஆண்டு : ........................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

........................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# சூடானில் உணவு விலை ஏற்றம்; மீண்டும் பட்டினி ஏற்படும் அபாயம்





சூடானில் உணவுப்பொருள்களின் விலைகளை அந்நாட்டு அரசு உயர்த்தியுள்ளமை பொதுமக்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


உணவுப்பொருள்களின் விலையேற்றத்தைக் கண்டித்து தலைநகர் கர்தூமில் பொதுமக்கள் போராட்டத்தில் களமிறங்கினர்.

மக்களின் போராட்டம் வலுவடைவதை தடுக்கும் பொருட்டு சூடான் அரச பொலிஸார் கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசிக் கலைத்தனர்.

இதனால் தலைநகர் முழுவதுமே கரும்புகையால் சூழப்பட்டு காட்சியளித்தது. சூடானில் உணவுப்பொருள்களின் விலையேற்றம் காரணமாக அந்நாட்டில் மீண்டும் உணவுப்பஞ்சம் ஏற்பட வாய்ப்புள்ளது. ஏற்கனவே 1994 ஆம் ஆண்டு ஏற்பட்ட உணவுப்பஞ்சம் மிகவும் கொடியது. இந்த காலகட்டத்தில் உணவு தேடிச் செல்லும் சிறுமியை ஒரு பிணந்தின்னி கழுகு துரத்துவது போன்ற எடுக்கப்பட்ட புகைப்படமும் மிகவும் பிரபலமானது. இது போன்ற ஒரு சம்பவம் சூடானில் மறுபடியும் நிகழக்கூடாது என்பதில் ஐக்கிய நாடுகள் மிகுந்த கவனத்தில் இருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

# லண்டனில் கோரியதை விட இருதொகை கொடுத்த "ஏ.ரி.எம்."

(லண்டன்)




லண்டனில் டோட்டன்ஹாம் கோர்ட் சாலையில் சான்ஸ்பரி என்ற இடத்தில் இருந்த ஏ.ரி.எம் ஒன்று வாடிக்கையாளர்கள் கேட்டதைப் போல 2 மடங்கு தொகையை அள்ளிக் கொடுத்தது.

இதனால் மகிழ்ச்சியில் ஆழ்ந்த வாடிக்கையாளர்கள் தாங்களே மீண்டும் மீண்டும் வரிசையில் நின்று அதிகபட்சம் எவ்வளவு எடுக்க முடியுமோ அவ்வளவு பணத்தையும் எடுத்தனர்.

அலுவலக நண்பர்களுக்கும், மற்றவர்களுக்கும் தகவல் தந்து கிட்டத்தட்ட அந்த ஏ.டி.எம் இயந்திரத்தைச் சூறையாடினர். ஆனால் நேர்மையான ஒரு வாடிக்கையாளர் நடப்பதைப் பார்த்து வங்கிக்குத் தகவல் கொடுத்துள்ளார். உடனே வங்கி நிர்வாகம் அந்த இயந்திரத்தைச் செயலிழக்க வைத்து நஷ்டத்தைத் தடுத்தது. இந்தத் தவறு ரொக்கத்தை நிரப்பிய வங்கி ஊழியரின் கவனக்குறைவால் ஏற்பட்டிருக்கிறது. இப்படி நஷ்டம் ஏற்படுத்திய வாடிக்கையாளர்களை அடையாளம் காண்பது எளிது என்றாலும் வங்கி நிர்வாகங்கள் இப்படி இரட்டிப்புப் பணம் பெற்றவர்களிடம் அதைத் திரும்பக் கேட்பதில்லை. ஏனென்றால் இயந்திரம் தரும் கணக்குச் சீட்டில் அவர்கள் கேட்ட தொகையைத் தான் தந்ததாக பதிவாகியிருக்கும்.

# அமெரிக்காவில் எனக்கு மரண தண்டனை வழங்கப்படலாம்

## - "விக்கிலீக்ஸ்" ஜூலியன் அச்சம்




(லண்டன்)

அமெரிக்காவின் இராணுவ இரகசியங்கள் உட்பட, பல்வேறு இரகசியங்களை, "விக்கிலீக்ஸ்" இணையதளத்தில் வெளியிட்டு, பரபரப்பை ஏற்படுத்தியவர் ஜூலியன் அசாஞ்ச். இரண்டு பெண்களை கற்பழித்தது தொடர்பாக, சுவீடன் அரசு, இவர் மீது வழக்கு தொடர்ந்தது.

இதையடுத்து, அசாஞ்ச், பிரிட்டனில் தஞ்சம் புகுந்தார். சுவீடன் கோரிக்கைப்படி, இவர் கைது செய்யப்பட்டார். லண்டன் நீதிமன்றம் இவருக்கு பிணை வழங்கியது. இதற்கிடையே, தங்கள் நாட்டிடம் ஒப்படைக்கும்படி, சுவீடன் கோரியது. இதை எதிர்த்து, அசாஞ்ச் மனு செய்திருந்தார். இந்த மனுவை விசாரித்த ஏழு நீதிபதிகளில், ஐந்து நீதிபதிகள், அசாஞ்சை சுவீடனிடம் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டுள்ளனர். இந்த உத்தரவை எதிர்த்து, அசாஞ்ச், மேல் முறையீடு செய்தார். ஆனால், இவரது மனுவை தள்ளுபடி செய்து விட்டது. இதையடுத்து, அசாஞ்சை கைது செய்து, சுவீடனிடம் ஒப்படைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதை தவிர்ப்பதற்காக, அசாஞ்ச், லண்டனில் உள்ள ஈக்வடார் நாட்டுத் தூதரகத்தில் தஞ்சம் புகுந்துள்ளார். தூதரகத்தை விட்டு வெளியேறும்பட்சத்தில், அவர் கைது செய்யப்படுவார். இதுகுறித்து, அசாஞ்ச் குறிப்பிடுகையில், சுவீடனுக்கு என்னை நாடு கடத்தினால், அமெரிக்காவிடம் நான் ஒப்படைக்கப்படுவேன், அமெரிக்காவின் இராணுவ இரகசியங்களை வெளியிட்டதற்காக, எனக்கு அமெரிக்காவில் மரண தண்டனை அளிக்கப்படும் அபாயம் உள்ளது என்றார்.

# பாகிஸ்தானின் புதிய பிரதமராக பர்வேஸ் அஷ்ரப் தேர்வு

(இஸ்லாமாபாத்)



பாகிஸ்தான் புதிய பிரதமராக ராஜா பர்வேஸ் அஷ்ரப் (வயது- 61) தேர்வு செய்யப்பட்டுள்ளார்.பாகிஸ்தான் அதிபர் ஆசிப் அலி சர்தாரி மீதான ஊழல் வழக்கில் நடவடிக்கை எடுக்காத காரணத்தால், கோர்ட் அவமதிப்பு வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு, பிரதமராக இருந்த யூசுப் ரசா கிலானி தகுதி நீக்கம் செய்யப்பட்டு, பதவி இழந்தார்.

இதையடுத்து, பாகிஸ்தான் மக்கள் கட்சியின் உயர் மட்டக்கூட்டம் உடனடியாகக் கூட்டப்பட்டு ஜவுளித்துறை அமைச்சர் மக்தூம் சகாபுதீனை புதிய பிரதமராக்கத் தீர்மானிக்கப்பட்டது.

இந்த கட்சியின் துணைத் தலைவர் என்ற முறையில் பாகிஸ்தான் அதிபர் சர்தாரி, சகாபுதீனை பிரதமராக்க முன்மொழிந்தார். இவருக்கு மாற்றாக தகவல் தொழில் நுட்ப அமைச்சர் ராஜா பர்வேஸ் அஷ்ரப், பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவர்களில் ஒருவரான கமர் சமான் கைரா ஆகியோரும் வேட்பு மனு தாக்கல் செய்திருந்தனர்.

உலகச் செய்திகள்

# காபூலில் தலிபான்கள் தாக்குதல்; 26 பேர் உயிரிழப்பு


(காபூல்)



ஆப்கானிஸ்தானில் நட்சத்திர விடுதி மீது தலிபான்கள் திடீர் தாக்குதல் நடத்தினர். பொலிஸாருக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே நடந்த மோதலில் 26 பேர் கொல்லப்பட்டனர்.

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சி செய்த போது பெண்கள் பர்தா அணிந்து தான் வீட்டை விட்டு வெளியே வர வேண்டும். பெண்கள் கல்வி கற்கக்கூடாது, சினிமா போன்ற கேளிக்கைகள் கூடாது என கட்டுபாடுகளை விதித்திருந்தனர். அமெரிக்க தாக்குதலுக்கு பின் தலிபான் ஆட்சி ஒழிக்கப்பட்டு, தற்போது ஹமீத் கர்சாய் தலைமையில் ஜனநாயக ஆட்சி நடக்கிறது. தலிபான்கள், ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் எல்லையில் தலைமறைவு வாழ்க்கை நடத்துகின்றனர். இவர்கள் அடிக்கடி அமெரிக்க படைகள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர். ஆப்கானிஸ்தானில், அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகள் இன்னும் பணியில் உள்ளன. 2014ஆம் ஆண்டு வரை வெளிநாட்டு படைகள் ஆப்கனில் தங்கியிருக்க ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# சுமாத்திரா தீவில் நில நடுக்கம்



இந்தோனேஷியாவின் சுமாத்திரா தீவில் நேற்று காலை நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.6 ஆக பதிவாகி உள்ளது. நில நடுக்கத்தால் ஏற்பட்ட சேத விபரம் குறித்த தகவல்கள் ஏதும் வெளியிடப்படவில்லை.

ஆனால் இதனைத் தொடர்ந்து மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட வாய்ப்பு இருப்பதாகவும், மற்ற இடங்களையும் தாக்கும் அபாயம் இருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளன.

மேலும் பொதுமக்கள் பாதுகாப்பான இடத்திற்கு கொண்டு செல்ல அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

# சிரிய அரசு எதிர்ப்பு படையில் அல்கொய்தா ஊடுருவல்

சிரியாவில் அரசு எதிர்ப்பு படையில் அல்கொய்தா தீவிரவாதிகள் ஊடுருவியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சிரியாவில் ஜனாதிபதி பஷார் அல் அசாத்திற்கு எதிராக கடந்த ஓராண்டிற்கும் மேலாக போராட்டம் நடந்து வருகின்றது.

இவர்களை ஒடுக்க இராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது, இதில் ஏராளமான அப்பாவி பொது மக்கள் பலியாகி வருகின்றனர். இதனை தடுக்க ஐ.நா சபை தீவிரமாக முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இதேவேளை ஜனாதிபதியை எதிர்த்து போராட்டம நடத்தும் கிளர்ச்சிப்படைக்கு புதிய ரக ஆயுதங்களும், தோள் மீது வைத்து சுடும் ஏவுகணை சாதனங்கள் கிடைப்பதாகவும், இவை லெபனானில் இருந்து கொள்ளையடிக்கப்பட்டு கள்ள சந்தை வழியாக கிடைப்பதாகவும் கூறப்படுகிறது.

இதுமட்டுமல்லாமல் அல்கொய்தா இயக்கத்தினரின் ஊடுருவலும் அதிகரித்து வருவதாக கருதப்படுகிறது. இது அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளை அதிர்ச்சி அடைய செய்துள்ளது.

இது தொடர்பாக அமெரிக்க இரா்ணுவ அமைச்சர் லியான் பெனட்டா கூறுகையில், சிரியாவில் நடக்கும் மோதல்களத்தில் தோள் மீது வைத்து சுடும் விமான எதிர்ப்பு ஏவுகணைகள் பயன்படுத்தப்படுவது கவலை அளிக்கிறது. இவை உடனடியாக தடுக்கப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

முன்னாள் சி.ஐ.ஏ அதிகாரியான புருசி ரியிடேல் கூறுகையில், சிரியா ஜனாதிபதியை எதிர்க்கும் படையில் அல்கொய்தா மற்றும் வேறு தீவிரவாத இயக்கங்களின் ஊடுருவல் இருக்கிறது எனத் தெரிவித்துள்ளார்.

# துருக்கியின் விமானத்தை சுட்டுவீழ்த்தியது சிரியா



துருக்கி நாட்டுக்கு சொந்தமான எவ்-4 ரக போர் விமானம் ஒன்றை சிரியா சுட்டு வீழ்த்தி உள்ளது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இதுகுறித்து துருக்கியின் பிரதமர் தாயீப் எர்டோகன் கூறுகையில், விமானத்தை சுட்டு வீழ்த்திய உடன் விமானப்படையும், கடற்படையும் இணைந்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டன. நாங்கள் விமானத்தை மட்டுமே இழநதுள்ளோம், விமானிகள் இருவரும் உயிருடன் இருக்கின்றனர் என்று தெரிவித்தார்.மேலும் இதற்கு சிரியா மன்னிப்பு கோரியுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதற்கு முன்னதாக மத்திய தரைக்கடல் பகுதியில் சிரியாவுக்கு அருகில் வைத்து தனது விமானம் ஒன்றை ராடார் திரையில் இருந்து மறைத்ததாக துருக்கி அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# முல்லைத்தீவில் வாழ்வு எழுச்சித் திட்டத்தின் தொழில்நுட்ப கண்காட்சியும் விழிப்புணர்வும்

(முல்லைத்தீவு)

வாழ்வு எழுச்சித் திட்டத்தின் தொழில்நுட்ப கண்காட்சியும் விழிப்புணர்வும் எதிர்வரும் ஜூலை மாதம் 28, 29 ஆம் திகதிகளில் முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெறவுள்ளது. இது தொடர்பான ஆரம்ப முன்னேற்பாட்டுக் கூட்டம் முல்லைத்தீவு மாவட்ட செயலாளரும் அரச அதிபருமான வேதநாயகன் தலைமையில் நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, வாழ்வு எழுச்சித் திட்டத்தின் நோக்கங்களை தெளிவுபடுத்தினார். இத்திட்டத்தின் பணிப்பாளர் கமகே கண்காட்சி தொடர்பில் தெளிவுபடுத்தியதுடன் இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பொதுமுகாமையாளர் திருமதி ஜெஸ்மின் மன்னப்பெரும திட்டத்தின் முன்னேற்றங்கள் தொடர்பில் எடுத்து விளக்கினார்.

முன்னாள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கனகரட்ணம் இங்கு உரையாற்றும் போது, வாழ்வு எழுச்சி போன்ற கைத்தொழில் கண்காட்சி முல்லைத்தீவு மாவட்டத்தில் நடத்துவது வரவேற்கத்தக்கதாகும் என தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் மாவட்டத்தில் வாழ்வு எழுச்சி கண்காட்சி இடம்பெற்றபோது அதில் 9000 இற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். அதே போன்று முல்லைத்தீவு மாவட்டமும் பரந்து விரிந்த மாவட்டமாகும். இம் மாவட்டத்தில் பல்வேறு கைத்தொழில் துறைகள் சிறப்பாக வளர்ச்சி பெற்று பின்னர் பின்னடைந்த நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன.

எனவே அக் கைத்தொழில்களை மேலும் ஊக்குவித்து விருத்தி செய்வதற்கும் புதிய பல கைத்தொழிற் துறைகளை வளர்த்தெடுப்பதற்கும் இக்கண்காட்சி மிகவும் முக்கியமானதாகும். மேலும் தொழில் முயற்சிகள் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எடுத்து வருகின்ற முயற்சி பாராட்டத்தக்கது எனத் தெரிவித்தார்.

## வெடிபொருட்கள் மீட்பு

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு அம்பலவன் பொக்கணைப் பகுதியில் கடந்த புதன்கிழமை விசேட அதிரடிப் படைப் பொலிஸார் மேற்கொண்ட தேடுதலின்போது விடுதலைப் புலிகளினால் நிலத்தின் கீழ் மறைத்து வைக்கப்பட்டிருந்த பெருமளவு வெடிபொருட்கள், வாகனங்கள் என்பன மீட்கப்பட்டிருப்பதாக யாழ் சிரேஷ்ட பொலிஸ அத்தியட்சகர் சிறிகுகநேசன் தெரிவித்தார்.

இவற்றில் கைக்குண்டுகள், எறிகணைகள், ரவைகள், பற்றரிகள், வெளிச்சக் குண்டுகள், 2 டிப்பர் வாகனங்கள், ஒரு உழவு இயந்திரம், வெற்று பரல்கள் போன்றனவும் அடங்குவதாகவும் தெரியவருகின்றது.

மேலும் இவற்றை மறைத்து வைப்பதற்கு பயன்படுத்தப்பட்ட 104 தேக்கங் குற்றிகளையும் அதிரடிப்படை பொலிஸார் மீட்டிருப்பதாகவும் மேலும் தெரியவருகின்றது. (பா)

## கண்ணிவெடி...

வெடித்துள்ளது. இதில் கண்ணிவெடியகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த 2 பிள்ளைகளின் தந்தையான தனபாலசிங்கம் குலசிங்கம் (வயது - 32) மாமுனை, செம்பியன்பற்று, ஒரு பிள்ளையின் தந்தையான ஜேசுதாசன், ஜெற்ரியூட்ஸ் (வயது - 34) குருநகர், ப.பாமினி (வயது - 20) சுதுமலை தெற்கு, மானிப்பாய் ஆகிய மூவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி பகுதியில் மிதிவெடியகற்றும் பணியினை ஹலோரஸ்ட் பணியாளர்கள் நேற்றுக் காலை ஆரம்பித்த சிறிது நேரத்தில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (பா)

## ஜனாதிபதியின்...

கோரினேன். ஆனால் இப்பிரச்சினையை தீர்ப்பதற்கு எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை என அவர் கூறினார்.

குண்டசாலை விவசாய கல்லூரி உள்ள இடத்தில் விமான நிலையமொன்றை அமைப்பது முட்டாள்தனமான திட்டம். சீதா எலிய விதை நிலையத்திலும் அவர்கள் விமான நிலையமென்றை அமைக்க விரும்புகிறார்கள் எனவும் அவர் கூறினார்.

தனது எதிர்கால அரசியல் குறித்து இன்னும் சில தினங்களில் தீர்மானிக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இறுதியாக 2004 ஆம் ஆண்டு காலி மாவட்டத்திலிருந்து ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவான ஹேமகுமார பின்னர் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தில் இணைந்து விவசாயத்துறை அமைச்சராக பதவி வகித்தார்.

2010 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் உடல்நலக் குறைவு காரணமாக அமைச்சர் பதவியிலிருந்து இராஜினாமா செய்த அவர், 2010 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் போட்டியிடவில்லை. பின்னர் ஜனாதிபதியின் விவசாயத்துறை ஆலோசகராக நியமிக்கப்பட்டார்.

இலங்கையின் நிலையான விவசாய அபிவிருத்திக்காக சேதன விவசாயத்தை கடைப்பிடித்தல் தொடர்பாக அவர் மேற்கொண்ட ஆராய்ச்சிக்காக கடந்த வருடம் பேராதனை பல்கலைக்கழகத்தினால் அவருக்கு கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மீள்குடியேறிய...

பாதையில் மடு வீதியிலிருந்து தலைமன்னார் வரையிலான ரயில்பாதை அமைக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதனால், ரயில் பாதையில் குடியிருந்த குடிசைகள் அகற்றப்பட்டு. அங்கு குடியிருந்தவர்கள் வெளியேற்றப்பட்டிருக்கின்றார்கள். இதனையடுத்தே ஐம்பது வீட்டுத்திட்டத்தில் இந்தக் குடும்பங்கள் மீள்குடியேறியிருக்கின்றன.

மீள்குடியேற்றத்திற்காக வீடுகளைத் திருத்தவும், அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும் குடும்பம் ஒன்றிற்கு ஒரு இலட்சம் ரூபா மானியமாகவும், இரண்டு இலட்சம் ரூபா கடனாகவும் வழங்கப்பட்டு இந்தக் குடும்பங்கள் ஐம்பது வீட்டுத் திட்டத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டதாக மன்னார் பிரதேச செயலர் திருமதி ஸ்ரான்லி டி மெல் தெரிவித்தார்.

வெளியேற்றப்பட்ட குடும்பங்களை மீண்டும் அவர்களது இடங்களில் சென்று வசிப்பதற்குரிய முயற்சிகளுக்காக உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டிருப்பதாக பேசாலை பங்குத் தந்தை விக்டர் சோசை தெரிவித்துள்ளார். [illegible]த்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதேச செ[illegible] கூறியுள்ளார்.

## காணி...

தவணை வழங்கப்பட்டது. இதன்போது அப்பகுதி பொதுமக்களும் நீதிமன்றத்திற்கு சமுகமளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## திருமுறிகண்டியில்...

நாடாளுமன்ற உறுப்பினர் உனைஸ் பாருக், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் வேதநாயகன், ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் திரேஸ்குமார், திருமுறிகண்டி கிராம அலுவலர் குபேந்திரன், இராணுவ உயரதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## இந்திய,...

சிக்கலான பிரச்சினைகளைத் தீர்க்க உதவியதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் வடக்கில் இந்தியாவின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் 50 ஆயிரம் வீடுகளை அமைக்கும் திட்டம், சம்பூர் அனல் மின் நிலைய திட்டம் ஆகியன குறித்தும் இந்தச் சந்திப்பின் போது விவாதிக்கப்பட்டுள்ளது.

சம்பூர் அனல் மின்நிலைய கட்டுமானப் பணிகளை விரைவில் ஆரம்பிக்கவும் இந்தச் சந்திப்பில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

# வெடிபொருட்களின் பாகங்கள் கடத்தல் இரும்பு வியாபாரிகளின் சாதுரியம்

### ஓமந்தையில் இருவர் சிக்கினர்

(யாழ்ப்பாணம்)

வவுனியா - ஓமந்தைப் பகுதியில் பாவிக்கப்பட்ட வெடிபொருட்களின் பாகங்களை பழைய இரும்புப் பொருட்கள் எனும் போர்வையில் கடத்திய 2 நபர்கள் வவுனியா பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 17 ஆம் திகதியன்று ஓமந்தைப் பகுதியிலிருந்து வாகனமொன்றில் பாவிக்கப்பட்ட வெடிபொருட்களை வவுனியா நோக்கி ஏற்றிச்சென்ற வேளையே குறித்த இரண்டு பேரும் கைது செய்யப்பட்டதுடன், வாகனத்துடன் பாவிக்கப்பட்ட வெடிபொருட்களும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது. (பா)

# புலிகளின் பெயரால் கொள்ளை வவுனியாவில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

வவுனியா - ரம்பைக்குளம் பகுதியில் எல்.ரி.ரி.ஈ. என்று தெரிவித்து ரி.81 ரக தானியங்கி துப்பாக்கியைக் காட்டி வீடு ஒன்றில் கொள்ளையில் ஈடுபட்ட நபர் ஒருவர் வவுனியா பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தின் போது குறித்த நபர் வழங்கிய தகவலையடுத்து 4 கைக்குண்டுகள், ரி.81 ரக துப்பாக்கி ஒன்று, 6 மோட்டார் சைக்கிள்க்ள், ஒரு உழவு இயந்திரம் என்பன கைப்பற்றப்பட்டிருப்பதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். குறித்த நபர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (பா)

# முல்லைத்தீவு வைத்தியசாலையை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு ஆதார வைத்தியசாலை 13 கோடி ரூபா செலவில் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வேலைத்திடத்தின் கீழ் 70 மில்லியன் செலவில் சத்திர சிகிச்சை அறை ஒன்றும், மற்றும் சத்திரசிகிச்சை கட்டட தொகுதி ஒன்றும் அமைக்கப்படவுள்ளன.

35 மில்லியன் பெறுமதியில் விசேட வைத்தியர்களுக்கான குடியிருப்பு தொகுதி ஒன்றும் அமைக்கப்படவுள்ளது. அது போல் 25 மில்லியன் செலவில் வைத்தியர்களுக்கான 18 அறைகள் கொண்ட விடுதிகளும் அமைக்கப்படவுள்ளன.

# மாணவர்களை சீரழிப்பவர் குறித்து தகவல் தருமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வயது குறைந்தவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்யும் விற்பனை நிலையங்களின் தகவல்களை மதுவரித் திணைக்களத்திற்கு அறியத்தருமாறு யாழ். மதுவரி நிலையப் பொறுப்பதிகாரி என்.கிருபாகரன் கோரிக்கை விடுத்துள்ளார்.



வயது குறைந்தவர்களுக்கு விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்துவருகின்றோம். இருந்த போதும் பல வர்த்தக நிலையங்கள் சிறுவர்களுக்கு சிகரெட்டை விற்பனை செய்துவருகின்றனர் எனத்தெரிவித்த யாழ். மதுவரி நிலைய பொறுப்பதிகாரி என். கிருபாகரன் இந்த வாரம் வயது குறைந்தவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்த வர்த்த நிலைய உரிமையாளர்களுக்கு தலா 4 ஆயிரம் ரூபா குற்றப்பணம் அறவிடப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இளவயதினர் சிகரெட் பாவனையைக் கட்டுப்படுத்தி ஆரோக்கியமான சமூகம் ஒன்றை உருவாக்குவதற்கு பெற்றோர்கள், பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் மேலும் கேட்டுக்கொண்டார்.

## இலங்கையின்....

சென்றிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஈரான் ஜனாதிபதி மொஹமட் அஹமடி நிஜாட்டைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கையின் அபிவிருத்தி மற்றும் மின்சாரத் துறை சார்ந்த வளர்ச்சிப் பணிகளுக்கு தேவையான தொழில்நுட்ப மற்றும் ஏனைய உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாக ஈரான் ஜனாதிபதி இதன்போது ஜனாதிபதியிடம் உறுதியளித்துள்ளார்.

அத்துடன், தெஹ்ரானில் இடம்பெறவுள்ள அடுத்த அணிசேரா நாடுகளின் மாநாடு தொடர்பிலும் இவர்கள் இருவரும் ஆராய்ந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சந்திப்பில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், அமைச்சர்களான அனுர பிரியதர்சன யாப்பா, விமல் வீரவன்ச, சம்பிக்க ரணவக்க, மகிந்த சமரவீர, பிரதியமைச்சர் நிருபமா ராஜபக்ஷ, நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்த்தன மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

# தொழிற்சங்க நடவடிக்கை திட்டமிட்டபடி நடைபெறும்

## பல்கலை ஆசிரிய சங்க சம்மேளனம் அறிவிப்பு

பல்கலைக்கழக ஆசிரியர்கள் ஜுலை 4 ஆம் திகதி தொடக்கம் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவர் என்றும் தாம் எவ்விதமான பயமுறுத்தலுக்கும் அஞ்சி தமது தொழிற்சங்க நடவடிக்கையை கைவிடப் போவதில்லை எனவும் பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கங்களின் சம்மேளனம் கூறியுள்ளது.

தனக்கு அல்லது தனது குடும்பத்தினருக்கு விடுக்கப்படும் பயமுறுத்தலுக்கு தான் பணியப்போவதில்லை என நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் அச்சம்மேளனத்தின் தலைவர் பேராசிரியர் நிமல் ரஞ்சித் தேசிறி தெரிவித்தார். இவ்வார முற்பகுதியில் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் என தம்மை அடையாளப்படுத்திய இருவர், அவரின் 17 வயது மகள் பற்றிய தகவல்களை கேட்டுக்கொண்டு தேவசிறியின் அயலுக்கு இரண்டு தடவை வந்துள்ளதாக கூறப்படுகிறது.

முதல் தடவை வந்தபோது இவர்கள் தமது அடையாள அட்டைகளை காட்டிய பின் மகள் படிக்கும் பாடசாலை, பாடசாலை போகும் நேரம் பற்றி கேட்டதுடன் பல விடயங்கள் பற்றியும் விசாரித்தனர். இவரது வெளிநாட்டு பயணம் தொடர்பிலேயே இந்த தகவல்கள் தேவையாக உள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இரண்டாம் தடவை வந்த போது தனது மகள் பாதுகாப்பு அமைச்சில் ஒரு வேலைக்கு விண்ணப்பித்துள்ளதால் இந்த தகவல்கள் தமக்கு தேவைப்படுவதாக கூறியுள்ளனர். எனது மகள் மிகவும் வயது குறைந்தவர். இவர்கள் கூறிய காரணங்கள் யாவும் பொய்யானவை என அவர் மேலும் கூறினார்.

அயல்வீட்டவரின் மதில்மேல் பாய்ந்து தனது காரின் இலக்கத்தை பெற முடியுமா என கேட்டுள்ளனர்.

இப்படியான தகவலுக்காக மதில் பாய்ந்து வர வேண்டிய அவசியம் பாதுகாப்பு அமைச்சுக்கு கிடையாது. இவை எல்லாம் என்னை பயமுறுத்தும் நடவடிக்கைகள். அடுத்தமாதம் நாம் நடத்த திட்டமிட்டுள்ள தொழிற்சங்க நடவடிக்கையுடன் இந்த பயமுறுத்தல்கள் தொடர்பானவை என அவர் கூறினார்.

தனது மனைவிக்கு கடந்த வியாழக்கிழமை கிடைத்த கடிதத்தில் தான் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளதாகவும் அதனால் குடும்ப விடயங்களை கவனிப்பதில்லை எனவும் எழுதப்பட்டிருந்தது. தனக்கும் குடும்பத்தினருக்கும் பிரச்சினைகளை ஏற்படுத்தும் முயற்சியே இக்கடிதம் என அவர் கூறினார்.

இதையிட்டு அடுத்த நாள் உயர்கல்வி அமைச்சரிடம் முறையிட்ட போது அவர் இப்போது இந்த புதிய கதையை காவித்திரிகிறீர்களா என கேட்டார். அமைச்சர் தனது முறைப்பாட்டை கணக்கில் எடுக்கவில்லையென தேவசிறி கூறினார்.

அமைச்சருடனான பேச்சுவார்த்தையில் நாம் சம்பளங்களை முக்கியப்படுத்தி பேசவில்லை. நாம் ஆட்சேர்ப்பு, பல்கலைக்கழகத்தின் சுயாதீனம், பல்கலைக்கழகங்களை தனியார்மயமாக்கல் கல்வி மீதான பொதுச் செலவு என்பன பற்றியே கூடுதல் கவனம் செலுத்தினோம். இவ்விடயங்கள் ஆழமாக பேசப்பட வேண்டிய விடயங்கள். ஆயினும் அது நடப்பதில்லை என அவர் கூறினார்.

பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்க சம்மேளனத்தின் உப தலைவர் வண. தம்பர அமில தேரர் தமது சங்கம் வேலை நிறுத்தத்தை நடத்தியே தீரும். என்ன நடந்தாலும் எத்தனை மிரட்டல் வந்தாலும் எம்மை தடுக்க முடியாது என கூறினார்.

இதேவேளை, நாட்டை நாஸி முறைமையில் ஆளுவது நிறுத்தப்பட வேண்டும் நாம். இதை இப்போது நிறுத்த வேண்டும் இது இனி மேலும் நடக்க அனுமதிக்க கூடாது என இச்சம்மேளனத்தின் உபதலைவரான வண. அமில தேரர் கூறினார்.

# வீதிப் பாதுகாப்பு தொடர்பாக வட,கிழக்கில் தெளிவூட்டல்

வீதி பாதுகாப்பு தொடர்பாக வடக்கு கிழக்கு பிரதேசங்களில் தனியார் பஸ் உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்களுக்குத் தெளிவுபடுத்துவதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் பிரகாரம் கிளிநொச்சி நகரில் இந்த தெளிவுபடுத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் ரொஷான் குணவர்தன தெரிவித்துள்ளார்.

அனுமதிப்பத்திரம் இன்றி பஸ் போக்குவரத்தில் ஈடுபடுவதால் ஏற்படுகின்ற அவதான நிலை குறித்து இதன்போது விசேட கவனம் செலுத் தப்பட்டுள்ளது.

யுத்தத்தின் பின்னர் தற்போது நாட்டில் விபத்துக்களாலேயே கூடுதல் அனர்த்தங்கள் ஏற்படுவதை அவதானிக்க முடிவதாக ரொஷான் குணவர்தன தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள தெளிவுபடுத்தும் நடவடிக்கையின் மூலம் பஸ் உரிமையாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் மனித உயிர்களின் பெறுமதி குறித்தும் விபத்துக்களை தவிர்ப்பதற்கான யோசனைகள் பற்றியும் விளக்கமளிக்கப்படுவதாக ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

# டெங்கு நுளம்பின் பெருக்கம் குறைவடைந்ததாக தகவல்

டெங்கு நுளம்பின் பெருக்கம் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளும் குழுவினரால் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட 100 வீடுகளுள் 10 வீடுகளில் டெங்கு நுளம்புகளுடன் கூடிய இடங்கள் உள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

டெங்குக் காய்ச்சல் பரவுவதை கட்டுப்படுத்துவது குறித்து மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் ரஞ்சித் பட்டுவந்தூடவா கூறியுள்ளார்.

குறிப்பாக டெங்கு நுளம்பு பெருகக்கூடிய இடங்களை முற்றாக அழிக்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

எவ்வாறாயினும் சில வருடங்களுக்கு முன்னர் 100 வீடுகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது டெங்கு நுளம்பு பெருகும் சுமார் 50 வளாகங்கள் இனங்காணப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதனுடன் ஒப்பிடுகையில் தற்போது டெங்கு நுளம்பு பெருக்கம் ஓரளவு குறைவடைந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# அரச ஊழியர்களுக்கு மருத்துவக் காப்புறுதி

ஓய்வூதியம் பெறும் சகல அரசாங்க ஊழியர்களுக்கும் ஓய்வூதிய கொடுப்பனவுடன் இணைந்தவாறு மேலதிகமாக சுகாதார மருத்துவ காப்புறுதித் திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கான சட்ட மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவையின் அனுமதி கிடைத்ததும் இந்தத் திட்டம் துரிதமாக அமுல்படுத்தப்படும் என பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் பிரதி அமைச்சர் விஜய தஹநாயக்க தெரிவித்தார்.

2012 மே மாதம் வரையான விபரங்களின்படி 5 இலட்சத்து 4637 பேர் ஓய்வூதியம் பெறுகின்றனர். இவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வருடாந்தம் 108 பில்லியன் ரூபா செலவிடப்படுகிறது.

இதற்கு மேலதிகமாக சுகாதார மருத்துவக் காப்பறுதி திட்டமொன்றை ஓய்வூதியம் பெறுவோருக்கு வழங்கவும் திட்டமிட்டுள்ளோம்.

இது குறித்து மகிந்த சிந்தனையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை நடைமுறைப்படுத்துவதற்காக சட்ட மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி மாதாந்தம் 10 ஆயிரம் ரூபா வரையான காப்புறுதி வழங்கப்படும். அமைச்சரவை அனுமதி கிடைத்ததும் துரிதமாக அமுல்படுத்தப்படும் எனத் தெரிவித்தார்.

# முன்னாள் போராளிகளை சமூகத்தில் தனிமைப்படுத்த விரும்பவில்லை

## இராணுவம் தெரிவிப்பு

(கொழும்பு)

சமூகமயப்படுத்தப்பட்டுள்ள விடுதலைப்புலி இயக்கத்தின் முன்னாள் போராளிகள் சமூகத்தில் தனியான பிரிவினராக இனங்காணப்படுவதை தவிர்ப்பதற்கு பாதுகாப்புத் தரப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதனடிப்படையில் அவர்கள் தங்களின் கடந்தகால வாழ்க்கையை மறந்து சமூகத்தில் ஏனைய மக்களைப் போன்று இயல்பாக வாழ்வதற்குரிய சூழலை ஏற்படுத்தி வருவதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வனிகசூரிய தெரிவித்தார்.

சமூகமயப்படுத்தப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு ஏற்கனவே சர்வதேச தொண்டு நிறுவனமொன்றினால் வழங்கப்பட்டிருந்த அடையாள அட்டைகளை இராணுவத்தினர் மீளப் பெறுவதாக முன்வைக்கப்பட்டிருந்த குற்றச்சாட்டு தொடர்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எனினும் சமூகமயப்படுத்தப்பட்டவர்கள் இந்த நாட்டின் பிரஜைகள் என்ற ரீதியில் அவர்கள் தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்வதில் எவ்வித பிரச்சினையும் இல்லையெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தனியார் மயமாகும் ரயில் சேவைகள்

ரயில் சேவையை தனியார் மயப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ரயில் சேவையின் ஒன்றிணைந்த முன்னணியின் செயலாளர் சம்பத் ராஜித்த தெரிவித்துள்ளார்.

தனியார் நிறுவனங்களினால் ரயில் பெட்டிகளை பழுதுபார்க்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதனால் ரயில் திணைக்களத்திற்கு கிடைக்கும் வருமானம் தனியார் துறைக்கு செல்வதாகவும் இதனால் ரயில் திணைக்களம் பல நெருக்கடிகளை சந்தித்து வருகிறது.

இருந்த போதும், தனியார் நிறுவனங்கள், ரயில் பெட்டிகளை பழுபார்ப்பதுடன், மேலும் தனியாரின் 18 பெட்டிகளை இணைத்து சேவையில் ஈடுபடுத்தியுள்ளன.

இவ்வாறான தனியாரின் ரயில் பெட்டிகளின் பயன்பாடு எதிர்காலத்தில் முழு சேவையையுமே தனியார் துறைக்கு திசைதிருப்பும் சூழ்நிலை ஏற்படும் என அவர் குறிப்பிட்டார்.

ரயில் பெட்டிகளை பழுது பார்க்கும் தகுதி திணைக்களத்திற்கு இருந்த போதும், அதனை தனியாருக்கு விட்டு வைப்பது முறையற்றது என ரயில் சேவை ஒன்றிணைந்த முன்னணியின் செயலாளர் சம்பத் ராஜித்த தெரிவித்தார்.

இது தொடர்பாக ரயில் திணைக் களத்தின் பொதுமுகாமையாளர் பி.ஏ.பி. ஆரியரத்ன தெரிவிக்கையில்,

தனியார் துறையினர் ரயில் பெட்டிகளை திருத்தும் பணிகளை மேற்கொள்வது பிழையானது அல்ல என குறிப்பிட்டார்.

அவர்கள் திருத்தித் தரும் பெட்டிகள் சாதாரண தரத்தை கொண்ட பெட்டிகளை விட மேம்பட்டதாக இருக்கின்றன.

இந்த செயற்பாடு திணைக்களத்திற்கு இலகுவான செயற்பாடாகவே தாம் கருதுவதாகவும் குறிப்பிட்டார்.

# கொலன்னாவை நகர சபைத் தலைவரை கொலை செய்வதற்கு முயற்சி

தன்னைக் கடத்திச் செல்லும் முயற்சி தோல்வி கண்டதனையடுத்து தற்போது தன்னைக் கொலை செய்ய முயற்சிக்கின்றனர் என்றும் அவ்வாறு தான் கொலை செய்யப்படின் அதற்கான பொறுப்பை அரசாங்கமே ஏற்க வேண்டும் என கொலன்னாவை நகர சபைத் தலைவர் ரவீந்திர உதய சாந்த தெரிவித்துள்ளார்.

என்னைக் கடத்திச் செல்ல முயற்சித்த சம்பவத்தின் பின்னர் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவைச் சந்திக்க முயற்சித்தேன். இருப்பினும் அதற்கான சந்தர்ப்பம் எனக்கு இதுவரை வழங்கப்பட வில்லை. ஜனாதிபதியைச் சந்திக்க முயற்சித்தேன். அதுவும் சாத்தியப்படவில்லை. இந்த நிலையில் எனக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் இப்போது என்னைக் கொலை செய்யும் முயற்சிகள் இடம்பெறுவதாகத் தெரிகிறது.

உனது தம்பியைக் கடத்திச் சென்று கொலை செய்தமை போன்று உன்னையும் கொலை செய்ய முயற்சிகள் இடம்பெறுகின்றன. தனியாக வீதியில் செல்ல வேண்டாம் என பாதுகாப்புத்துறையில் உள்ள எனது நண்பர்கள் என்னை எச்சரிக்கை செய்து வருகின்றனர்.

1969 ஆம் ஆண்டிலிருந்து கொலன்னாவை தேர்தல் தொகுதியை வெற்றி கொள்ள முடியாமல் இருந்த நிலையில் அவ்வாறான நிலைமையை மாற்றி ஆளுந்தரப்பு இந்தத் தொகுதியை வெற்றி கொள்ளச் செய்தவன் நான். அப்படிப்பட்ட என்னையே இன்று கொலை செய்ய முயற்சிக்கின்றனர். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்

# ஹெரோயின் விற்றவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்ட அம்பாறையைச் சேர்ந்த நபர் ஒருவர் நேற்று முன்தினம் யாழ். பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபர் நேற்று யாழ்.நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

தற்போது குடநாட்டில் மீண்டும் போதைப் பொருள் விற்பனை இடம்பெற்று வருவதாக பலராலும் சுட்டிக் காட்டப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 யூன் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.